விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

இந்தியா முழுவதும் கடையடைப்பு பக்கம் 8

பாம்பு வடிவில் ரோபோ பக்கம் 9



இலங்கைப் பொருளாதாரம் பக்கம் 12

கொண்டாட்டத்தில் திண்டாட்டம் பக்கம் 23

பக்கங்கள் : 30

உதயன்

சுடர் 27
கதிர் 188

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 19 வெள்ளிக்கிழமை (01/06/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

திருமுறிகண்டியில் 4 ஆயிரம் ஏக்கரில் மிகப்பெரும் சிங்களக் குடியேற்றம்

'போர் வீட்டுத் திட்டம்' என்ற பெயரில் ஏற்பாடுகள்

முல்லைத்தீவு திருமுறிகண்டிப் பகுதியில் சுமார் 4 ஆயிரம் ஏக்கர் நிலம் சுவீகரிக்கப்பட்டுச் சிங்களக் குடியேற்றம் ஒன்றை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திருமுறிகண்டிப் பகுதிக்கும் கொக்காவில் பகுதிக்கும் இடைப்பட்ட கிழக்குப் பக்கமாகவுள்ள காட்டுப் பகுதியில் சுமார் 4 ஆயிரம் ஏக்கர் காடு அழிக்கப்பட்டு அந்தப் பகுதியில் ஆயிரம் வீடுகளை அமைக்கும் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி 4 ஆயிரம் ஏக்கர் நிலப்பகுதியிலும் 'போர் வீட்டுத் திட்டம்' என்ற பெயரில் சிங்களக் குடியேற்றம் ஒன்றினை ஏற்படுத்தும் வகையில் மேற்படி வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீட்டுத் திட்டம் அமைக்கும் பணியானது கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. அதே வேளை சகல வசதிகளும் கொண்ட இந்த குடியிருப்புப் பகுதியில் போரினால் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் அங்கவீனமுற்ற படையினரைக் குடியேற்றம் செய்ய வுள்ளதாக 04↘

வந்தேறு குடிகள் சிங்களவர்களே ஆதாரத்துடன் நிரூபிக்கத் தயார்

மேதானந்த தேரருக்கு விக்கிரமபாகு நேருக்கு நேர் சவால்



கொழும்பு, ஜூன் 1

"இலங்கைத் தீவு தமிழர் தேசம் என்பதை உரிய ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டுவேன். வரலாறு தெரிந்தால் – முதுகெலும்பிருந்தால் எல்லாவல மேதானந்த தேரர் என்னுடன் பகிரங்கமான விவாதமொன்றுக்கு வரவேண்டும்"

– இவ்வாறு கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன சவால் விடுத்துள்ளார்.

சிங்களவர்கள்தான் வந்தேறு குடிகள் என்பதையும், வடக்கு தமிழர்களின் பூர்வீகம் என்ற யதார்த்தபூர்வமான உண்மையை 04↘

இறுதிப் போரில் ஐ.நா. நிறுவனங்கள் செயற்பட்ட விதத்தை ஆராயக் குழு

பான் கீ மூன் அதிரடி நடவடிக்கை

நியூயோர்க், ஜூன் 1

இலங்கையின் இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனித உயிரிழப்புக்கள் மற்றும் இதர பாதிப்புக்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்புடைய தொண்டர் நிறுவனங்கள் ஆக்கபூர்வமாக செயற்பட்டுள்ளனவா என்பதை கண்டறிவதற்கு மூன்று பேர் கொண்ட ஐ.நா. நிபுணர் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்டுள்ள இந்தக் குழு நான்கு மாத காலத்துக்குள் தனது அறிக்கையை ஐ.நா. சபையிடம் கையளிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுயாதீன ஐ.நா. ஆலோசகர்களில் ஒருவரான சார்ள்ஸ் பெற்றி இந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கும் அதே சமயம் ஐ.நாவின் உயர்மட்ட அதிகாரிகளான பென் மெட்ஜ் கொடும்னி, லினா சின்ஹா ஆகியோர் இதன் இதர உறுப்பினர் 04↘

தமிழர்களை அழித்தொழிக்க மேதானந்த தேரர் முயற்சி

மாவை எம்.பி. கொதிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய பூமி அல்ல என்று கருத்துரைப்பதன் மூலம் வடக்கு - கிழக்கில் பௌத்த ஆதிக்கத்தை நிலைநிறுத்தித் தமிழ் மக்களை அழிக்கும் முயற்சியில் மேதானந்த தேரர் வெளிப்படையாகவே ஈடுபட்டு வருகிறார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா கண்டனம் வெளியிட்டுள்ளார். 04↘

மற்றொரு அகதிகள் படகும் ஆஸியைச் சென்றடைந்தது

அதில் 40 இலங்கையர்கள்

படகில் சென்ற அகதிகளில் ஒருவர் ஆஸ்திரேலிய கடலோரக் காவல் படையால் அழைத்துச்செல்லப்படுகிறார்.

கான்பரா,ஜூன்1

புகலிடம் தேடும் இலங்கையர்கள் 40 பேரைக் கொண்ட மற்றொரு படகும் ஆஸ்திரேலியாவின் கொக்கோஸ் தீவை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சென்றடைந்துள்ளது. இந்த வாரம் ஆஸ்திரேலியக் கடற்பரப்பை அடைந்த இரண்டாவது அகதிகள் படகு இதுவாகும்.

கடந்த திங்களன்று கொக்கோஸ் தீவுக்கு அருகே 04↘

பிரிட்டன் தூதரால் நாட்டுக்கு ஆபத்து

தேசப்பற்று இயக்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 1

தமது நாட்டு இராணுவ முகாம்களை இலங்கையில் நிர்மாணிப்பதற்குப் பிரிட்டன் அதிதீவிர முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது என எச்சரிக்கை விடுத்துள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், அரசு உஷார் அடையவேண்டிய தருணம் இதுவென்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி முதுகெலும்புடன் செயற்பட்டு 04↘

நேற்று நள்ளிரவு முதல் டீசல் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன்1

நேற்று நள்ளிரவு முதல் டீசலின் விலை 2 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை இலங்கையில் டீசல் விநியோகத்தை மேற்கொண்டுவரும் ஐ.ஓ.சி. நிறுவன உதவித் தலைவர் பத்ரிநாராயணா தெரிவித்துள்ளார்.

இறக்குமதி வரிகளின் அதிகரிப்புக் காரணமாக எரிபொருள்களின் விலைகளை உயர்த்துவதற்கு அரசிடம் ஐ.ஓ.சி. நிறுவனம் ஏற்கனவே அனுமதி கோரியிருந்தது. இந்தநிலையிலேயே டீசலின் விலை 2 04↘

பயங்கரவாதத்துக்கு உயிரூட்டுகிறார் பிரிட்டன் தூதுவர்

கொழும்பு,ஜூன் 1

பிரிட்டன் தூதுவர் ஜோன் ரன்கீன் பயங்கரவாதத்துக்குத் துணை போவதாக ஜாதிக ஹெல உறுமய கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

பயங்கரவாதத்தைத் தோற்கடித்த நாடொன்றின் மீது பிரிட்டன் 04↘

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இன்னும் 60,000 வீடுகள் தேவை

சிங்கப்பூர் அமைச்சரிடம் அரச அதிபர் சுட்டிக்காட்டினார்

யாழ்ப்பாணம், ஜூன்1

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களில் பலர் தொடர்ந்தும் நிரந்தர வீடுகள் இன்றித் தவிக்கிறார்கள். இன்னும் 60 ஆயிரம் வீடுகள் வரை தேவைப்படுகின்றன. அவர்களின் இந்த வீட்டுத் தேவையை நிறைவு செய்வதற்கு சிங்கப்பூர் அரசு உதவி அளிக்க வேண்டும் என யாழ். வந்த சிங்கப்பூர் வெளிவிவகார மற்றும் நீதித் துறை அமைச்சர் கே.சண்முகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறார்.

யாழ்ப்பாணத் 04↘

ஜனாதிபதியின் மேலதிக செயலராக இமெல்டா சுகுமார்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற திருமதி இமெல்டா சுகுமார், ஜனாதிபதியின் மேலதிக செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த மாதம் 10 ஆம் திகதி யாழ். மாவட்ட அரச அதிபராகக் கடமையாற்றிய திருமதி இமெல்டா சுகுமாருக்குத் திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டது. இதனடிப்படையில் கடந்த 16ஆம் திகதி இடமாற்றம் பெற்றுச் சென்ற அவர் ஜனாதிபதி செயலகத்தில் பொறுப்பெடுத்துக் கொண்டார்.

இந்த நிலையில் அவருக்கு ஜனாதிபதியின் மேலதிக செயலாளராகப் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. (த-5)

அன்புசால் வாசகர்களே!

பத்திரிகை அச்சிடும் காகிதத்தின் விலை உலகச் சந்தையில் அடிக்கடி உயர்ந்து வருகிறது. ஆகப்பிந்தி இப்போது மேலும் விலை உயர்த்தப்பட்டுள்ளது. அத்தோடு அச்சிடுதலுக்குரிய சகல உப பொருள்களின் செலவினங்களும் கடந்த பல மாதங்களாக அதிகரித்துள்ளன.

அதனால் உதயனின் விலையை இன்று (01.06.2012) வெள்ளிக்கிழமை முதல் 25 ரூபாவாக உயர்த்த வேண்டிய தவிர்க்க இயலாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். அந்த வகையில் உதயன் ஞாயிறு இதழின் விலையும் 03.06.2012 தொடக்கம் 30 ரூபாவாக அதிகரிக்கப்படுகின்றது.

பொருளாதாரத்திலும் பொலிவிலும் உங்கள் விருப்பங்களையும் தேவைகளையும் பூர்த்தி செய்வதில் உதயன் என்றும் முன்நிற்பான். உங்கள் மனநிறைவே அவனின் ஆத்ம திருப்தி.

-நிர்வாகத்தினர்.

இலங்கையுடன் தாய்லாந்து இரு ஒப்பந்தங்கள்

பாங்கொக்,ஜூன்1

இலங்கை- தாய்லாந்து நாட்டுத் தலைவர்கள் முன்னிலையில் இரு நாடுகளுக்கும் இடையிலான இரண்டு புரிந் 04↘

அரசுக்கு ஆதரவளிக்காத வெளிநாடுகளின் வைபவங்களில் பங்குகொள்ள வேண்டாம்

சுதந்திரக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி

கொழும்பு,ஜூன்1

அரசுக்கு ஆதரவு வழங்காத வெளிநாட்டுத் தூதரகங்களில் நடக்கும் வைபவங்களில் கலந்துகொள்ள வேண்டாம் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, சில தினங்களுக்கு முன்னர், நடந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளதாகச் சிங்கள இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் எந்தத் தூதரங்களின் வைபவங்களில் கலந்து கொள்ள வேண்டாம் என்பதை ஜனாதிபதி பெயர் குறிப்பிட்டு தெரிவிக்கவில்லை. எவ்வாறாயினும் ஜனாதிபதி அரசுக்கு எதிரான தூதரகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தியுள்ள போதிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், தூதரகங்களுடன் தொடர்புகளை வைத்துள்ளதுடன் தகவல்களையும் பரிமாறி வருகின்றனர்.



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு என்பது கட்சியின் தீர்மானங்களை எடுக்கும் முக்கிய அமைப்பாகும். ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து அரசுக்குத் தாவிய ஜோன்ஸ்ட்ன் பெர்னான்டோ போன்ற முக்கிய அமைச்சர்கள் கூட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுவில் அங்கம் வகிப்பதில்லை. ஆனால் பிரதியமைச்சர் கருணா அதில் அங்கம் வகிக்கின்றார்.

அதேவேளை மத்திய செயற்குழுக் கூட்டத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி, அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், அமெரிக்காவுக்குச் சென்று, நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு கண்டு வந்துள்ளதாகக் கூறியுள்ளார். அத்துடன் கிழக்கு மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் தேர்தலை நடத்த உள்ளதாகவும் ஜனாதிபதி இதன் போது கூறியுள்ளார். (த)

கொள்ளையர் மீது துப்பாக்கிச்சூடு

கொழும்பு,ஜூன்1

எம்பிலிபிட்டிய நகரில் அமைந்துள்ள வங்கியொன்றுக்கு அருகில் நேற்று வியாழக்கிழமை காலை, பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இருவர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குட்டிகல பிரதேசத்தில் அமைந்துள்ள பலகைத் தொழிற்சாலையொன்றில் கொள்ளையில் ஈடுபட முயற்சித்த கொள்ளையர்கள் மீதே பொலிஸார் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இதன் போது, இருவர் காயமடைந்துள்ளதுடன் மற்றொருவர் தப்பிச் சென்றுள்ளார்.

குறித்த கொள்ளையர்கள், தங்களது கொள்ளை முயற்சி பயனளிக்காத நிலையில், அங்கிருந்து கார் ஒன்றில் தப்பிச் செல்ல முயன்ற போதே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானதாகப் பொலிஸ் ஊடக பேச்சாளரும் பொலிஸ் அத்தியட்சருமான அஜித் ரோஹன தெரிவித்தார்.

சம்பவத்தில் காயமடைந்த இருவரும் எம்பிலிபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த கார் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சம்பவத்தின் போது தப்பிச் சென்றவர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார். (த)

எக்னெலிகொட வழக்கில்

சட்டமா அதிபரின் கோரிக்கை நீதிமன்றத்தினால் நிராகரிப்பு

கொழும்பு,ஜூன்1

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொடகாணாமல்போன வழக்கில் முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸைச் சாட்சியாளராக அழைக்க வேண்டும் என ஹோமாகம நீதவான் விடுத்துள்ள உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரி சட்ட மா அதிபர் விடுத்த கோரிக்கை மேன்முறையீட்டு நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட வெளிநாடு ஒன்றில் வசிப்பதாக மொஹான் பீரிஸ் அண்மையில் ஐ.நா. சித்திரவதை எதிர்ப்பு மாநாட்டில் தெரிவித்திருந்தார். அதனால் மொஹான் பீரிஸிடம் சாட்சிபெற வேண்டும் என எக்னெலிகொடவின் மனைவியான சந்தியா எக்னெலிகொட ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் கோரிக்கை விடுத்திருந்தார்.

அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டநீதிவான்முன்னாள் சட்ட மா அதிபர் மொஹான் பீரிஸை சாட்சியாளராக அழைக்குமாறு உத்தரவிட்டார்.

அந்த உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரி நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் கருத்து வெளியிட்ட சட்ட மா அதிபர், முன்னாள் சட்ட மா அதிபர் தொழில்துறை சார்பில் வெளியிட்ட கருத்தைச் சாட்சியாக எடுப்பது அவருக்கு விடுக்கப்படும் இடையூறு எனக் குறிப்பிட்டார்.

ஒரு நபரிடம் சாட்சி பெறுவது எவ்வாறு இடையூறாக இருக்க முடியும் எனக் கேள்வி எழுப்பிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ரஞ்சித் டி சில்வா, ஜனாதிபதியைத் தவிர்த்து ஏனைய அனைத்துப் பிரஜைகளையும் சாட்சியாளர்களாக அழைக்க நீதிவானுக்கு அதிகாரம் இருப்பதாகக் கூறினார்.

அதனால் நீதிவானின் கடமைகளில் தலையிட மேன்முறையீட்டு நீதிமன்றம் விரும்பவில்லை எனத் தெரிவித்த நீதிபதி, சட்ட மா அதிபரின் கோரிக்கையை நிராகரித்தார். மேலதிக விசாரணைகள் எதிர்வரும் ஜூன் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (த)

கட்டணத்தைக் குறைக்க பஸ் உரிமையாளர் தயார்

கொழும்பு,ஜூன்1

உலக சந்தையில் டீசல் விலை குறைந்துள்ளதாலும் மசகு எண்ணையின் விலை குறைந்து செல்வதாலும் பஸ் கட்டண மாற்றத்திற்குச் செல்ல முடியும் என அகில இலங்கை பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உலக சந்தையில் எரிபொருள் விலை குறைந்துள்ளதால் டீசல் விலையைக் குறைக்க அரசினால் முடியும் எனவும் அகில இலங்கை பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் பிரதான செயலாளர் அங்ஞன பிரியங்ஜித் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு டீசல் விலை குறைக்கப்பட்டால் தேசிய பஸ் கட்டண கொள்கைக்கு அமைய பஸ் கட்டணத்தை குறைக்க தாம் தயார் என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அங்ஞன பிரியங்ஜித் குறிப்பிட்டுள்ளார். (த)

நாணய நிதியத்திடம் இருந்து மேலும் ரூ. 500 மில்லியன் கடன்

கோருவதற்கு இலங்கை முடிவு

கொழும்பு,ஜூன்,1

சர்வதேச நாணய நிதியம் வழங்கிய இலங்கைக்கான அவசர ஏற்பாடு நிதியம் 2.6 மில்லியன் அமெரிக்க டொலர் முழுவதும் இலங்கைக்கு கிடைத்ததும் மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர் அவசர ஏற்பாட்டு நிதியை பெறுவதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுக்களை ஆரம்பிக்கப் போவதாக சர்வதேச நாணய ஒத்துழைப்புக்கான சிரேஷ்ட அமைச்சர் சரத் அமுனுகம கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் அவசர ஏற்பாடு நீதியான 500 மில்லியன் அமெரிக்க டொலர் அடுத்த மாதம் கிடைக்கும் இறுதி தவணைப் பணத்துடன் பூரணமாகிவிடும். சர்வதேச கடன் வழங்கும் அமைப்புகள் இலங்கையின் கடனை திருப்பிச் செலுத்தும் ஆற்றல் பற்றி நம்பிக்கை தெரிவித்ததனால் தான் இலங்கையால் முழுத் தொகையான 2.6 மில்லியன் டொலரை 8 தவணைகளில் தொடர்ந்து பெற முடிந்தது என அமைச்சர் கூறினார்.

பாதுகாப்பு ஏற்பாட்டு நீதியாகப் புதிதாக 500 மில்லியன் அமெரிக்க டொலருக்கான இலங்கையில் விண்ணப்பம் சர்வதேச நாணய நிதியத்தினால் சாதகமாக பரிசீலிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை என சிரேஷ்ட அமைச்சர் கூறினார்.

இலங்கை கடன்களை திருப்பிச் செலுத்த ஒருபோதும் தவறியதில்லை. சர்வதேச உதவி நிறுவனங்களுடன் நாடு என்ற நற்பெயர் இலங்கைக்கு உண்டு' என அமைச்சர் அமுனுகம கூறினார். (த)

பல்கலைக்கழக சூழலில் இராணுவம் பாதுகாப்பல்ல; அச்சுறுத்தல் தான்

கண்டிக்கிறார் சுரேஸ் எம்.பி

தாக்குதல்கள் எதிலும் சம்பந்தப்பட்ட எந்த வொரு குற்றவாளியும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. இதுவே இராணுவப் பிரிவின்மீதான ஐயத்தை அதிகப்படுத்துகிறது.

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். பல்கலைக்கழகத்தைச் சுற்றிலும் இராணுவத்தினரை நிறுத்தியிருப்பது எந்தவகையிலும் மாணவர்களுக்குப் பாதுகாப்பாக அமையாது மாறாக அச்சுறுத்தலாகவே இருக்கும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

போர் முடிவுற்றதன் பின்னர், யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழக மாணவர்களும், அரசியல் வாதிகளும் இனந்தெரியாத நபர்களால் தாக்கப்படுகின்ற சம்பவங்கள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன. இந்தத் தாக்குதல்கள் யாவும் ஒரேவகையானவையாகவும் இருக்கின்றன. அதுமாத்திரமில்லாமல் இத்தாக்குதல்களை இராணுவப் புலனாய்வுப்பிரிவினரே மேற்கொள்வதாக மாணவர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் ஐயப்பாடுகள் இருக்கின்றன. நடந்து முடிந்த தாக்குதல்கள் எதிலும் சம்பந்தப்பட்ட எந்த வொரு குற்றவாளியும் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. இதுவே இராணுவப் பிரிவின்மீதான ஐயத்தை அதிகப்படுத்துகிறது.

அண்மையில் யாழ் பல்கலைக்கழக மாணவர் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர்களினால் மிகக்கடுமையாகத் தாக்கப்பட்ட பின்னர், பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையில் மாணவர்அமைப்புக்கள்யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதியைச் சந்தித்து தமக்கு ஏற்படக்கூடிய உயிர் அச்சுறுத்தல்களை விளக்கி, அவர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும் என்று கோரினர். அச்சமயத்தில் பாதுகாப்புப் புலனாய்வுப் பிரிவினரே இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பதாகவும் அவர்கள் தெளிவுபடுத்தினர். ஆனால், யாழ்ப்பாணக் கட்டளைத் தளபதி புலனாய்வுப் பிரிவினரைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதை விடுத்து, இன்னும் மேலதிகமாக இராணுவத்தைக் குவிப்பதானது மாணவர்களுக்கு மேலதிக அச்சுறுத்தலே தவிர, பாதுகாப்பல்ல.

இராணுவத்தைப் பல்கலைக்கழகத்தைச் சுற்றிலும் குவிப்பது என்பது மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்க ஏற்றுக்கொள்ளப்பட முடியாத மாணவர்களை அச்சுறுத்தும் ஒரு நடவடிக்கையாகும். பாதுகாப்பு அமைச்சு இராணுவத்தினரை விலக்கி, பல்கலைக்கழக மாணவர்கள் எவ்வித அச்சுறுத்தலுமின்றி சுதந்திரமாகத் தமது கற்றல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு ஆவன செய்யவேண்டுமெனத்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொள்கின்றது -என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ங)

சிறந்த குடிவரவாளராக ஈழத் தமிழர்

அதி சிறந்த குடிவரவாளராக ஈழத் தமிழ்ப் பெண் ஒருவர் கனடாவில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்தத் தேர்வில் ரொறன்ரோவின் பிரபல சட்டத்தரணியும், தொழிலதிபருமான மெலானி டேவிட் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.25 சிறந்த குடிவரவாளர்களைத் தேர்வு செய்ய வென மேற்கொள்ளப்பட்ட இந்த தேர்வில் 75 பேர் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

இவர்களில் மறைந்த எதிர்க்கட்சித் தலைவரின் மனைவியும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஒலிவியா சோ, மற்றும் சிறந்த ஹிப் கொப் பாடகரும் ''வேவிங் பிளாக்'' பாடலின் மூலம் பிரபல்யமானவருமான ஹனான், எமி விருதிற்குத் தேர்வு செய்யப்பட்ட நடிகரான ரோன்யா லீ வில்லியம்ஸ், ஒலிம்பிக்ஸ் மல்யுத்த வீரரான டானியல் இகாளி ஆகியோருடன், ஈழத்தமிழர்களின் தலை சிறந்த சட்டத்தரணிகளில் ஒருவரும் ரொறன்ரோவில் வளர்ந்து வரும் தொழிலதிபருமான மெலானி டேவிட் அவர்களும் இந்த விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டனர். (த)

நிகழ்வுகள் இன்று

மாதாந்தக் கூட்டம்

சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்தக் கூட்டம் காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-14)

புதிர்ப் போட்டி

வடமாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் புதிர்ப்போட்டி நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரியில் வடமாகாண விளையாட்டு மற்றும் கல்வி துறை அலுவலக செயலாளர் எஸ். சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-14)

பரிசில் வழங்கல்

தென்மராட்சி பிரதேச சமுர்த்தி சமூக மன்றத்தின் வறிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி சிவன் கோயில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் இடம்பெறும். பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதேசத்தைச் சேர்ந்த சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்று உயர்தர வகுப்பில் இணைந்த மற்றும் உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதி பெற்ற 150 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.(ம-9)

குடாநாட்டு மக்களின் இயல்பு வாழ்வு முன்னேறி வருவது போல் தெரிகிறது

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். குடாநாட்டில் மக்களின் இயல்பு வாழ்வு முன்னேறி வருவது போல் தெரிகிறது என்று தெரிவித்தார் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சரும் நிதி அமைச்சருமான கே.சண்முகம்.



அமைச்சர் நூலகத்தைப் பார்வையிட்டபோது....

யாழ்ப்பாணத்துக்கு உத்தியோகபூர்வமாக பயணம் ஒன்றை மேற்கொண்ட சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் மற்றும் இலங்கைக்கான சிங்கப்பூர் ஸ்தானிகர் லாலே சூங் அடங்கிய 15 பேர் கொண்ட குழு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ்.பொது நூலகத்துக்கு வருகை தந்து பார்வையிட்டனர். பின்பு ஊடகவியலாளரிடம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தாவது:-

கடந்த 30 ஆண்டு காலமாக இடம்பெற்ற சம்பவங்கள் அனைத்தும் பத்திரிகை வாயிலாக நன்கு அறிந்திருந்தேன். தற்கால நிலைமைபற்றி அறிவதற்காகவே இங்கு ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு வந்து அனைத்து தரப்பினரிடமும் சந்திப்புகளை ஏற்படுத்தியுள்ளேன்.

குறுகிய காலத்தில் பரவலாக கண்ணோட்டத்துடன் விடயங்களை முழுமையாக கண்டுகொள்வது கடினமாக உள்ளது. இருந்த போதிலும் போர்ச் சூழலிலும் விட தற்போது அமைதி நிலை நிலவுகிறது. மக்களின் வாழ்வும் முன்னேறி வருவது போல் தெரிகிறது.

இப்பொழுது நூலகத்தின் சிறுவர் பகுதி சிங்கப்பூர் அமைச்சால் மறு சீர் அமைக்கப்பட்டுள்ளது. அதனைப் பார்வையிடுவதற்காகவே வருகை தந்தேன். நூலகத்துக்கான மேலதிக உதவிகளும் எம்மால் செய்ய முடியும்.- என்றார்.

யாழ். பொது நூலகத்தின் செயற்பாடுகள் யாவும் கணினி மயப்படுத்தப்பட வேண்டும் என்ற யாழ். பொது நூலகரின் வேண்டுகோளுக்குஅமைய அனைத்து பகுதிகளும் கணினி மயமாகுவதற்கு தேசிய நூலகத்துடன் தொடர்பு கொண்டு உதவிகளை வழங்குவதாகவும், ஊழியர்களுக்கு தேவையான பயிற்சிகள், உபகரணங்கள் ஆகியவற்றை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

தமிழ் மொழிக்கான சஞ்சிகைகள், நூல்கள், பத்திரிகைகள் என்பவற்றை தனியாக ஒரு பகுதியில் பேணுவதற்காகவும் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-13-7)

அனுமதிக்கு மாறாகச் செயற்பட்ட மதுபான நிலையங்கள் மாட்டின

தென்மராட்சி,ஜூன் 01

மதுவரி திணைக்களத்தில் பெறப்பட்ட உரிமத்துக்கு முரணாக செயற்பட்ட தென்மராட்சி பிரதேசத்தில் இயங்கும் மதுபான நிலையங்கள் கொழும்பிலிருந்து வந்த விசேட பரிசோதனைக் குழுவினர் திணைக்களத்தில் உரிமப் பத்திரம் பெற்ற மதுபான விற்பனை நிலையங்கள், விடுதிகள் மற்றும் இடங்களில் பரிசோதனைகளை நடாத்தினர்.

இந்த நிலையில் வழங்கப்பட்ட உரிமப் பத்திர விதிமுறைகளுக்கு முரணாக செயற்பட்ட தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த ஐந்து விற்பனை நிலையங்களை இனங்கண்டு கொண்டனர். இதனையடுத்து இந்த நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்க வுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்த விசேட பரிசோதனைக் குழுவினர் யாழ். மாவட்டத்தின் பல இடங்களில் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள், மற்றும் விடுதிகள் போன்றவற்றில் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

யாழ். இந்துக் கல்லூரியின் சர்வதேச, தேசிய, மாவட்ட வெற்றியாளர்கள்

பழைய மாணவர் சங்கத்தால் பட்டயம், பொற்கிழி வழங்கிக் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

''தேசிய, சர்வதேச மட்டங்களிலும் மாவட்ட மட்டத்திலும் வெற்றிகளைக் குவித்த பாடசாலை மாணவர்களைக் கௌரவிக்கும் முன்மாதிரியான செயல் திட்டத்தை யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆரம்பித்து வைத்திருப்பது மகிழ்ச்சிக்குரியது.

இன்று இந்த அழகான நிகழ்வில் பாராட்டுக்களையும் கௌரவத்தையும் பெறும் பாடசாலை மாணவர்கள் நாளை பழைய மாணவர்களாகும் போது அன்று பாடசாலையில் கற்று இப்படி வெற்றிகளைப் பெறும் மாணவர்களை ஊக்குவிப்பதில் முன்னிற்க வேண்டும்''

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.கணேசராசா.

சர்வதேச அரங்கிலும் தேசிய, மாவட்ட மட்டத்திலும் வெற்றிகளைக் குவித்த மாணவர்களுக்கு இராப்போசன விருந்து வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வை யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கடந்த திங்கட்கிழமை நடத்தியது. யாழ். நகர், சிவகுரு நாதன் வீதியிலுள்ள 'உதயன் விருந்தினர் விடுதியில் நடந்த நிகழ்வில்' 44 மாணவர்கள் அன்றைய தினம் இந்த உயர் கௌரவத்தை பெற்றுக் கொண்டனர்.

பட்டயமும் பொற்கிழியும்

நிகழ்வில், சர்வதேச ரீதியில் வெற்றி வாகை சூடிய மாணவர்களுக்கு 'இந்துவின் சாதனையாளன்' என்ற பட்டயமும் 10,000 ரூபா பொற்கிழியும் தேசிய ரீதியில் வெற்றி வாகை சூடிய மாணவர்களுக்கு 'இந்துவின் வாகையாளன்' என்ற பட்டயமும் 5,000 ரூபா பொற்கிழியும் மாவட்ட மட்டத்தில் வெற்றி வாகை சூடிய மாணவர்களுக்கு 'இந்துவின் வீரன்' பட்டயமும் ரூபா 2,000 பொற்கிழியும் வழங்கப்பட்டன.



பழைய மாணவர் சங்கப் பதில் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவனிடம் இருந்து பட்டத்தையும் பொற்கிழியையும் பெற்றுக் கொள்கிறார்கள் வித்தியாசாகர் மற்றும் செந்தூரன்.

44 பேருக்கு கௌரவம்

தென்னாபிரிக்காவில் நடந்த சர்வதேச கணித - விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்ற சு.வித்தியாசாகர் 'இந்துவின் சாதனையாளன்' கௌரவமும் தேசிய மெய்வன்மைப் போட்டியின் 16 வயதுப் பிரிவு உயரம் பாய்தலில் 192 சென்றி மீற்றரைத் தாண்டி சாதனை படைத்த இ.செந்தூரன், தேசிய ஆங்கில கட்டுரையாக்கப் போட்டியில் முதலிடம் வென்ற பி.குணவரன், தேசிய கணித - விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் வென்ற ஆ.ஹரிஷங்கர் (இவரும் தென்னாபிரிக்காவில் நடந்த சர்வதேசப் போட்டிக்குச் சென்று நான்காவது இடத்தைப் பெற்றிருந்தார். இலங்கையிலிருந்து சர்வதேச மட்டத்துக்குச் சென்ற ஐவரில் இருவர் யாழ். இந்துக் கல்லூரி மாணவர்கள்), 2010ஆம் ஆண்டு நடந்த தேசிய கனிஷ்ட மெய்வன்மைப் போட்டியின் நீளம் பாய்தலில் முதலிடம் பெற்ற வ.ஜஸ்மினன் ஆகியோருக்கு 'இந்துவின் வாகையாளன்' கௌரவமும் 19 வயதுப் பிரிவு மாவட்ட சதுரங்கப் போட்டியில் முதலிடம் வென்ற கல்லூரி அணி வீரர்கள் 7 பேருக்கும் 19 வயதுப் பிரிவு மாவட்ட கூடைப் பந்தாட்டத்தில் முதலிடம் பெற்ற அணி வீரர்கள் 15 பேருக்கும் 'இந்துவின் வீரன்' கௌரவமும் வழங்கப்பட்டன. 17 வயதுப் பிரிவு தேசிய கிரிக்கெட் போட்டி வரை முன்னேறிய அணி வீரர்கள் 15 பேரும் விருந்துக்கு அழைக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் தொடர்ந்து பேசிய பாடசாலை அதிபர் கணேசராசா, சர்வதேச ஒலிம்பியாட் போட்டிக்கு மாணவர்களை அனுப்புவதில் தாம் எதிர்கொண்ட நிதிச் சிக்கல்களையும் தெரியப்படுத்தினார்.

செந்தூரன் அமெரிக்காவுக்கு

''எமது மாணவர்கள் தேசிய, சர்வதேச மட்டங்களிலும் பல சாதனைகளைப் படைத்து வருகின்றனர். இவர்களுக்குப் போதிய வசதி வாய்ப்புக்களைச் செய்துதர புலத்திலும் தாயகத்திலும் உள்ள எமது பழைய மாணவர்கள் ஊக்கமாக இருக்கின்றனர். உயரம் பாய்தலில் சாதனை படைத்த செந்தூரனுக்கு மேலதிக பயிற்சிகளைக் கொடுத்து சர்வதேச போட்டிகளில் பங்குபற்ற வைக்க வேண்டும். அதற்காக, சாதாரண தரப் பரீட்சை முடிந்ததும் அவனை அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்க உள்ளோம்'' என்றார் அதிபர்.

நிகழ்வில் உரையாற்றிய கல்லூரி பழைய மாணவர் சங்க பதில் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், ''கொழும்பில் இத்தகைய நிகழ்வுகள் நடக்கின்ற போதிலும் யாழ்ப்பாணத்தில் அவை குறைவாகவே காணப்படுகின்றன. இந்த வருடம் எமது சங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்படும் இந்த நிகழ்வு இனிவரும் காலங்களில் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படவேண்டும்'' -என்றார். (உ-16)

வந்தேறு குடிகள் சிங்களவர்களே ஆதாரத்துடன் நிரூபிக்கத் தயார்

யும் தேரருக்குக் கற்பிப்பதற்கு நான் தயாராகவே உள்ளேன் என்றும் அவர் தெரிவித்தார்.

வந்தேறுகுடிகளான தமிழ்மக்கள் எப்படி வடக்கிற்கு உரிமை கோருவது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரர் காரசாரமான முறையில் கருத்துத் தெரிவித்துள்ளமை தொடர்பில் கேட்டபோதே விக்கிரமபாகு கருணாரட்ன மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

எல்லாவல மேதானந்த தேரர் ஒரு கல்விமானாக இருந்துகொண்டும், வரலாறு தெரிந்தும் சிங்கள மக்களைக் குஷிப்படுத்துவதற்கு போலிக் கதைகளைக் கட்டவிழ்த்து விட்டு இதுதான் வரலாறு - இதிகாசம் என்றும் சுட்டிக்காட்டுகின்றார்.

இலங்கைத் தீவு தமிழர் தேசமாகும். விஜய மன்னன் இங்கு வந்த பின்னர்தான் பௌத்த மதம் நாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. அதற்கு முன்னர் இலங்கையைத் தமிழ் மன்னர்கள் தான் ஆட்சி செய்தனர். இராவணன், குவேனி என வரலாற்றுப் பட்டியலை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.

இந்தியாவில் இருந்து வந்தவர்கள்தான் சிங்களவர்கள். பாகு என்ற பெயர் பங்களாதேசத்துக்குரியது. பராக்கிரமபாகு, விக்கிரமபாகு என சிங்களவர்களுக்குப் பெயர்கள் இருக்கின்றன. இது இந்தியாவில் இருந்து வந்தவர்கள்தான் சிங்களவர்கள் என்பதைப் பறைசாற்றுகின்றது.

அத்துடன், இலங்கை தமிழர்களின் பூர்வீகம்தான் என்பதை உறுதிப்படுத்துவதற்கு மேலும் பல ஆதாரங்கள் உள்ளன. விஜய மன்னன் இங்கு வந்துதான் தமிழர்களின் பிரதேசங்களை ஆக்கிரமித்துக்கொண்டார்.

பௌத்த மதம் கூட இந்தியாவில் இருந்துதான் வந்தது. எனவே, வடக்கு மட்டுமல்ல, இலங்கையின் பூர்வீகம் தமிழ் தான் என்பது தெளிவாகத் தென்படுகின்றது.

மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் இந்தியாவில் இருந்து வந்திருந்தாலும் அவர்கள் நூறு, இருநூறுக்கும் மேற்பட்ட வருடங்கள் இங்குதான் வாழ்கின்றனர் என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

வடக்கு தமிழர் பிரதேசம் அல்ல என்றும், தமிழர்கள் வந்தேறு குடிகள் என்றும் இனவாதம் பேசித்திரியும் எல்லாவல மேதானந்த தேரர் இது விடயம் தொடர்பில் விவாதம் நடத்துவதற்குத் தயாரா?அவர் பகிரங்க விவாதத்துக்கு வரவேண்டும் என நான் சவால் விடுக்கிறேன். - இப்படித் தெரிவித்தார் நவசமசமாஜக்கட்சியின் பொதுச் செயலாளரும், தெஹிவளை - கல்கிஸை மாநகரசபை உறுபினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன.

நேற்று நள்ளிரவு முதல் டீசல் விலை அதிகரிப்பு

ரூபாவால் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இதுவரையும் 115 ரூபாவாக இருந்த ஓட்டோ டீசலின் விலை 117 ரூபாவாக அதிகரிக்கப் பட்டுள்ளது. இதேவேளை சுப்பர் டீசலின் விலையும் ஒரு ரூபாவால் அதிகரித்துள்ளது. 118 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த சுப்பர் டீசலின் விலை 119 ரூபாவாக நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. டீசலின் விலை உயர்ந்ததைத் தொடர்ந்து பெற்றோல், மண்ணெண்ணெய் போன்ற எரிபொருள்களின் விலையும் உயரலாம் என்றும், பஸ் கட்டணங்கள் அதிகரிக் கப்படக்கூடும் என்றும் பொது மக்கள் தரப்பில் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (ங-15)

பயங்கரவாதத்துக்கு உயிரூட்டுகிறார் பிரிட்டன் தூதுவர்

தேவையற்ற அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஒமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான இராஜதந்திர நடவடிக்கைகளுக்கு எதிராக ஒட்டுமொத்த நாடே அணி திரளவேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

மீண்டும் பயங்கரவாதத்துக்கு உயிரூட்டக் கூடிய வகையிலான முயற்சிகளைப் பிரிட்டன் தூதுவர் மேற்கொண்டு வருகின்றார் என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடக்கில் இராணுவ முகாம்களை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அண்மையில் பிரிட்டன் தூதுவர் ஜோன் ரன்கீன் வெளியிட்டிருந்த கருத்துக்குப் பதிலளிக் கும்போதே சோபித தேரர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.(த)

மற்றொரு அகதிகள் படகும் ஆஸியைச் சென்றடைந்தது

இடைமறிக்கப்பட்ட படகில் இலங்கையைச் சேர்ந்த 88 அகதிகள் இருந்தனர்.

கொக்கோஸ் தீவானது ஆஸ்திரேலியாவுக்கும் இலங்கைக்கும் மத்தியில் இரு நாடுகளிலிருந்தும் 3000 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. 27 தீவுகளைக் கொண்ட இந்தத் தீவுக் கூட்டத்தில் பெரும்பாலும் மனிதர்கள் வசிப்பதில்லை.

படகில் சென்றவர்கள் அங்கு கொக்கோஸ் கழகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வருகையினால் இந்தத் தீவின் தொண்டர்கள், பல்பொருள் அங்காடிகள், சமூக சேவகர்கள், கழங்கள் மீதான அழுத்தம் அதிகரிக்கும் என தன்னை இனம்காட்ட விரும்பாத உள்ளூர்வாசியொருவர் தெரிவித்துள்ளார்.

திடீர் சனத் தொகை அதிகரிப்புக்கு ஏற்ப, இந்தத் தீவில் போதிய விநியோகங்கள், வளங்கள் இல்லை யென உள்ளூர்வாசிகள் தெரிவித்துள்ளனர்.

தொண்டர்கள் தமது ஏனைய தொழில்களை விட்டு விட்டு, இவர்களுக்குத் தொண்டாற்ற வேண்டியிருக்கும் என அவர் கூறியுள்ளார்.

கடந்த செவ்வாய்க் கிழமை படகில் சென்றவர்களைத் தவிர, இந்த வருடம் ஆஸ்திரேலியாவை அடைந்த புகலிடம் தேடுவோரின் எண்ணிக்கை 576 ஆக அதிகரித்துள்ளது. கடந்த வருடம் 211இலங்கையர்கள் புகலிடம் தேடி ஆஸ்திரேலியாவுக்குச் சென்றனர்.

அகதிகளின் வருகை அதிகரிப்பானது இலங்கையில் தமிழர்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறையை பிரதிபலிக்கிறது என ஆஸ்திரேலிய தமிழர் காங்கிரஸ் பேச்சாளர் சாம் பெரி கூறியுள்ளார்.

'எமது வாசற்படியிலுள்ள மனிதாபிமானப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என ஆஸ்திரேலியா விரும்புகிறது. இலங்கை மீது ராஜதந்திர அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என நாம் விரும்புகிறோம்.

மென்மையான அணுகுமுறை செயற்பட மாட்டாது. இலங்கை மீது ஆஸ்திரேலியா ராஜதந்திர அழுத்தத்தை பிரயோகிக்க வேண்டிய தருணம் இது' என அவர் கூறினார்.(த)

இறுதிப் போரில் ஐ.நா. நிறுவனங்கள் செயற்பட்ட விதத்தை ஆராயக் குழு

களாவர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர் என்றும், அந்த சந்தர்ப்பத்தில் இலங்கையில் செயற்பட்ட ஐ.நா. தொண்டு நிறுவனங்கள் ஆக்கபூர்வமான முறையில் செயற்பட வில்லையென சர்வதேச மட்டத்தில் பல்வேறு தரப்புக்களில் எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்தே இந்த குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை மாதத்திற்குப் பின்னர் இந்தக் குழுவானது, அறிக்கையை சமர்ப்பிக்கும் என தெரிவிக்கப்பட்டபோதிலும் முக்கிய மான விவகாரம் ஒன்றை ஆராய்வதற்கான கால அவகாசம் இந்த குழுவிற்கு இல்லையென சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதனால், இந்த குழு தனது இலக்கை சரியான முறையில் அடையுமா என்பது குறித்தும் மேற்படி ஆர்வலர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இன்னும் 60,000 வீடுகள் தேவை

துக்கு நேற்றுக் காலை 10.30 மணியளவில் வந்தடைந்த வெளிவிவகார அமைச்சரை, அரச அதிபர் பலாலியில் வைத்து வரவேற்றார். அதன் பின்னர் நண்பகல் யாழ். பொது நூலகத்தைப் பார்வையிட்ட அமைச்சர் பின்னர், யாழ். மாநகரசபைக்குச் சென்றார்.

தொடர்ந்து அரச அதிபருடன், மதியபோசன விருந்தில் அவர் கலந்து கொண்டார். இதன் பின்னர் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட தெல்லிப்பழைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுதந்திரபுரம் பகுதிக்கு அமைச்சர் சென்றார்.

இங்கு 5 நிமிடங்கள் வரையிலே செலவிட்ட போதும், அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடினார். இதன் போது மக்களின் வாழ்வாதாரத் தேவைகள் குறித்தும் அவர் கேட்டறிந்து கொண்டார். அத்துடன் சுதந்திரபுரத்துக்கு அருகில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்டு வரும் நிரந்தரப் பாதுகாப்பு வேலிகளையும் பொதுமக்கள் அமைச்சரிடம் காட்டினர்.

இதேவேளை மக்களின் வீட்டுத் தேவைகள் எவ்வளவு தூரம் நிறைவு செய்யப் பட்டுள்ளன என்பது தொடர்பிலும் சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கேட்டுத் தெரிந்து கொண்டார். இதன் போது யாழ். மாவட்டத்தில் இன்னும் 60 ஆயிரம் வீடுகள் வரை மீளக்குடியமர்ந்த மக்களுக்குத் தேவைப்படுவதாக யாழ். அரச அதிபர் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியதுடன் அதற்கு சிங்கப்பூர் அரசு உதவ வேண்டும் என வும் கோரிக்கை விடுத்தார்.

(த-5)

திருமுறிகண்டியில் 4 ஆயிரம் ஏக்கரில் மிகப்பெரும் சிங்களக் குடியேற்றம்

வும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீடுகளை அமைப்பதற்குரிய கட்டுமானப் பொருள்கள் கடந்த ஆண்டு திருமுறிகண்டி முதல் கொக்காவில் வரையான ஏ-9 வீதியின் இரு மருங்கிலும் இறக்கப் பட்டிருந்தன. அதைவிட 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னிலங்கையைச் சேர்ந்த தொழிலாளர்கள் முறிகண்டிப் பகுதியில் தங்கவைக்கப்பட்டு வேலைகள் நடைபெறுகின்றன. குறித்த பிரதேசத்தில் வீதிகள், மின்சாரவசதி, குடிதண்ணீர் வசதி என்பனவும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேற்படி ஆயிரம் சிங்களக் குடும்பங்களைப் போரால் பாதிக்கப்பட்டவர்கள் என்ற போர்வையில் குடியேற்றுவதற்கான சகல நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் திருமுறிகண்டியைச் சேர்ந்த இடம்பெயர்ந்த சுமார் 126 குடும்பங்கள் இன்றுவரையும் அவர்களது சொந்தக் காணிகளில் மீளக் குடியமர அனுமதிக்கப்படாமல் 46 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களிலும் ஏனைய 80 வரையான குடும்பங்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியில் உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

(க-6)

இலங்கையுடன் தாய்லாந்து இரு ஒப்பந்தங்கள்

துணர்வு ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டன.

இரு நாட்டு வெளிவிவகார அமைச்சுகளுக்கு இடையில் அரசியல் கலந்துரையாடல் தொடர்பான ஒப்பந்தமும், குற்றச் செயல்களைப் பொறுத்தவரை அந்நியோன்னிய சட்டரீதியான ஒத்துழைப்பை வெளிப்படுத்தும் இரு தரப்பு உறவை வலுவூட்டும் ஒப்பந்தமுமே கச்சாத்திடப்பட்டுள்ளன.

இலங்கை ஜனாதிபதி, தாய்லாந்து பிரதமர் ஆகியோர் முன்னிலையில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகின.

இலங்கையின் விவசாயம், கடற்றொழில், கல்வித் துறை மேம்பாட்டுக்காகத் தாய்லாந்து பூரண ஒத்துழைப்பை வழங்கும் என்று தாய்லாந்தின் பிரதமர் யின்லக் சினவத்ரா இதன் போது தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளின் பௌத்த மத கலாசாரச் செயற்பாடுகளில் ஒன்றிணைந்து செயற்படுவதன் அவசியத்தையும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தாய்லாந்துக்கு நன்றி தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை ஒழித்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதில் அரசு அவதானம் கொண்டுள்ளது. இந்நிலையில் இலங்கையில் முதலீடு செய்ய முதலீட்டாளர்கள் முன்வர வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தமிழர்களை அழித்தொழிக்க மேதானந்த தேரர் முயற்சி

தேரரின் கருத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் விரைவில் ஆதாரபூர்வமாக பதிலளிக்க உள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு தமிழரின் பூமியல்ல அவ்வாறு உரிமை கோருவதற்கு தமிழர்களுக்கு எந்தவிதமான சான்றோ அல்லது உரிமையோ கிடையாது என ஜாதிய ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவெல மேதானந்த தேரர் தெரிவித்த கருத்துத் குறித்து தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

மேதானந்த தேரர் முதலில் வரலாறு படிக்க வேண்டும். அவருக்கு இலங்கையின் வரலாறு தொடர்பாக முழுமையான அறிவு கிடையாது. வரலாறு தெரியாமல் உளறுகிறார் தேரர்.

வடக்கு கிழக்குப் பகுதியானது தமிழர்களின் பூர்வீக வாழ்விடம். இதனை காலத்திற்கு காலம் எழுந்த வரலாற்று நூல்கள் எடுத்துக் கூறுகின்றன. இதனை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது.

தேரரின் கருத்துக்குப் பதிலளிக்க வேண்டிய கடமை வரலாற்று ஆசிரியர்களுக்கு உள்ளது. எனவே, இவிடயம் தொடர்பாக விரைந்து வரலாற்று ஆசிரியர்கள் பதிலளிக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

கே.எம்.டி. சில்வா என்னும் சிங்கள வரலாற்று ஆசிரியர் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதி தமிழர் செறிந்து வாழும் பகுதி என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆரம்பகால அரசமைப்புச் சீர்திருத்த சட்ட மூலங்களின் ஆதரங்களிலே தமிழர்களின் பாரம்பரிய பூமி வடக்குக் கிழக்குப் பகுதி என அறிக்கை சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

இலங்கையின் அரசமைப்பில் வடக்குக் கிழக்கு தமிழ் மக்களின் செறிந்த குடிப்பரம்பலுடன் காணப்படுவதாகக் கூறுகின்றது.

இதனை எல்லாம் அறியாத தேரர் இவ்வாறான கருத்துக்களை கூறி மஹிந்த அரசின் துணையுடன் வடக்குக் கிழக்கில் பௌத்த ஆதிக்கத்தை நிலைநிறுத்தி தமிழ் மக்களை அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றும் மாவை தெரிவித்துள்ளார்.

பிரிட்டன் தூதரால் நாட்டுக்கு ஆபத்து

பிரிட்டிஷ் தூது வரை நாட்டை விட்டு விரட்டியடிக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

அரசு, வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ரன்கின் வலியுறுத்தியுள்ளமை தொடர்பில் கருத்து வெளியிடும்போதே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஏனைய நாடுகளில் இராணுவ முகாம்களை அமைத்து தனது நாட்டு ஆதிக்கத்தை கோலோச்சுவதற்கு முயற்சிக்கும் எந்தவொரு பிரிட்டிஷ் பிரஜைக்கும் எமது நாட்டு இராணுவ முகாம்களைப் பற்றிப் பேசும் அருகதை கிடையாது.

வடக்கிலுள்ள இராணுவ முகாம்களை அகற்றச் சொல்வதற்கு பிரிட்டிஷ் தூதுவர் யார்? அவருக்கு என்ன உரிமை இருக்கின்றது?

வடக்குப் பிரதேசத்தில் தமது நாட்டு இராணுவ முகாம்களை அமைக்கும் நோக்கிலேயே எமது நாட்டு இராணுவ முகாம்களை அகற்றுமாறு பிரிட்டிஷ் தூதுவர் வலியுறுத்துகின்றார்.

இவ்வாறானவர்கள் எமது நாட்டுக்கு ஆபத்தாகவே திகழ்வர். எனவே, பிரிட்டிஷ் தூதுவர் ஜோன் ரன்கினை அரசு நாட்டைவிட்டு விரட்டியடிக்க வேண்டும்.

அன்று பிரிட்டிஷ் தூதுவர் டேவிட் கிளேஸ்ட்ஸ்ரோனை பிரேமதாஸ நாட்டைவிட்டு விரட்டியது போன்று, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முதுகெலும்புடன் செயற்பட்டு ஜோன் ரங்கினை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும்.

அரசுதனது இரு கண்களையும் விழித்துக்கொண்டு உஷாராக வேண்டிய தருணம் இது - என்றார் அவர்.



பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

மஹிந்தவுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுக்க ஜூன் 3 விளையாட்டுவிழா ரத்து

பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு அறிவிப்பு

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப் பதற்காக ஜூன் 3 விளையாட்டு விழா ரத்து செய்யப்பட்டுள்ளதாக பிரிட்டன் தமிழர் ஒருங்கிணைப் புக் குழு அறிவித்துள்ளது.

இதுகுறித்து பிரிட்டன் தமிழர் அவை விடுத்துள்ள அறிக் கையில் தெரிவித்ததாவது:-

விடுதலைப் போராட்டம் வெறுமனே சிங்களப் பேரின வாதப் படைகளுக்கு எதிரான எதிர்ப்பு என்பதுடன் மட்டும் நின்று விடாமல் தமிழீழ மக் களுக்குத் தேவையான அனைத்து கட்டமைப்புகளையும் அதனு டான செற்பாடுகளையும் மிக அற்புதமாகவும் ஆழமான சிந் தனையுடனும் வடிவமைத் திருந்தது.

அந்தவகையலேயே புலம் பெயர்தேசங்களிலும் விளையாட்டு நிகழ்வுகளையும் தனித்து விளை யாட்டின், வெற்றி என்ற விட யங்களுக்கு அப்பால் விளை யாட்டினூடாக தமிழ்த் தேசிய ஒருமைப்பாட்டையும், புரிந் துணர்வையும் வளர்த்தெடுப் பதற்காகவே உருவாக்கி கால காலமாக நடத்தி வந்தது.

இனஅழிப்புக்கான இறு திக்கட்டப் போரை சிங்கள இன வெறி அரசு மாவிலாற் றிலிருந்து ஆரம்பித்த பின்னர்கூட தமிழீ ழத்தில் இருந்து வலைப்பந்தாட்ட அணியையும் வேறு விளையாட் டுக்களின் அணிகளையும் புலம் பெயர் நாடுகளுக்கு அனுப்பி வைத்து அதனூடான தமிழ்த் தேசிய விளையாட்டுத் துறையை யும் புலம்பெயர் மக்களுக்கிடை யிலும், புலம்பெயர்-தாயக மக் களுக்கிடையிலும்ஒருங்கிணைவை வளர்தெடுக்க முயன்றது.

இதன் ஓர் அங்கமாகவே எம்மால் எதிர்வரும் 3 ஆம் திகதி லண்டனில் தமிழர் ஒருங் கிணைப்புக் குழுவின் விளை யாட்டுப் பிரிவால் தமிழர் புனர் வாழ்வுக்கழக வெற்றிக் கிண் ணத்துக்கான விளையாட்டுப் போட்டிகளை சிறப்பான முறையில் நடத்துவதற்கு ஒழுங்குபடுத்தி இருந்தோம்.

ஆனால் அந்நாள்களிலேயே இனப்படுகொலைக் குற்றவாளி யான மகிந்தராஜபக்ச லண்டனுக்கு வருகை தர இருப்பதாக நம்பகமான தகவல்கள் வெளிவந்துள்ளன. 2010 இல் இந்த இனப்படுகொலைக் குற்றவாளி பிரிட்டன் வந்தபோது எமது மக்கள் ஒன்றுதிரண்டு காட்டிய எதிர்ப்பைவிடப் பல மடங்கு அதிகமான எதிர்ப்பைக் காட்ட வேண்டிய காலத்தின் தேவையைத் தற்போதைய வர லாற்று நகர்வுகள் எமது கைகளில் தந்துள்ளன.

அதற்காக அனைத்து தமிழ் மக்க ளையும் திரண்டெழுமாறு அழைக்க வேண்டிய காலகட்டம் இது. அதனால் எதிர்வரும் 3 ஆம் திகதி எம்மால் நடத்தப்பட இருந்த விளையாட்டு நிகழ்வை ரத்துச் செய்து மக்களை இனப் படுகொலைக் குற்றவாளிக்கு எதிரான போராட்டங்களில் உணர் வெழுச்சி யோடு பங்கெடுக்குமாறு வேண்டு கோள் விடுக்கின்றோம்.

2010 இல் இந்த இனப்படுகொலைக் குற்றவாளி பிரிட்டன் வந்தபோது எமது மக்கள் ஒன்றுதிரண்டு காட்டிய எதிர்ப்பைவிடப் பல மடங்கு அதிகமான எதிர்ப்பைக்காட்ட வேண்டிய காலத்தின் தேவையைத் தற்போதைய வரலாற்று நகர்வுகள் எமது கைகளில் தந்துள்ளன.

பல மாதங்களுக்கு முன்னரேயே இந்த விளையாட்டு நிகழ்வுக்கான காத்திரமான முன்னேற்பாடுகளை நாம் செய்திருந்தாலும்கூட வரலாற்றின் மிகமுக்கியமான தேவை இனப்படு கொலைக் குற்றவாளிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதே என்பதால் எமது நிகழ்வை நிறுத்தி வைக்கின்றோம்.

விளையாட்டுவேறு அரசியல் வேறு என்பது விடுதலை அடைந்து முன் னேறிய நாடுகளுக்கு வேண்டு மானால் சரியான நடைமுறையாக இருக்கலாம். அவர்கள் அப்படிச் சொல்லிக்கொண்டே வாழவும் முடியும்.அனைத்து உரிமை களும் பறிக்கப்பட்டு, வாழும் உரிமை கூட மறுக்கப்பட்ட ஒரு தேசிய இன மக்கள் என்ற முறையிலும், சிங்களப் பேரினவாத இலங்கை யிடமிருந்து எமது தாயகத்தை மீட்பதற்கான தாயக விடுதலைப்போரை முன்னெடுத்து பல லட்சம் உயிர்களை இழந்த ஒரு தாயகமக்கள் என்ற முறையிலும் எமக்கு அனைத்துமே எமது விடுதலைக் கானதுதான்-என்றுள்ளது. (வ)

உதவித் தொகை பணத்தை 4–15 திகதிகளில் பெறலாம்

நவாலி, ஜூன் 1

பிரதேச செயலங் களினால் தபாலங்கள் மூலம் வழங்கப் பட்டு வரும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் 15 திகதி வரை வழங்கப்படும் என்று அறி விக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவு நீண்ட காலமாக 15 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை வழங் கப்பட்டு வந்தது. தற்பொழுது மக்களின் நன்மை கருதி இத் திகதிகள் சமூக சேவை திணைக் களத்தினால் மாற்றப் பட்டுள்ளது.

எனவே மேற்படி கொடுப் பனவை பெறுபவர்கள் ஒவ் வொரு மாதமும் இத் திகதி களுக்கிடையில் பெற்றுக்கொள்ளு மாறு சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக சமூக சேவை உத்தி யோகத் தர் என். புரட்சிதாசன் அறிவித் துள்ளார். (வ-100)

கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்பித்தலில் தேசியடிப்ளோமாகற்கைநெறியை நிறைவுசெய்த ஆசிரியர் களுக்கு எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் சான்றிதழ் வழங்கப் படவுள்ளது. இதற்கமைவாக 2005/2007, 2006/2008, 2007/ 2009, 2008/2010 ஆகிய கல்வி ஆண்டுகளில் பயிற்சியை முடித்த ஆசிரியர்கள் தமது சுயவிவரங் களை பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி, ராஜ வீதி, கோப்பாய் என்னும்முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார். (வ-14)

இளைப்பு நோயாளர்கள் அதிகரிப்பு

இலங்கையில், இளைப்பு நோயாளர்கள் அதிகமானோர் இருக் கின்றனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது. கடந்த 10 வருட காலப்பகுதியினுள் இந்த நோயின் தாக்கம் 50 சதவீதமள வில் அதிகரித் துள்ளதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. புகைத்தல் காரண மாகவே இந்த நோய் ஏற்படுவதாக சுகா தார அமைச்சு வெளி யிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கை ஏற்றுமதி வருவாய் கடும் வீழ்ச்சி

இலங்கையின் தேயிலை, ஆடை, இறப்பர் ஏற்றுமதி கடந்த 30 மாதங்களில் என்றும் இல்லாதளவுக்குக் கடுமையான சரிவைச் சந்தித்துள்ளது.

கடந்த ஆண்டு மார்ச் மாதத்துடன் ஒப்பிடும் போது, இந்த ஆண்டு மார்ச் மாதம் ஏற்றுமதி வருவாய் 10.2 வீதத்தினால் சரிந்துள்ளது.

இலங்கையின் மத்திய வங்கி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இந்தத் தகவல் இடம்பெற்றுள்ளது.

தொழில்துறை ஏற்றுமதி 10.9 வீதத்தினாலும், ஆடை தயாரிப்பு ஏற்றுமதி 11.7 வீதத்தினாலும், விவசாயப் பொருள்களின் ஏற்று மதி 10.1 வீதத்தாலும் தேயிலை ஏற்றுமதி 6.3 வீதத்தாலும் சரிவை சந்தித்துள்ளன.

இதேவேளை, முதலாவது காலாண்டில் இலங்கையின் ஏற்றுமதி 1.4 வீதத்தினால் வீழ்ச்சி யடைந்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

முதலாவது காலாண்டில் இலங்கையின் ஏற்றுமதி 1.4 வீதத்தினால் வீழ்ச்சி யடைந்துள்ளதாகவும் இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதிகள் குறைவடைந்துள்ள அதேவேளை, இறக்குமதி 17 வீதத்தினால் அதிகரித் துள்ளது குறிப்பிடத்தக்கது. (வ)

3 முருகன் ஆலயங்களில் ஒரே நாளில் கும்பாபிஷேகம்

காரைநகரில் உள்ள மூன்று முருகன் ஆலயங் களில் ஒரே நாளில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற உள்ளது. காரைநகர் மணற்பிட்டி புகலி சிவசுப்பிர மணியசுவாமி கோயில், காரை மத்தி அரசடிக்காடு கதிர்காம சுவாமி கோயில், சிலக அத்திபுரம் கந்தசுவாமி கோயில் ஆகிய மூன்று ஆலயங்களிலும் இன்று வெள்ளிக்கிழமை மகாகும்பாபி ஷேகம் இடம்பெற உள்ளது.

இந்த மூன்று ஆலயங்களும் புனரமைக்கப்பட்டு புனரா வர்த்தன மகா கும்பாபிஷேகம் இடம் பெறுகின்றது.

சுப்பிரமணிய சுவாமி கோயிலில் இன்று வெள்ளிக் கிழமை காலை 7.30 தொடக்கம் 8.30 மணி வரை உள்ள சுபவேளை யிலும் அரசகாடு கதிர்காம சுவாமி கோயிலில் அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் 11 வரை உள்ள சுபவேளையிலும் அத்திபுரம் கந்தசு வாமி கோயி லில் அன்று காலை 5.50-7.22 மணி வரை உள்ள சுபநேரத் திலும் இடம்பெற உள்ளது.

இதேவேளை காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா அன்றைய தினம் வெள்ளிக் கிழமை மு.ப 10.30 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து தினங்கள் சிறப்பாக இடம்பெற உள்ளது.

இந்தப் பெருந் திருவிழாவின் இரதோற்சவம் அடுத்த மாதம் 9 ஆம் திகதி சனிக்கிழமையும் தீர்த்தோற்சவம் 10 திகதி ஞாயிற் றுக்கிழமையும் இடம்பெற உள்ளது. (வ-250)

வீட்டில் விக்கிரகங்களை வழிபட்டால், தினமும் அபிஷேகம், நைவேத்தியம் செய்ய வேண்டுமாமே!

உடல் சுகாதாரத்துக்கு நீராடுகிறோம். பசியைப் போக்க உணவருந்துகிறோம். வீட்டில் பசுமாட்டை வளர்த்து அதைக் கழுவி அதற்கு உணவும் அளிக்கிறோம்.செல்லப் பிராணிகளை வளர்க்கிறோம். அவற்றின், பராமரிப்பு தடங்கல் இல்லாமல் நடைபெறுகிறது. அவற்றுக்குப் பிடித்தமான உணவளித்து சுகாதாரம் குன்றினால் மருத்துவரை அணுகிக் கவனிக்கிறோம். நம் குழந்தைச் செல்வங் களைத் தினமும் நீராட்டிப் பாலூட்டி வளர்க்கிறோம். குழந்தை களுக்குப் பசிக்கும் வேளையறிந்து எச்சரிக்கையுடன் செயற் படுகிறோம். விருந்தாளியை உணவளித்து உபசரிக்கிறோம்.

நாம் உட்கொள்ளும் உணவுப்பொருள்கள் கடவுளின் படைப்பு. விதையை விதைக்கிறான் விவசாயி. பூமி அதைப் பயிராக மாற்றித் தருகிறது. அது பூமி மாதாவின் கருணை. அவர் தந்த உணவை முதலில் அவருக்குத் தந்து, பின் ஏற்றுக்கொள்வோம். உணவை ஆண்டவனுக்கு அளிக்கவேண்டும். அவரது பார்வைபட்டு, தூய்மையாக்கி அதைப்பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற நடைமுறையை வகுத்துத் தந்தது தர்மசாஸ்திரம். அவருக்கு அபிஷேகம் செய்வதும் உணவளிப்பதும் ஒரு சுமையாகாது.

விக்கிரகத்தை வைத்து பூசை செய்ய ஆசைப்பட்டால் அபிஷேகம், பிரசாதம் ஆகியவற்றையும் செய்ய வேண்டும். நமது வீட்டில் அவரை வரவழைத்து அபிஷேகம் செய்யாமலும் உணவளிக்காமலும் இருப்பது தவறு. விருந்தோம்பலில் முன்னவர்களான நமக்கு அது அழகல்ல. அக்கறையுடன் செய்யுங்கள். தங்களது முன்னேற்றம் சிறப்பாக இருக்கும். வீட்டில் அவருக்குப் பணிவிடை செய்யப் பொருளாதாரமும் சந்தர்ப்பமும் இடம் கொடுக்காவிட்டால் விக்கிரகத்தைத் தேவையானவர்களுக்கு அளிக்கலாம். கடவுளைக் கோயிலில் வணங்கினால்போதும்.

நன்றி:- ஞானச்சுடர்

சிறுவர் துஷ்பிரயோகத்தைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த திட்டம்

தெற்காசிய நாடுகளில் சிறு வர்கள் துன்புறுத்தப்படு வதையும் துஷ் பி ர யோ க த் துக்கு உட்படுத்தப்படுவதையும் தடுப் பதற்கான ஒருங்கிணைந்த திட்ட மொன்றை செயற்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெற்ற தெற்காசிய நாடுகளின் பிரதி நிதிகள் மாநாட்டிலேயே இது தொடர்பான இணக்கப்பாடு எட் டப்பட்டதாக மகளிர் விவகார மற்றும் சிறுவர் அபிவிருத்தி அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்தார்.

சார்க் நாடுகளைச் சேர்ந்த சுமார் 160 பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ள இந்த மாநாட்டில், சிறுவர் துஷ்பிர யோகங்களைத் தடுப்பதற்கான நடைமுறை சாத் தியமான திட்டங்களைச் செயற் படுத்த வேண் டியதன் முக்கியத்து வம் வலியுறுத்தப் பட்டுள்ளது.

ஒவ்வொரு நாடுகளிலும் வேறுபட்ட சமூகச் சூழலின் அடிப் படையில் சிறுவர்கள் துஷ்பிர யோகத்துக்கு இலக்காகின்ற போதிலும், தெற்காசிய நாடுகள் அனைத்தும் ஒரே இணக் கப் பாட்டின் கீழ் இதற்கு எதிரான நட வடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளன.

(ந)

வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை, மல்லாகம்.

வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல் - 2012

PSDG - 2012 மற்றும் சுற்றுலாத்துறைக்கான நிதிகள் மூலம் மேற்கொள்ளப்படும் கீழ்வரும் வேலைகளுக்கான கேள்விகள் வலிகாமம் வடக்கு பிரதேச சபையினால் கோரப்படுகிறது. கீழ்க்குறித்த வேலைகளுக்கான கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுலக நேரத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரத்தை / கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 01.06.2012 - 14.06.2012 பி.ப 03.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி : 15.06.2012 ந.ப 12.00 மணி வரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி : 15.06.2012 பி.ப 02.00 மணிக்கு

கேள்விகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் கிடைக்கக்கூடியவாறு இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், வலி. வடக்குப் பிரதேசசபை, காங்கேசன்துறை (மல்லாகம்) என்ற விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இடப்படவேண்டும். மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், **யாழ்ப்பாணம்** என்ற விலாசத்துக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும். ஒவ்வொரு வேலைக்குமான கேள்விப்பத்திரத்தையும் தனித்தனிக் கடித உறையிலிட்டு பெட்டியிலிடப்படல் வேண்டும். அத்துடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

1. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு உரிமை உண்டு.
2. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப் பேற்பவர் போதிய கணியவியலாற்றலையும் (SLS:573:1982) நியம அளவீட்டு முறைமையையும் அறிந்திருத்தல் வேண்டும்.
3. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவிலுள்ள இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. மேலதிக விவரங்களை வலிகாமம் வடக்குப் பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தொ. இல.	வேலை விவரம்	மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம்	மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணம் VAT, NBT உள்ளடங்கலாக	இருக்க வேண்டிய ஆகக் குறைந்த (ICTAD)தரம்
01	பொதுநோக்கு மண்டபம் அமைத்தல் - குரும்பசிட்டி	45,000.00	570.00	C 8
02	கொங்கிறீற் பாதை அமைத்தல் -கீரிமலை கேணிப்பிரதேசம்	23,000.00	570.00	C 9

வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.
01.06.2012

(C\273) (6,7,10)

திரு. சோமசுந்தரம் சுகிர்தன்,
தவிசாளர்
வலி. வடக்கு பிரதேச சபை.

ஓம் சரவணபவ

காரைநகர் வலந்தலை அத்திபுரம்
அருள்மிகு கந்தசுவாமி திருக்கோயில்

புனராவர்த்தன
மஹா கும்பாபிஷேக
விஞ்ஞாபனம்
சிறப்புற நடைபெற
வாழ்த்தி வணங்குகின்றோம்

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய் கதிராய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே

வாழ்த்துவோர்:-

கசூரி உணவகம்
கசூரினா பீச்
காரைநகர்.

V.C மணியம் களஞ்சியம்
சயம்பு வீதி,
காரைநகர்

கனகா ஸ்ரூடியோ
ஆலடி, காரைநகர்.
0774278240

கவிப்பிரியா வெல்டிங் வேக்ஸ் இலகடி, காரைநகர்.
0771288083
உரிமையாளர் T. பிரதாப்

கசூரினா சுற்றுலா படகுச்சேவை
கசூரினா பீச்
0779352584

மதி ஆட்ஸ் அன் பெயிண்ட்
இலகடி, காரைநகர்
0775594181

கலா பூட் சிற்றி அன் ஹார்ட்வெயர்
பழையகண்டி, காரைநகர்.
0213005962

சர்வசக்தி திருமண இணைப்பு நிலையம்
டாட்டா மஸ்ரா கொம்ளக்ஸ்
பேரூந்து தரிப்பு நிலையம்
வவுனியா

(18858)—(6,9,10)

சுத்திகரிப்பாளர்கள் (ஆண்) தேவை

எமது நிறுவனத்தில் சுத்திகரிப்பாளராக கடமை புரிய 20 வயது முதல் 40 வயது வரையானோர் உடன் தேவை. 02.06.2012 சனிக்கிழமை அல்லது 04.06.2012 திங்கட்கிழமை ஆகிய தினங்களில் காலை 9.00 மணி முதல் முற்பகல் 10.00 மணிவரை நேரில் வரவும்.

லங்கா டையில்ஸ் காட்சியறை
469, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் சிவன் கோயிலுக்கு அருகில்)
T.P: 021 222 8157

(C\272) (6,7,10)

மரண அறிவித்தல்



நடராசா வரதராசா

(வேம்படி, காரைநகர்)

காரைநகர், அறுகம்புலத்தைப் பிறப்பிடமாகவும், வேம்படி, காரை நகரை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா வரதராசா நேற்று (31.05.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா (பிரபல வர்த்தகர், கல்க முவ)-மாணிக்கம் தம்பதியரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-நாகம்மா தம்பதியரின் மருமகனும், சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும், ஜெயவதனி, ஜெயப்பிருந்தா, கல்ப்பனா, ஹரிறமணன், கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், றுக்சானின் (கனடா) அன்பு மாமனும், சங்கரப்பிள்ளை-அனுலா தம்பதியரின் சம்பந்தியும், லலிதாம்பிகை, கமலாம்பிகை, விமலாம்பிகை, அன்னலட்சுமி, தவமலர், பாக்கியம், நவமலர், செல்வராசா, மங்கையற்கரசி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கந்தையா (உப தபாலதிபர்) மற்றும் சுப்பிர மணியம் (லண்டன்), காலஞ்சென்றவர்களான திருச்சிற்றம்பலம் (பொட்டர்), இராசம்மா மற்றும் மகேந்திரம், காலஞ்சென்றவர் களான பத்மநாதன், சண்முகநாதன் மற்றும் ஆறுமுகம், காலஞ்சென்ற கந்தையா மற்றும் கந்தையா, காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் யோகேஸ்வரி, சிவகுமாரன் ஆகியோ ரின் மைத்துனரும், திலகவதி, விஜயலட்சுமி, நிமலசோதி, மகேந்திரம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் வேம்படியில் உள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தக னக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேம்படி,
காரைநகர்.

(18867)

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமகன்.

TEEN PARK & HEALTH SPOT

புதுக்கடை திறப்பு விழா

இன்று (01.06.2012) வெள்ளிக்கிழமை காலை 6.00 மணி தொடக்கம் 7.22 மணிவரை உள்ள சுபவேளையில்

TEEN PARK & HEALTH SPOT

எனும் ஸ்தாபனம் திறந்துவைக்கப்படவுள்ளது.

இங்கு NET BROUZING, GAMING, HEARBAL TREATMENT, FACIAL, HAIR PERMING, HAIR REBONDING இன்னும் பல சேவைகள் எம்மால் வழங்கப்படவுள்ளன.

இன்று மட்டும்
FREE FACIAL
நடைபெறும்.



இல.227/5, K.K.S. ROAD, CHUNNAKAM.

T.P.: 021-2242062

(18869)

விற்பனைக்கு உண்டு

GREAT DANE நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

வான் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையில் உள்ள (Supper G.L டொல்பின்) உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077 9493947

(18830) (6,14,9)

கண்ணீர் அஞ்சலி

நாரந்தனை சைவமகாசபையின் அங்கத்தவரும், முன்னாள் பொருளாளரும், தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வளர்ச்சியில் பெரும் பங்காற்றியவரும், சமூக சேவையாளருமாகிய **நாகநாதபிள்ளை சிவஞானம்** 07.05.2012 அன்று கனடாவில் காலமான செய்தி அறிந்து துயருறுகிறோம். அவரின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ மகா சபையினர்,
நாரந்தனை, ஊர்காவற்றுறை.

(18865)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தமிழ் கைதிகள் விடயம் துரித செயல்பாடு அவசியம்

பல்வேறு சிறைச்சாலைகளிலும் குற்றம் சுமத்தப்படாமல் அடைக்கப்பட்டு அல்லலுறும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக கடந்த வாரம் வவுனியாவில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் ஆதரவில் நடைபெற்று முடிந்த சத்தியாக்கிரகத்தையடுத்து கடந்த 29 ஆம் திகதி கொழும்பில் பிரமாண்டமானதொரு ஆர்ப்பாட்டமும் பேரணியும் இந்த கைதிகளின் விடுதலையை முன்னிறுத்தி நடத்தப்பட்டுள்ளது.

பேரணியில் ஆர்ப்பாட்டக்காரர்களால் எடுத்துச் செல்லப்பட்ட சுலோக அட்டை ஒன்று பின்வரும் வாசகத்தைக் கொண்டிருந்தது. ''பிள்ளையான், கருணா, கே.பி ஆகியவர்கள் மாளிகைகளில் இருக்க குற்றமற்ற தமிழ் அரசியல் கைதிகள் சிறையில் வாடுகிறார்கள்'' என்பதாகும் அது.

மேல் குறித்த நபர்கள் மற்றும் அவர்கள் போன்று அரசுடன் இணைந்து கொண்டவர்களின் கடந்த கால பின்னணி பற்றி அறியாதவர்கள் இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அவர்கள் மீது ஏதும் விசாரணைகள் நடைபெற்றனவா என்பதும் தெரியாது. ஆனால் அவர்கள் அரசின் அரவணைப்பில் அதிகாரப் பதவிகளில் இருக்கிறார்கள் உல்லாச மாளிகைகளில் சுகபோகம் அனுபவிக்கிறார்கள்.

என்னே பரிதாபம்! ஒரு குற்றமும் செய்யாத விசாரணைகளுக்குட்படுத்தப்படாத முன்னாள் போராளிகளாய் இருந்தார்கள் என்ற ஒரே சந்தேகத்தின் மீது எமது உறவினர்களை மட்டும் ஏன் அடைத்து வைத்து கொடுமைப் படுத்துகிறீர்கள் என்று கேட்பதுவே அந்த சுலேகத்தின் கருத்து-சிறையில் கிடந்து தவிக்கும் இளைஞர்களின் உறவினர்களின் உள்ளக்கிடக்கையின் வெளிப்பாடு இது என்பதே பொருத்தம்.

காணாமல் போனவர்கள் தொடர்பான புலனாய்வு மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்பின் ஆதரவில் கொழும்பு வெலிக்கடை சிறைக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ள நிலைமையிலும் இன்னமும் தமிழர் சிங்கள மக்களுக்கிடையில் நல்லிணக்கம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் அரசு இறங்கவில்லை யென்று ஆர்ப்பாட்டக் காரர்கள் கண்டித்தனர்.

இந்த பேரணியில் கருத்து தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோகணேசன் ஒரு மாதகால அவகாசத்துக்குள் கைதிகள் விடுதலை செய்யப்படாவிட்டால் தமிழ்-சிங்கள மக்களுடன் இணைந்து மீண்டும் போராடப் போவதாக சூள் உரைத்தார்.

த.தே.கூட்டமைப்பு, முன்னணிசோஷலிச கட்சி, ஐக்கிய சோஷலிசக்கட்சி, நவசிகல உறுமய போன்ற கட்சிகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தன.

கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் அரசு அறிவித்தது போன்று தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. அதேசமயம் அண்மையில் அமெரிக்காவுக்குச் சென்றிருந்த போது வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அந்நாட்டு இராஜாங்க செயலர் ஹிலாரி கிளின்டனிடம் கையளித்த செயல் திட்டத்தில் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பான வழக்குகளை துரிதமாக முடிவுக்கு கொண்டுவர ஒப்புக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்தப் பின்னணியில் தான் நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்த போது ''தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் போராளிகள் மற்றும் சிறைகளில் வாடும் அணைத்து தடுப்புக் காவல் கைதிகள் மீது விரைவாகவும் வெளிப்படைத் தன்மையோடும் நீதித்துறைச் செயல்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்று அமெரிக்கா எதிர்பார்க்கிறது'' என்று கூறியிருந்தார்.

சட்டரீதியான ஆளுகை நிலைநாட்டப்படுவதையே அமெரிக்கா விரும்புகிறது. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீள் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்றாற்போல் எல்.ரி.ரி.ஈ. சந்தேகநபர்கள் மீது விரைவாக நீதித்துறை செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுவதிலும் அமெரிக்கா அக்கறை கொண்டிருக்கிறது என்றார் அவர்.

ஜெனிவா தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கைக்கு ஆலோசனை கூற மனித உரிமை ஆணைக்குழு நிபுணர்கள் வருவதையோ, பின்னர் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இங்கு வந்து ஆய்வு நடத்துவதையோ விரும்பாத இலங்கை அரசு, எதிர்வரும் மனித உரிமைகள் சபை கூட்டத்தில் இலங்கை தொடர்பான அறிக்கையை ஆணையாளர் நவநீதம்பிள்ளை எவ்வாறு சமர்ப்பிப்பார் என்று எதிர்பார்க்கின்றது என்பது தெரியவில்லை.

ஐ.நா. நிபுணர் குழுவினர் இலங்கை வந்து ஆய்வு நடத்துவதற்கு மறுப்பு தெரிவித்ததால் அவர்கள் இங்கு வராமலே வேறு வழிகளில் விவரங்களை சேகரித்து அறிக்கை தயாரித்திருந்தார்கள். அது இலங்கைக்கு பெரும் மூக்குடைப்பாக இருந்தது. அதே நிலை ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கும் நேருமானால் அவரும் அதே விதத்தில் அறிக்கை தயாரிப்பது சாத்தியம். அது இலங்கைக்கு நன்மை தருவதாக இருக்காது என்பது மட்டும் நிச்சயம்.

வடக்கு விவசாய அபிவிருத்திக்கு மத்திய விவசாய அமைச்சு நிதி

50 மில்லியன் ரூபா ஒதுக்கியது என்று வடக்கு விவசாய அமைச்சின் செயலாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வடமாகாணத்துக்கு மத்திய விவசாய அமைச்சால் கடந்த வருடம் 50.03 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது என்று வடமாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி காணி நீர்ப்பாசனம் மற்றும் மீன்பிடி அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம். ஹால்டின் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்துக்கு 13.312 மில்லியன் ரூபாவும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 11.501 மில்லியன் ரூபாவும் வவுனியா மாவட்டத்துக்கு 13.446 மில்லியன் ரூபாவும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 7.004 மில்லியன் ரூபாவும் மன்னார் மாவட்டத்துக்கு 4.772 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டது.

மத்திய அமைச்சால் ஒதுக்கப்பட்ட நிதியில் சமூக அடிப்படையில் விதை உற்பத்திக்கு கிளிநொச்சி மாவட்டத்துக்கு 0.10 மில்லியனும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 0.50 மில்லியனும் வவுனியா மாவட்டத்துக்கு 0.60 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய பிரதேசங்களில் வெங்காய உற்பத்திக்கு யாழ்.மாவட்டத்துக்கு 0.02 மில்லியனும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 0.60 மில்லியனும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 0.02 மில்லியனும் வவுனியா மாவட்டத்துக்கு 0.60 மில்லியனும் மன்னார் மாவட்டத்துக்கு 0.50 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

உபஉணவுப் பயிர்ச் செய்கைக்காக கிளிநொச்சி மாவட்டத்துக்கு 1.53மில்லியனும்முல்லைத்தீவுமாவட்டத்துக்கு 1.57 மில்லியனும் வவுனியா மாவட்டத்துக்கு 1.12 மில்லியனும் மன்னார் மாவட்டத்துக்கு 0.73 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

வெங்காய உற்பத்தி விரிவாக்கத்துக்கு முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 1.0 மில்லியனும் வவுனியா மாவட்டத்துக்கு 0.50 மில்லியனும் பழச்செய்கை அபிவிருத்திக்கு யாழ்.மாவட்டத்துக்கு 1.18 மில்லியனும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 1.04 மில்லியனும் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 1.5 மில்லியனும் வவுனியா மாவட்டத்துக்கு 0.99 மில்லியனும் மன்னார் மாவட்டத்துக்கு 0.73 மில்லியனும் மத்திய பருவப் பயிர்ச் செய்கை ஊக்குவிப்புக்காக யாழ்.மாவட்டத்துக்கு 0.50 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மரக்கறி, கிழங்குப் பயிர்ச் செய்கைக்காக 5 மாவட்டங்களுக்கும் 3 மில்லியனும் மரக்கறிப் பயிர்ச் செய்கை மேம்பாட்டுக்கு 5 மாவட்டங்களுக்குமாக ஒரு மில்லியனும் சேதனப் பசளைகளின் பாவனையை ஊக்குவிப்பதற்கு 4.8 மில்லியனும் சேதனப் பசளை தயாரிப்பு விரிவாக்கலுக்கு 5 மாவட்டங்களுக்கு 8.11 மில்லியனும் வடக்கின் வசந்ததத்தின் கீழ் யாழ்., கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு 12 மில்லியனும் வெங்காய விதைகளின் உற்பத்திக்கு யாழ். மாவட்டத்துக்கு மட்டும் ஒரு மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மாதிரி விவசாய பாடசாலையை அமைக்க 5 மாவட்டங்களிலும் 1.04 மில்லியனும் பூநகரியில் வெங்காய உற்பத்தியை மேம்படுத்துவதற்கு 3 மில்லியனும் நிலக்கடலை விதை உற்பத்திக்கு முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 2.1 மில்லியனும் ஒதுக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (ம-13)

உதவிக் கொடுப்பனவுகளுக்கு திருத்தப்பட்ட சுற்றறிக்கை

தென்மராட்சி, ஜூன் 01

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களம் பொதுசன மாதாந்த உதவிக் கொடுப்பனவு, நோய்களுக்கான உதவிக் கொடுப்பனவு போன்றவற்றை வழங்குவது தொடர்பாக திருத்தியமைக்கப்பட்ட சுற்றறிக்கை ஒன்றைச் சகல பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்கு முன்னர் கொடுப்பனவைப் பெறவுள்ளவர்களின் தகைமை தொடர்பான ஒரு விவரங்களையும் பெற்று கொடுப்பனவுத் தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று இதில் குறிப்பிட்டுள்ளது.

கொடுப்பனவுகள் தபால் நிலையங்களில் மாதாந்தம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 15 ஆம் திகதிக்கு முன்பாகவும், உபதபால் நிலையங்களில் 14 ஆம் திகதிக்கு முன்பாகவும் பிரதேச செயலகங்களில் 16 ஆம் திகதிக்கு முன்பாகவும் முடிவுறுத்தப்படல் வேண்டும்.

டிசெம்பர் மாதக் கொடுப்பனவு மாத்திரம் டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதிக்கு முன்பு முடிவுறுத்தப்படல் வேண்டும்.

இந்தச் சுற்றறிக்கை முன்னைய ஏற்பாடுகளைப் பாதிக்காதவாறு இன்று தொடக்கம் செயல் வலுப் பெறும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-9)

சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜூன் 1

ஆனைக்கோட்டை சிவன் வீதி நடன விநாயகப் பெருமானின் மகா கும்பாபிஷேகம் இன்று காலை 7.20 மணிமுதல் 8.30 வரையான சுப வேளையில் நடைபெறும். (ந-100)

* * *

கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலயத்துக்கு பல லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட சப்பறத்தின் வெள்ளோட்ட விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறும். (த-17)

* * *

அராலி முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 9 தினங்கள் திருவிழாக்கள் இடம் பெறவுள்ளன. 8 ஆம் திருவிழா அன்று மாலை 4 மணிக்கு அம்பிகையின் ஊர் உலா இடம்பெறும். (ந-50)

* * *

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் மாகாமாரி அம்பாள் ஆலய அலங் காரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. எதிர்வரும் ஜூன் 14 ஆம் திகதி வியா ழக் கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ந)

* * *

கதிரிப்பாய், வரணன் அருள்மிகு பத்திரகாளி சமேத வீரபத்திரர்சுவாமி கோயில் வருடாந்த மணவாளக் கோலம் நாளை சனிக்கிழமை நடை பெறவுள்ளது. அன்றைய தினம் காலை 8 மணிக்கு 108 சங்காபிஷேகமும், விசேட பூசைகளும், ஆராதனைகளும் நடைபெற்று சுவாமி வீதி வலம் வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி அளிப்பார். (ந-8)

* * *

கொக்குவில் மஞ்சவனப்பதி முருகன் ஆலய கும்பாபிஷேகம் முன்னிட்டு நாளை சனிக்கிழமை 1009 நவோத்தி சகஸ்சிர சங்காபிஷேகம் நடைபெறும் அன்று மாலை 5 மணிக்கு மணவாளக் கோலத் திருவூஞ்சல் நடைபெற்று பூந்தண்டிகையில் முருகப் பெருமான் கிராம வலம் நடைபெறும்.

* * *

மீசாலை கிழக்கு காட்டுவளவு நெல்லியடி கந்தசுவாமி ஆலய பஞ்சகுண்ட யக்ஷ புனராவர்த்தன அஷ்டபந்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் இடம்பெறும். மகாகும்பாபிஷேக கிரியைகள் பிரதிஸ்டா வித்தகர் சிவஸ்ரீ சபா. வாசுதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறும். ள(ந-9)

* * *

ஊர்காவற்றுறை புளியங்கூடல் ஸ்ரீ இராஜ மகாமாரி அம்பாள் ஆலயத்தின் பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ம-14)

தனியார் கட்டடங்களில் 31 உப தபால் நிலையங்கள்

யாழ். மாவட்டத்தில் இந்த நிலைமை

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். மாவட்டத்தில் 31 உப தபால் நிலையங்கள் தனியார் கட்டடத் தொகுதியில் இயங்கி வருகின்றன. இவற்றுக்காக மாதாந்தம் வாடகை 2லட்சத்து 50 ஆயிரம் ரூபா வரையில் செலவாகிறது என்று வடக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் என்.ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் 31 உப தபால் நிலையங்கள் தனியார் கட்டடத் தொகுதியிலும் 7 உப தபால் நிலையங்கள் அரச கட்டடத் தொகுதியிலும் இயங்குகின்றன.

சாவகச்சேரி, சுழிபுரம், சுன்னாகம், சுண்டுக்குளி, நெடுந்தீவு, யாழ்ப்பாணம், காரைநகர் ஆகிய 7 தபால் நிலையங்களும் அரச கட்டடங்களாகும்.

பருத்தித்துறை உப தபால் நிலையத்துக்கு அரசகட்டடம்உண்டு. உயர் பாதுகாப்பு வலயத்தினுள் தற்போது உள்ளதால் பாவனைக்கு விடப்படவில்லை.

வவுனியா மாவட்டத்தில் தேலியன் குளம், தனியார் கட்டடத் தொகுதியிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, மாங்குளம், முள்ளியவளை ஆகியனவும் மன்னார் மாவட்டத்தில் தலை மன்னார், மன்னார், மடுசேர்ச் தபால் நிலையங்களும் இயங்கி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தன், பளை, கிளிநொச்சி, பூநகரி ஆகிய தபால் நிலையங்கள் அரச கட்டடங்களுக்கு சொந்தமானவை. போரால் சேதமடைந்த பின்னர் தற்போது என்றிப் திட்டத்தின் மூலம் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது. 11 புதிய தபால் நிலையங்கள் கட்டுவதற்காக 194 மில்லியன் ரூபா நிதி என்றிப் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

அக்கராயன் ஆரம்ப வித்தி. பிரிவதற்கான உத்தியோகபூர்வ கடிதம் வழங்கப்பட்டது

அக்கராயன், ஜூன் 1

அக்கராயன் மகாவித்தி யாலயத்திலிருந்து ஆரம்ப வித்தியாலயம் பிரிந்து செல் வதற்கான உத்தியோகபூர்வ கடிதம்கிடைக்கப் பெற்றுள்ளது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் உத்தி யோகப் பற்றற்ற வகையில் பிரிந்து தனியாக இயங்கி வருகிறது. ஆனால் 15 மாதங் களாக அதிபர் நியமிக்கப்பட வில்லை.

இந்த நிலையில் கடந்த 10 ஆம் திகதி முதல் அதிபர் நியமிக்கப்பட்டார். ஆனால் ஆரம்ப வித்தியாலயம் பிரிந்து செல்வது மற்றும் அதிபர் நியமனம் தொடர்பான உத்தி யோகபூர்வ கடிதம் நேற்று முன்தினமே பாடசாலை அதி பருக்குக் கிடைக்கப் பெற் றுள்ளது.

அதில் கடந்த இரண்டாம் திகதி முதல் ஆரம்ப வித்தியா லயத்துக்கு அதிபர் நியமிக் கப்படுவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது அக்கராயன் மகாவித்தியாலயத்துக்குரிய ஒரு கட்டடத்திலேயே அக்கரா யன் ஆரம்ப வித்தியாலயம் பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது.

இதில் 153 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். ஏழு ஆசிரியர்கள் கற்பித்தல் நட வடிக்கையில் ஈடுபட்டு வரு கின்றனர் இவர்களில் இருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்கள் ஆங்கில ஆசிரியர் இல் லாத நிலை காணப்படுகின்றது.

பாடசாலை அதிபரும் கிளி நொச்சி இராமநாதபுரத்தைச் சேர்ந்தவர்.

ஆரம்ப பாடசாலைக்கென ஐந்து ஏக்கர் காணி ஒதுக்கப்பட் டுள்ளது. விரைவில் கட்டடம் அமைத்து வழங்கப்படுமென நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் உறுதிமொழி வழங்கியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (க-18)

வவுனியா நகரசபைக்குள் இனங்காணப்பட்ட அடிப்படை வேலைத் திட்டங்கள் ஆரம்பம்

வவுனியா, ஜூன் 1

வவுனியா நகரசபை எல் லைக்குள் இனங்காணப் பட்ட அடிப்படை வேலைத் திட்டங்கள் உடனடியாக ஆரம்பிக்கப்படவுள்ளன என்று வவுனியா நகரசபை யின் பதில் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட எம்.எம்.ரதன் தெரிவித்தார்.

வவுனியா நகரசபையின் தலைவர் ஐ.கனகையா தனிப் பட்ட விடயம் காரணமாக ஒரு மாத விடுப்பில் இந் தியா சென்றுள்ளதை அடுத்து நகர சபையின் உபதலைவர் எம்.எம்.ரதன் பதில் தலைவ ராகக் கடந்த திங்கட்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

வவுனியா நகரசபையி லுள்ள பல வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுவ தால் அவற்றை முன்னுரிமை அடிப்படையில் புனரமைக் கும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இதன் பிரகாரம் பண்டாரிக்குளம் வீதி, கந்த சாமி கோயில் வீதி மற்றும் முதலாம் குறுக்குத்தெரு வீதி என்பனவற்றைச் செப்பனிடும் பணிகள் தற்போது ஆரம்பிக் கப்பட்டு இடம்பெற்று வரு கின்றன.

இதேவேளை வவுனியா மாவட்டத்திலிருந்து க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

> வவுனியா நகரசபையிலுள்ள பல வீதிகள் குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் அவற்றை முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை பதில் தலைவர் எம்.எம்.ரதன் தலைமையில் இடம்பெற்ற நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் இதற்கான தீர் மானம் நிறைவேற்றப்பட் டுள்ளது.

'நகரத்தின் சிற்பிகள்' எனும் தொனிப் பொருளில் கலை, வர்த்தகம் மற்றும் கணித விஞ்ஞானப் பிரிவுக ளில் முதல் மூன்று இடங் களையும் மாவட்டநிலையில் பெற்றுக் கொண்டவர்களே பாராட்டிக் கௌரவிக்கப்படவுள் ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க-400)

கடற்படையினரை வெளியேற்ற ஆர்ப்பாட்டத்துக்கு மக்கள் தயார்

மன்னார், ஜூன் 1

மன்னார் பள்ளிமுனை 25 வீட்டுத் திட்டத்தில் குடி கொண்டுள்ள கடற்படை யினர் வெளியேறாது விட் டால் ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரி வித்துள்ளனர்.

இந்த வீட்டுத் திட்டத் தைச் சேர்ந்த மக்கள், போர் காரணமாக 1990 ஆம் ஆண்டு இந்தப் பகுதியிலிருந்து வெளியேறினர். அப்போது கடற்படையினரும், பொலிஸா ரும், அங்கு காவலரண்களை அமைத்துக் குடியேறினர்.

தற்போது பொலிஸார் வெளியேறிய போதிலும் கடற்படையினர் வெளியேற மறுத்து வருகின்றனர். இது தொடர்பாக அவர்களிடம் கேட்கும் போது உரியபதில் கிடைப்பதில்லை.

இங்கு வசித்த மக்கள் தற்போது வாடகை வீடுகளி லும், உறவினர், நண்பர்கள் வீடுகளிலும் வசித்து வரு கின்றனர்.

தொடர்ந்தும் கடற்படை யினர் தமது வீடுகளைவிட்டு வெளியேறாது விட்டால் பாதிக்கப்பட்ட மக்கள் அனை வரும் ஒன்று சேர்ந்து ஆர்ப் பாட்டமொன்றை நடத்த வுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(க-12)

தற்போது வீசுகின்ற கடும் காற்றினால் கிளிநொச்சி வீதியொன்றைத் தடை செய்தவாறு மரமொன்று வீழ்ந்து கிடக்கின்றது. (18)

வாகன நெரிசலால் திணறுகிறது மன்னார்

மன்னார் நகரம் வாகன நெரி சலால் திணறி வருகின்றது. தற்போது தென்பகுதியிலிருந் தும், வேறு பகுதிகளிலிருந் தும் மக்கள் அதிகளவில் மன் னாருக்கு வந்து செல்கின்றனர். குறிப்பாக வர்த்தக நடவடிக் கைகள் மற்றும் சுற்றுலாவின் பொருட்டு இவர்கள் வந்து செல்கின்றனர். பலர் தனித்தனி வாகனங்களில் வந்து செல்கின் றனர். இதனால் வாகன நெரி சல் ஏற்படுகின்றது.

வாகன நெரிசலால் பாட சாலை மாணவர்களும் பாத சாரிகளும் அதிகளவில் பாதிக் கப்படுகின்றனர். இந்த நிலை யில் போக்குவரத்துப் பொலிஸா ரும் கடமையில் ஈடுபட்டுள்ள னர். குறிப்பாகப் பாடசாலை கள் ஆரம்பமாவதற்கு முன் னரும், முடிவடைவதற்கு முன்னரும் பாடசாலைகளுக்கு முன்பாக இவர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். (க-12)

வவுனியாவிலிருந்த வற்றாப்பளைக்கு விசேட பஸ்சேவைகள்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கலை முன்னிட்டு வவு னியா இ.போ.சவினால் விசேட போக்குவரத்து ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வரலாற்றுப்பிரசித்தி பெற்ற வற்றாப்பளை கண்ணகி அம் மன் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் திங்கட்கிழமை இரவு இடம்பெற வுள்ளது. இப்பொங்கல் நிகழ் வில் கலந்து கொள்ளச் செல் லும் பக்தர்களின் நன்மை கருதியே இந்த விசேட போக்கு வரத்து ஒழுங்கு மேற்கொள்ளப் பட்டுள்ளதாக வவுனியா இ. போ.ச. டிப்போ முகாமையாளர் செ.குணராஜா தெரிவித்தார்.

அன்றையதினம் காலை 6 மணிக்கு வவுனியாவில் இருந்து வற்றாப்பளைக்கான முதலாவது சேவை ஆரம்ப மாகும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் வரை ஒரு மணித்தி யாலஇடைவெளியில் அடுத்த தடுத்த பஸ் சேவைகள் இடம் பெற்றுப் பிற்பகலின் பின் தொடர்ச்சியாகப் பத்து பஸ்கள் சேவையில் ஈடுபடும்.

இவ்வாறு சென்ற பஸ் கள் இரவு முழுவதும் வற்றாப் பளையில் தங்கி நின்று பொங்கல் நிறைவடைந்ததும் வற்றாப்பளையிலிருந்து வவு னியா நோக்கிப் புறப்படும் என்றும் அவர் மேலும் தெரி வித்தார். (க-400)

அதிகரித்த கசிப்பு உற்பத்தியால் அல்லல்படும் முல்லை மக்கள்

முல்லைத்தீவு, ஜூன் 1

முல்லைத்தீவு மாவட் டத்தில் கசிப்பு உற்பத்தி மற் றும் விற்பனை அதிகரித்துச் செல்வதால் இங்கு மீளக்குடிய மர்ந்த மக்கள் பல்வேறு இன் னல்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பலர் தமது வறுமையான நிலையைத் சாதகமாக்கிக் கொண்டு இந்தத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே கைது செய்யப் பட்ட பலருக்கு நீதிமன்றி னால் தண்டமும் விதிக்கப் பட்டது. ஆனால் அவர்கள் திருந் துவதாகத் தெரியவில்லை. மேன்மேலும் இந்தத் தொழிலில் முழுமூச்சுடன் ஈடுபட்டு வரு கின்றனரெனப் பாதிக்கப் பட்ட மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் அடர்ந்த காட்டுப்பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருந் தொகையான கசிப்பு கைப்பற் றப்பட்டது. இதனுடன்தொடர் புடையவர்கள் கைது செய் யப்பட்டுத் தண்டமும் விதிக் கப்பட்டது. ஆனால் கசிப்பின் வேகம் தணியவில்லை என இங்குள்ள மக்கள் கவலை யுடன் தெரிவிக்கின்றனர்.

மேலும் கசிப்பின் தாக்கத் தினால் கலாசார சீரழிவுகள் அதிகரித்துள்ளதுடன் குடும் பங்களில் சச்சரவுகளும் தின மும் இடம்பெற்றுவருகின்றன. அத்துடன் பொருளாதார ரீதி யான பாதிப்பினால் வறிய குடும்பங்கள் மேன்மேலும் மோசமான நிலைக்குத் தள் ளப்பட்டுள்ளன.

உரியவர்கள்இந்தக்கொடிய கசிப்பை ஒழித்துத் தமக்கு நிம்மதியான வாழ்க்கையை ஏற்படுத்தித் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

(க-500)

ஆரம்பக் கல்வியைத் தொடர்வதில் முன்பள்ளிகளின் பங்கு முக்கியம்

அக்கராயன் அதிபர் கருத்து

அக்கராயன், ஜூன் 1

மாணவர்கள் ஆரம்பக் கல்வியைத் தொடங்குவதில் முன்பள்ளி ஆசிரியர்களின் பங்களிப்பு முக்கிய இடத்தை வகிக்கின்றது.

இவ்வாறு தெரிவித்திருக் கிறார் அக்கராயன் ஆரம்ப வித்தியாலய அதிபர் ப.கணே சலிங்கம்.

அக்கராயன் சமாதான புரம் அமெரிக்கன் இலங்கை மிசன் திருச்சபையின் முன் பள்ளி விளையாட்டு நிகழ் வில் முதன்மை விருந்தினரா கக் கலந்து கொண்டு உரை யாற்றிய போதே அவர் இந் தக் கருத்தைத் தெரிவித்தார்.

பாடசாலை செல்லவிருக் கும் மாணவர்களைத் தயார்ப் படுத்தும் முக்கிய பொறுப்பு முன்பள்ளி ஆசிரியர்களி டமே உள்ளது.

உலகம் இன்று சுருங்கி ஒரு கிராமமாக மாறியுள்ளது. இதற்கேற்ற வகையில் நாம் முன்னேறிச் செல்ல வேண்டி யுள்ளது.

மாணவர்கள் எதிர்காலத் தில் சிறந்த கல்வியைப் பெற வேண்டுமாயின் முன்பள்ளி கள் சிறந்த அடித்தளத்தை இடவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

திருநகர்ப் பகுதி திருட்டு: சந்தேகநபர்களுக்கு பிணை

கிளிநொச்சி திருநகர்பகு தியில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி திருநகர்ப் பகுதியில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற பூப்புனித நீராட்டு விழா நிகழ்வின் போது ஒருலட்சம் ரூபா பணம் களவு போனமை தொடர்பாகக் கிளி நொச்சிப் பொலிஸ்நிலை யத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து இந் தச் சம்பவத்துடன் தொடர்பு டைய இரண்டு சந்தேக நபர் களைக் கிளிநொச்சிப் பொலி ஸார் கடந்த 29 ஆம் திகதி கைது செய்தனர். அவர்களிடம் 40 ஆயிரம் ரூபா பணத்தையும் மற்றும் திருடப்பட்ட பணத் தில் வாங்கப்பட்டசில பொருள் களையும் மீட்டனர்.

குறித்த இருவரையும் தலா ஒருலட்சம் ரூபா பெறு மதியான ஆள் பிணையில் செல்வதற்குப் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி அனுமதி வழகியுள்ளார்.

(க-6)

கோரக்கன்கட்டு பலாத்காரச் சம்பவம்; சந்தேகநபருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி கோரக்கன் கட்டுப்பகுதியில் வாய்பேச முடியாத பெண்ணொருவரை வன்புணர முயன்ற குற்றச் சாட்டில் ஒருவருடத்துக்கு மேலாகத் தேடப்பட்டு வந்த சந்தேக நபரை எதிர்வ ரும் 13ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக் குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் 02 ஆம்திகதிகிளிநொச்சி கோரக்கன் கட்டுப்பகுதியில் நாற்பது வயது மதிக்கத்தக்க வாய்பேசமுடியாத பெண் ஒரு வரைப் பாலியல் வன்புணர் விற்கு உட்படுத்த முயன்ற சம்பவம் இடம்பெற்றி ருந்தது. இந்த நிலையில் இதனுடன் தொடர்புடைய பரந்தன் பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கடந்த ஒருவருடமாகக் கிளிநொச்சிப் பொலிஸார் தேடி வந்தனர். இந்த நிலையில் கடந்த 29 ஆம் திகதி குறித்த சம்பவத் துடன் தொடர்புடைய சந்தேக நபரை வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் வைத்து வவுனியாப் பொலிஸாரின் உதவியுடன் கைது செய்த கிளிநொச்சிப் பொலிஸார் அடுத்தநாள் கிளி நொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலை யில் நிறுத்தினர். விசார ணைகளை மேற் கொண்ட நீதிவான் குறித்த சந்தேக நபரை எதிர்வரும் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு உத்தரவிட்டார்.

(க-6)

வடதாரகையில் தமிழ்க் கொலை

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ். குடாநாட்டில் தமிழ்க் கொலைகள் பல்வேறு இடமங்களில் இடம்பொற்று வருகின்றன.

இந்த வகையில் நெடுந் தீவுக்கான சேவையில் ஈடு படும் வடதாரகையிலும் தமிழ்க் கொலைகள் இருக்கத் தான் செய்கின்றன.

நெடுந்தீவுப் பகுதிக் கான கடல் பயணத்தை இலகுவாக்குவதற்கும், மக் களின் நலன் கருதியும் கடந்த வருடம் 8 கோடி ரூபா செலவில் நிர்மாணிக் கப்பட்ட வடதாரகை-2 நெடுந்தீவு மக்களின் சேவைக்காக விடப்பட் டுள்ள நிலையில் இக்கப் பலில் பயணிகளுக்காக அறிவித்தல் விடப்பட்ட வசனப் பலகைகளில் தமிழ்க் கொலைகள் இடம் பெற்றுள்ளமை வேதனை தரும் ஒரு விடயமாக உள் ளது என்று மக்கள் தெரி விக்கின்றனர்.

தமிழ், ஆங்கிலம், சிங் களம் ஆகிய மூன்று மொழி களிலும் பொறிக்கப்பட் டுள்ள இந்த அறிவித்தல் பலகையில் தமிழ் மொழி மட்டும் கொலை செய்யப் பட்டிருப்பது வேதனை தருகின்றது என்று பலதரப் பட்டோர் கருத்துத் தெரிவித் துள்ளனர்.

''மதகுருமாருக்கு மட் டும் ஒதுக்கப்பட்டது, கப்பலின் ஒரு பக்கத்தில் மட்டும் கூடாதீர்கள், குடி தண்ணீர் பாவனைக்கு பிரகு குழாயை மூடவும்'' போன்ற வசனங்களே தமிழ்க் கொலை களுடன் இடம்பெற்றுள் ளன.

வடதாரகையை கரைக்கு கொண்டு வரும் பட்சத்தில் அது கரையில் அடிபட்டு விடும் என்பதற்காகக் கரைக்கு கொண்டு வராதவர்கள் இந்த விடயத்தில் ஏன் கவனம் செலுத்தவில்லை என்று விசனம் தெரிவிக் கப்படுகிறது. (ம)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு இலங்கை சமூர்த்தி அதிகார சபையின் கொடிவார நிதி சேகரிப்பு யாழ். பிரதேச செயலக சமூர்த்தி மகா சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை யாழ். பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்ப நிகழ்வாக சிகரட் மாதிரிகள் தீயிட்டு அழிக்கப்பட்டன. தொடர்ந்து யாழ்.பிரதேச செயலக சமூர்த்தி வங்கியின் முகாமையாளர் திருமதி அலெக்ஸ் பிரபாகரன் பிரதேச செயலருக்கு முதலாவது கொடியை சூட்டி கொடிவாரத்தை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ்வில் யாழ். பிரதேச சமூர்த்தி ஊழியர்கள், சமூர்த்தி பயனாளிகள், பிரதேச செயலக ஊழியர்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-23)

பறவைகளின் எச்சங்களால் வட்டு. ஆஸ்பத்திரி அசிங்கம்

யாழ்ப்பாணம், ஜூன் 1

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலை யில் புறாக்கள் மற்றும் காகங்களின் எச்சங்களால் பெரும் அசௌகரியம் ஏற் படுகின்றது என்று வைத் தியசாலைக்குச் செல்வோர் தெரிவிக்கின்றனர்.

இதனால் ஆஸ்பத்திரி அகச் சூழல் கிருமித் தாக் கத்துக்கு உள்ளாகும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது என் றும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 5 ஆண்டுகளாக இந்த நிலை தொடர்கிறது. இந்த விடயமாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளருக்கு அந்த ஊர் பொது அமைப்புக்கள் கடிதம் எழுதிய போதும் நடவ டிக்கை எதுவும் எடுக்கப்பட வில்லை என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

தற்போது புறாக்கள், காகங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த நிலையில் இதற்கு பொருத் தமான நடவடிக்கை எடுக் கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட் டுள்ளது. (ம-50)

குஞ்சு விளுவளை வயலில் 17 வருடங்களின் பின் காலபோகம்

தென்மராட்சி, ஜூன் 1

அண்மையில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்கு பிரிவில் உள்ள குஞ்சு விளு வளை நெல் வயல்களின் ஒரு பகுதியில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நெற் செய்கைக்கு அனு மதிக்கப்பட்ட சுமார் 50 ஏக்கர் நெல் வயலில் 17 வருடங்களின் பின்னர் காலபோக நெற்செய்கை மேற்கொள்ள நெற்செய்கை யாளர்கள் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நெல் வயல்களில் பயிர்களைக் கட்டாக்காலி கால் நடைகளிடமிருந்து பாதுகாக்க சாவகச்சேரி கம நல சேவைகள் நிலையத் தால் முட்கம்பி வழங்கப்பட் டது. இதனை அடுத்து பாது காப்பு வேலி அமைக்கும் பணி அந்தப் பகுதி கமக்கார அமைப்பால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதேவேளை வயல் களில் வரம்புகள் கட்டும் பணிகளும் வயல் உழவு வேலைகளும் மும்முரமாக இடம்பெற்று வருவதாக கமக்கார அமைப்பின் செய லாளர் இ.தெய்வேந்திரம் பிள்ளை தெரிவித்தார். (ம-9)

முற்றவெளி, கொட்டடி பகுதிகளில் கனரக வாகனம் தரிக்க அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 1

யாழ்.நகரப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங் களுக்குப் பொருள்களை எடுத்துவரும் கனரக வாக னங்கள் யாழ்.முற்றவெளிப் பகுதி மற்றும் கொட்டடி ஆகிய இடங் களில் தரித்து நின்று பொருள் களை இறக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள் ளது.

நகரில் வாகன நெரி சல் அதிகரித்துள்ளதை யடுத்துக் கனரக வாகனங் களை நகரின் பிரதான வீதிகளில் நிறுத்தி பொருள் களை இறக்குவதில் சிரமங் கள் ஏற்பட்டன.

குறிப்பாக ஆஸ்பத்திரி வீதி, கே.கே.எஸ். வீதி, கஸ்தூரியார் வீதி ஆகிய பிரதான வீதிகளில் இவ் வாறு கனரக வாகனங்கள் தரித்து நின்று பொருள் களை இறக்குவதற்கு அனு மதி மறுக்கப்பட்டது.

இதனையடுத்து யாழ். முற்றவெளி, கொட்டடி பகுதிகளில் கனரக வாகனங் களில் இருந்து இறக்கப் படும் பொருள்கள் பின்னர் சிறிய லொறிகளில் ஏற்றப் பட்டு வர்த்தக நிலையங் களுக்கு எடுத்துச் செல்லப் படுகின்றன. (த-17)

சட்டவிரோத மது விற்பனை; இரண்டு லட்சம் ரூபா வசூல்

யாழ்ப்பாணம், ஜூன் 1

கடந்த 4 மாத காலப் பகுதியில் மட்டும் சட்ட விரோதமாக மதுபான விற் பனையில் ஈடுபட்ட 89 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதி மன்றத்தால் 2 லட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ள தாக யாழ். மதுவரித் திணைக் களத்தின் மாவட்டக் கட்டுப் பாட்டு அதிகாரி என்.கிருபா கரன் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தின் தீவகம், யாழ்ப்பாணம், கொக் குவில், ஓட்டுமடம் உட்பட்ட பிரதேசங்களில் யாழ்.மது வரித் திணைக்களத்தின் அனுமதியின்றி மதுபானம் விற்பனை செய்தவர் களுக்கு எதிராகவும் 21 வயதுக்கு உட்பட்டவர் களுக்கு மதுபானம் விற் பனை செய்த நபர்களுக்கு எதிராகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டது.

யாழ்.மாவட்டத்தில் கடந்த நான்கு மாத காலப்பகுதிக் குள் மட்டும் 89 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு 2 லட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணமும் செலுத்துமாறு தீர்ப்பளிக்கப்பட்டது.

அத்துடன் இந்த மாதம் இதுவரை 39 பேர் சட்ட விரோதமாக மதுபான விற் பனையில் ஈடுபட்டமை காரணமாக கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

கடந்த வருடத்தைவிட இந்த வருடம் சட்டவிரோத மது விற்பனையில் ஈடுபட் டவர்களே இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனைய மாவட்டங் களை விட யாழ்ப்பாணத் துக்குத் தற்போது உல்லாசப் பயணிகளின் வருகை அதி கரித்துள்ளதன் காரண மாகவே மதுவரித் திணைக் களத்தால் அனுமதி வழங் கப்பட்ட இடங்களைத் தவிர ஏனைய இடங்களிலும் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-14)

இனந்தெரியாதவர்களால் அண்மையில் தாக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய செயலாளர் ரி.ப.தர்ஷானந்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீ ரங்கா பார்வையிட்டார். (ம)

வடமராட்சி பிரதேசத்தில் மாடு திருட்டு அதிகரிப்பு

வடமராட்சி, ஜூன் 1

வடமராட்சி பிரதேசத் தில் கரவெட்டி, தொண் டமானாறு, மயிலியதனை, கெருடாவில் ஆகிய பகுதிகளில் அடிக்கடி மாடு கள் திருடப்பட்டு வருவ தால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

தொண்டமானாறு மயிலியதனைப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்கும் 4.30 மணிக்கும் இடையில் கந்தசாமி நிர்மலானந்தம் என்ற விவசாயி வீட்டில் கட்டப்பட்டிருந்த 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நாம்பன் மாடு ஒன்று திருடப்பட்டுள்ளது. இதே போல தொண்டமானாறு, கெருடாவில் போன்ற இடங் களிலும் மேய்ச்சலுக்கு விடப்பட்ட சில மாடுகள் திருட்டுப்போயுள்ளன.

கரவெட்டிப் பகுதியில் நெல் அறுவடை முடிவடைந் துள்ளதால் அந்தப் பகுதி விவசாயிகளால் மேய்ச் சலுக்காக விடப்பட்டுள்ள மாடுகள் சோனப்பு வெளி களில் வைத்துப் பகல் வேளைகளில் இனந்தெரி யாதோரால் கடத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறு இதுவரை 9 இற்கும் மேற் பட்ட பசு, நாம்பன் மாடுகள் திருட்டுப் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறைச்சி மாடுகள் பற் றாக் குறையாக உள்ள இந்த வேளையில் திருடப்படும் மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்படலாம் என விவ சாயிகள் மத்தியில் கவலை தெரிவிக்கப்பட் டுள்ளது. (ம-8-253)

தேவையற்ற கட்டடங்கள் அமைப்பதைத் தவிருங்கள்

யாழ். வணிகர் கழகத் தலைவர் கோரிக்கை

யாழ். குடாநாட்டில் தேவை யற்ற இடங்களில் கட்ட டங்கள் அமைக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும் என்று யாழ். வணிகர் கழகத் தலைவர் எஸ்.ஜெயசேகரம் தெரிவித்துள்ளார்.

வணிகர் கழகத்தில் இடம் பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர் பாக அவர் மேலும் தெரி வித்துள்ளதாவது:-

போர் சூழலின் பின் எமது பிரதேசத்தில் அதிக விவசாய நிலங்களில் கட்ட டங்கள் கட்டப்படுவதால் எமது பொருளாதாரம் எதிர் காலத்தில் பெருமளவு பாதிக் கப்படும் நிலைமை ஏற்படும்.

விவசாய நிலங்களில் கூடுதலாக கடைகள் கட் டப்படுகின்றன. கடைகள் தேவைக்கு அதிகமாகக் கட்டப்பட்டு வருகின்றன. மக்கள் மீள் குடியமர்ந்த பகு திகளில் கடைகளைக் கட்டு வது முக்கியமே. அதே போன்று தேவையற்ற இடங் களில் கட்டடங்களைக் கட்டு வது தவிர்க்கப்படவேண்டும்.

விளை நிலங்களை அதற் கான பயன்பாட்டுக்கே உட் படுத்துவதால் எதிர்காலத் தில் ஏற்படக் கூடிய பொரு ளாதார பின்னடைவுகளை நீக் கிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

பெற்றோல் விலையேற்றத்தைக் கண்டித்து

இந்தியா முழுவதும் கடையடைப்பு

டில்லி, ஜூன் 1

பெற்றோல் விலையேற்றத்தைக் கண்டித்து மத்திய அரசுக்கு எதிராக பா.ஜ.க., இடதுசாரிகள் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நேற்று நாடு முழுவதும் முழு அடைப்பு போராட்டத்தில் ஈடுபட்டன. இதனால் டில்லி, பீகார், உத்தரப்பிரதேசம், மகா ராஷ்ட்டிரா, மேற்குவங்கம் தமிழகம் உள்ளிட்ட மாநிலங்களில் இயல்பு வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

தமிழகத்தைப் பொறுத்தவரை பா.ஜ., செல்வாக்கு உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் பெருமளவு ஆதரவு இருந்தது. சென்னை உள்பட ஏனைய மாவட்டங்களில் அரச பஸ்கள் வழக்கம்போல் சேவையில் ஈடுபட்டன. பெரும் பாலான கடைகள் திறந்திருந்தன.

இதுவரை 18 முறை பெற்றோல் விலை உயர்த்தப்பட்டாலும், கடந்த வாரத்தில் ஒரே நாளில் லீற்றருக்கு 7.50 ரூபா அதிகரிக்கப்பட்டது. இதனால் இந்தியா முழுவதும் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. இந்த விலை உயர்வைக் கண்டித்து பா.ஜ., தலைமையிலான தே.ஜ., கூட்டணி சார்பில் நேற்று நாடு முழுவதும் கடையடைப்பு நடத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த கடையடைப்புக்கு பா.ஜ.,கூட்டணி

யில் அங்கம் வகிக்கும் கட்சிகள் பங்கேற்பதுடன் இடதுசாரிகளும் இந்தக் கடையடைப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

பெற்றோல் விலை உயர்வுக்கு தமிழகத்தில் அனைத்துக்கட்சியினரும் எதிர்ப்புத் தெரிவித்தாலும் நேற்றை கடையடைப்புக்கு பெருமளவில் ஆதரவு இல்லை. அரச பஸ்கள் வழக்கம்போல் சேவையில் ஈடுபட்டன. அதிக வாகனங்கள் சேவையில் ஈடுபட்டு சென்னையில் கடையடைப்பைப் பொருட்படுத்தாமல் சேவையில் ஈடுபட்டன. கோவையில் சில பகுதிகளில் மட்டும் ஓட்டோக்கள் சேவையில் ஈடுபடவில்லை. பெருமளவில் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பா.ஜ.வுக்கு செல்வாக்கு உண்டு. எனவே இங்கு 80 சதவீத ஆதரவு இருந்தது. கடைகள் அடைக்கப்பட்டிருப்பதுடன் கேரளாவுக்கு செல்லும் பஸ்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

மும்பை, கொல்கத்தா நகரங்களில் பெருமளவு ஆதரவு இருந்து வருகிறது. கடைகள் அடைக்கப்பட்டு முக்கிய வீதிகள் வெறிச் சோடிக் கிடந்தன. சில இடங்களில் பஸ்மீது கல்வீச்சு சம்பவம் இடம்பெற்றுள்ளது. உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோ மற்றும் அலகாபாத்தில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் சமாஜ்வாடி கட்சியினர் ரயில் மறியலில் ஈடுபட்டனர். பீகார் மாநிலம் பாட்னாவில் மட்டும் கடையடைப்புக்கு ஆதரவு இருந்தது. மும்பையில் சிவசேனா மற்றும் பா.ஜ. தொண்டர்கள் கடும் போராட்டத்தில் ஈடுபட்டனர். குஜராத் மாநிலத்தில் ஓரளவு ஆதரவு இருந்து வருகிறது. பெங்களூரில் பல பஸ்கள் கல்வீச்சில் சேதமடைந்தன.

தமிழகத்தில் பல இடங்களில் ரயில் மறியல் நடைபெற்றது. போராட்டத்தில் ஈடுபட்ட ஆயிரக்கணக்கானவர்களை பொலிஸார் கைது செய்தனர். சென்னை, கோவை, மதுரை, திருச்சி, தஞ்சை, திருவாரூர், திருத்துறைப்பூண்டி, விருதுநகர், உள்ளிட்ட சில பகுதிகளில் ரயில் மறியலில் இடதுசாரிக் கட்சித் தொண்டர்கள் ஈடுபட்டனர்.

விருதுநகரில் மறியலில் ஈடுபட்ட மாணவ சங்க அமைப்பினர் மீது பொலிசார் லேசான தடியடி நடத்தினர். இதில் 6 பேருக்கு காயம் ஏற்பட்டது. (வ)

மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரம்:

இத்தாலிய கடற்படையினருக்கு பிணை

சென்னை, ஜூன் 1

இந்திய மீனவர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட வழக்கில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த இத்தாலி கப்பல் பாதுகாப்புப் படையினருக்கு கேரள உயர்நீதிமன்றம் நிபந்தனையுடன் பிணை வழங்கியுள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் கேரள மாநிலம், கொல்லம் கடற்பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 2 மீனவர்களை அந்த வழியாக வந்த 'என்ரிகோ' என்ற இத்தாலி சரக்குக் கப்பலிருந்த கப்பல் பாதுகாப்புப் படையினர், கடற்கொள்ளையர்கள் என்று நினைத்து சுட்டுக் கொன்றனர்.

இதுதொடர்பாக இத்தாலியக் கடற்படையினரான மாசிமிலானோ, சால்வடோர் ஜிரோன் ஆகிய இருவரை கேரளப் பொலிஸார் பெப்ரவரி 19ஆம்திகதிகைது செய்து சிறையில் அடைத்தனர்.

இவர்கள் தாக்கல் செய்த பிணை மனுவை கொல்லம் நீதிமன்றம் நிராகரித்ததைத் தொடர்ந்து கொச்சி உயர் நீதிமன்றத்தில் இவர்கள் கடந்தவாரம் பிணை மனு தாக்கல் செய்தனர்.

இதுகுறித்து பதில் அளிக்கும்படி கேரள அரசுக்கு உயர் நீதிமன்ற நீதிபதி கடந்த 22 ஆம் திகதி உத்தரவிட்டார். இதைத்தொடர்ந்து இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து, இத்தாலிய சரக்குக் கப்பல் பாதுகாப்பு படையினருக்கு கேரள உயர்நீதிமன்றம் நேற்று பிணை வழங்கி உத்தரவிட்டுள்ளது.

மேலும், இத்தாலியர்கள் 2 பேரும் பிணையத் தொகையான ரூ. ஒரு கோடியை செலுத்திவிட்டு, பிணையில் செல்லுமாறு கேரள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், இத்தாலி கப்பல் பாதுகாப்புப் பாதுகாவலர்களுக்கு 2 இந்தியர்கள் உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்றும் நீதிமன்றம் கேட்டுக்கொண்டுள்ளது. (வ)

இந்திய ஜனாதிபதித் தேர்தலில் மின் வாக்குப் பதிவு இல்லை

தேர்தல் ஆணையம் அறிவிப்பு

டில்லி, ஜூன்1

ஜனாதிபதி தேர்தலுக்கு வழக்கம் போல் வாக்குச் சீட்டு முறையே பயன்படுத்தப்படும் என்றும், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பயன்படுத்தப்படா என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி பிரதீபா பாட்டீலின் பதவிக்காலம் எதிர்வரும் ஜூலை 25 ஆம் திகதி முடிவடைவதால் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் எதிர்வரும் ஜூலை மாதம் இரண்டாவது வாரம் நடைபெற உள்ளது. தேர்தல் அட்டவணையை எதிர்வரும் 12 ஆம் திகதி தலைமை தேர்தல் ஆணையம் வெளியிட உள்ளது.

ஜனாதிபதியை லோக் சபா, ராஜ்யசபா நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநில சட்டசபைகளின் உறுப்பினர்கள் வாக்குத் தேர்வு செய்வர். நாடாளுமன்ற வளாகம் மற்றும் மாநிலதலைநகரங்களில், பெரும்பாலும் சட்டமன்ற வளாகத்தில் வாக்குப்பதிவு நடைபெறும்.

தேர்தலுக்கான ஏற்பாடுகளை தலைமைத்தேர்தல் ஆணையம் செய்து வருவதுடன் மாநில தேர்தல் அதிகாரிகளுடன் இதுதொடர்பான ஆலோசனையை மேற்கொண்டு வருகிறது.

வழக்கமாக ஜனாதிபதித் தேர்தலுக்கு வாக்குச்சீட்டு முறையே பயன்படுத்தப்படும். இந்தமுறை மின்னணு இயந்திரங்கள் பயன்படுத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், வழக்கமான வாக்குச்சீட்டு முறையே பயன்படுத்தப் படும் என தலைமை தேர்தல் ஆணையம் குரேஷி அறிவித்துள்ளார். (வ)

ஆயுதக் கொள்வனவு முறைகேட்டை தடுக்கக் கண்காணிப்புக் குழு நியமனம்

டில்லி, ஜூன்1

பாதுகாப்பு உபகரணங்கள் கொள்வனவு தொடர்பான ஒப்பந்தங்களில் முறைகேடுகள் இடம்பெறுவதைத் தடுக்கும் நோக்கில் மத்திய உள்துறை அமைச்சகம் சார்பில் 2 முன்னாள் அதிகாரிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுவை மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் நியமித்துள்ளார்.

2015ஆம் ஆண்டு வரை வாங்கப்படும் ரூ.10 கோடிக்கும் அதிகமான தொகையிலான பாதுகாப்பு தொடர்பான அனைத்து உபகரணங்களையும் வாங்கும் ஒப்பந்தங்களை கண்காணிக்க முன்னாள் பெட்ரோ கெமிக்கல் துறைச் செயலாளர் எம்.ராமன் மற்றும் முன்னாள் கணக்காய்வாளர் ஜெனரல் சுனில் வர்மா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். மும்பை பயங்கரவாதத் தாக்குதலுக்கு பின்னர் அதிக தொகையில் வாங்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்கள் குறித்து உள்துறை அமைச்சகத்தால் அதிகாரிகள் நியமிக்கப்படுவது இதுவே முதல் முறையாகும்.

2009 ஆம் ஆண்டு தொடக்கம் ரூ.5000 கோடி மதிப்பிலான 90 ஆயிரம் குண்டு துளைக்காத கவசங்கள், 68 ஆயிரம் ஏ.கே., 47 ரக துப்பாக்கிகள், 16 ஆயிரம் துப்பாக்கிகள், 8 ஹெலி கொப்டர்கள் மற்றும் 118 குறைந்த எடை கொண்ட ஆயுத தாங்கிகள் உள்ளிட்ட ஆயுதம், வெடிபொருள்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கப்பட்டுள்ளன.

மத்திய சுங்கவரித்துறை கழகத்தின் ஆலோசனையின் பேரில் மத்திய உள்துறை அமைச்சகம் புதிய அதிகாரிகள் குழுவை நியமித்துள்ளது. இவர்கள் கடந்த 16 ஆம் திகதி நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இவர்களுக்கான மாத ஊதியம் ரூ.26 ஆயிரம் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. (வ)

புதிய இராணுவத் தளபதியாக பொறுப்பேற்றார் பிக்ரம் சிங்



டில்லி, ஜூன்1

இந்திய ராணுவத்தின் புதிய தலைமைத் தளபதியாக ஜெனரல் பிக்ரம் சிங் நேற்று பொறுப்பேற்றார். 2010 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி இராணுவத் தலைமைத் தளபதியாக வி.கே.சிங் பொறுப்பேற்றார். நேர்மையான அதிகாரி என்று போற்றப்பட்ட அவர், வயது தொடர்பான சர்ச்சையில் சிக்கினார். இவ்வாறு பல சர்ச்சைகளைச் சந்தித்த பின் அவர் நேற்றுடன் தனது பதவியிலிருந்து ஓய்வு பெற்றார்.

இந்த நிலையில், பல்வேறு சிக்கலில் வி.கே.சிங் சிக்கியபோது அவரை இடைக்கால பணிநீக்கம் செய்ய வேண்டும் என்று மத்திய அரசு வலியுறுத்தி வந்தபோதே, அடுத்த இராணுவத் தளபதியாக ஜெனரல் பிக்ரம் சிங் அறிவிக்கப்பட்டார். இதனையடுத்து, 43 ஆண்டு காலம் இராணுவத்தில் பணியாற்றிய இராணுவத் தலைமைத் தளபதி வி.கே.சிங் நேற்று ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து, தற்போது கிழக்கு மண்டலத் தளபதியாக இருந்த ஜெனரல் பிக்ரம் சிங், புதிய இராணுவத் தளபதியாக பொறுப்பேற்கிறார். (வ)

கருணாநிதியின் பிறந்தநாள்:

சென்னை செல்ல அனுமதி கோரி நீதிமன்றில் கனிமொழி மனு

தி.மு.க. தலைவர் கருணாநிதியின் பிறந்த தினத்தையொட்டி சென்னை செல்ல அனுமதிகோரி அந்தக் கட்சியின் மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி டில்லி சி.பி.ஐ. சிறப்பு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்.

2ஜி ஸ்பெக்ட்ரம் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள கனிமொழி, அந்த வழக்கு விசாரணைக்காக டில்லியில் தங்கி இருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், அவருடைய தந்தை கருணாநிதியின் பிறந்தநாள் கொண்டாடப்படுகிறது. எனவே இதையொட்டி, சென்னை செல்ல அனுமதி கோரி, டில்லி சி.பி.ஐ. நீதிமன்றத்தில் கனிமொழி மனுத் தாக்கல் செய்துள்ளார்.

பேஸ்புக்கின் கோரிக்கையை நிராகரித்தது நீதிமன்றம்

டில்லி, ஜூன் 1

சர்ச்சைக்குரிய கருத்துக்கள் வெளியிடப்பட்டமை தொடர்பாக தொடரப் பட்ட வழக்கில் இருந்து தங்களை விடுவிக்க வேண்டும் என்ற பேஸ்புக் இணையத்தளத்தின் கோரிக்கையை டில்லி நீதிமன்றம் நிராகரித்து விட்டது.

பல்வேறு மதங்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் கருத்துக்கள் இணையத்தளத்தில் இடம் பெறுவதாகக் கூறி டில்லியைச் சேர்ந்த முப்தி அஜாஸ் என்பவர் பேஸ்புக், கூகுள், யாஹூ மற்றும் சில இணையத்தளங்களுக்கு எதிராக டில்லி சிவில் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

பேஸ்புக் இந்தியா இணையத்தளத்தின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி வாதிடுகையில், பேஸ்புக் இணையத்தளத்தில் வெளியாகும் கருத்துக்கு நிறுவனம் பொறுப்பேற்க முடியாது. இணையத்தளத்தின் சேமிப்பகங்கள் அமெரிக்காவில் உள்ளன. எனவே, அதை இயக்கவோ, கட்டுப்படுத்தவோ முடியாது. எனவே, வழக்கில் இருந்து எங்கள் நிறுவனத்தை விடுவிக்க வேண்டும் - என்றார். இந்தக் கோரிக்கையை ஏற்க மறுத்த நீதிபதி பர்வீன் சிங், வழக்கு விசாரணையை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (வ)

பாம்பு வடிவில் ரோபோ

இதய சிகிச்சைக்குப் பயன்படும் பாம்பு வடிவிலான ரோபோவை, அமெரிக்க விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

மருத்துவத்துறையில், பல சிக்கலான சிகிச்சைக்களுக்கு ரோபோ பயன்படுத்தப்படுகிறது. அமெரிக்காவின் பரிஸ்பைடெரியன் மருத்துவமனை இதய நிபுணர் மைக்கேல் அர்ஜென்சியானோ தலைமையிலான குழுவினர், பாம்பு வடிவிலான மெல்லிய ரோபோவை வடிவமைத்துள்ளனர். இதய சிகிச்சை மற்றும் புராஸ்டேட் புற்றுநோய் அறுவை சிகிச்சை போன்றவற்றை எளிதாக மேற்கொள்ள, இந்த ரோபோ பெரிய உதவியாக இருக்கும். இந்த ரோபோவுக்குள் சிறிய கமரா, கத்தரிக்கோல், இடுக்கி என மற்றும் பல மருத்துவ கருவிகள் உள்ளன. நோயின் தன்மைக்கேற்ப சிகிச்சை மேற்கொள்ளும் வகையில் இந்த ரோபோ வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ரோபோவை வடிவமைத்த விஞ்ஞானிகள் குழு குறிப்பிடுகையில், ''இதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள பெரிய அளவில் மார்புப் பகுதியை கிழிக்க வேண்டியதில்லை. எந்த இடத்தில் அறுவைச் சிகிச்சை தேவையோ, அந்தப் பகுதியில் மட்டும் துளையிட்டு, இந்த பாம்பு ரோபோவை உள்ளே செலுத்தி சிகிச்சை செய்யலாம். சிறிய வலியுடன் இந்தச் சிகிச்சை முடிந்து விடுவதால், நோயாளி விரைவில் குணமடைய வாய்ப்பு உள்ளது. புற்றுநோய்க் கட்டிகள் போன்றவற்றை அறுவை சிகிச்சை செய்யும் போது, அதனுடன் பிணைந்துள்ள நரம்புகள் துண்டிக்காமல் இருக்கவும் இந்த ரோபோ உதவுகிறது.

பெரிய அளவு கொண்ட பாம்பு ரோபோவையும் உருவாக்கியுள்ளோம். மீட்பு பணிகள், குகைகளுக்குள் சென்று ஆய்வு மேற்கொள்வது, மனிதர்கள் செல்ல முடியாதஇடங்கள், மரத்தின் உச்சி உள்ளிட்ட பகுதிகளில் இந்த பெரிய பாம்பு ரோபோவை பயன்படுத்தலாம்'', என்று தெரிவித்தனர்.

நேபாள மாவோ அரசு கலைக்கப்பட வேண்டும்

நேபாளத்தில் இப்போது பதவியில் உள்ள மாவோயிஸ்ட் தலைமையிலான காபந்து அரசைக் கலைக்க வேண்டும் என்று ஜனாதிபதி ராம் பரண் யாதவை எதிர்க் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. நேபாள காங்கிரஸ் சி.பி.என்-யு.எம்.எல், ராஷ்ட்ரிய பிரஜா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட 16 கட்சிகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

தங்களது கோரிக்கை நிறைவேற்றப்படா விட்டால் நாடு முழுவதும் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அவை அச்சுறுத்தியுள்ளன. நாட்டில் தேர்தல் நடத்துவதை தாங்கள் எதிர்க்க வில்லை என்றும், ஆனால் மாவோயிஸ்ட் தலைமையிலான அரசு தேர்தல் நடத்துவதை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.

இது தொடர்பாக கூட்டறிக்கையை கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் நேற்றுக் கையளித்தனர். புதிய அரசில் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும்

இடம்பெற வேண்டும். அப்போதுதான் தேர்தல் நேர்மையானதாகவும், நியாயமானதாகவும் நடைபெறும் என்று நேபாள காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராமசந்திர புதியால் தெரிவித்தார். காபந்து அரசைக் கலைத்து அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் இடம்பெறும் வகையிலான அரசை ஏற்படுத்திய பின்னர் தேர்தல் நடத்த வேண்டும். இதற்கு ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டனர்.

பிற கட்சிகளைக் கலந்து ஆலோசிக்காமல் நவம்பர் 22ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று காபந்து அரசின் பிரதமர் பாபுராம் பட்டராய் அறிவித்துள்ளார். இது ஜனநாயக விரோதமானது என்றும் புதியால் சுட்டிக்காட்டினார்.இடைக்கால அரச அமைப்பை நடைமுறைப்படுத்தாமல் தேர்தல் திகதியை அறிவித்ததன் மூலம் பிரதமர் மாபெரும் தவறைச் செய்து விட்டார் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டினர். இவ்வாறு தேர்தல் நடத்துவதற்கு விதி முறையில் இடமில்லை என்றும், அரசுக்கு எதிராக பிற கட்சிகளுடன் இணைந்து போராட்டம் நடத்தப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதைத் தவிர்க்க வேண்டுமெனில் தேசிய ஒருங்கிணைந்த அரசு ஒன்றை அமைக்க வேண்டும். ஜனநாயக மற்றும் சட்ட விதிகளின்படி இதை நியமிக்கலாம் என்று சி.பி.என்-யு.எம்.எல் கட்சித் தலைவர் சி.பி. மைனாளி கூறினார். அரசியல் நிர்ணய சபைத் தேர்தல் என்பது ஒரு மித்த கருத்து எட்டப்படாமல் நிறைவேறாது எதிர்க்கட்சியினர் தெரிவித்தனர்.

பிரதமரின் உத்தியானது, குறுக்கு வழியில் மாவோயிஸ்டுகள் மூலமாக ஆட்சியைக் கைப்பற்றி விடுவதுதான் என்று ராஷ்ட்ரிய ஜனசக்தி கட்சித் தலைவர் சூர்யபக தூர் தாபா தெரிவித்தார். தேர்தல் நடத்தும் பிரதமரின் முடிவை எதிர்த்து கடந்த செவ்வாய்க் கிழமை அந்த நாட்டு உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

ஓய்வு...



சோமாலியாவில் உள்நாட்டு மோதல்களில் ஈடுபட்டிருக்கும் போராளிகள் தாம் கைப்பற்றிய பகுதி ஒன்றின் தெரு ஒன்றில் ஓய்வெடுக்கின்றனர்.

மியன்மார் பிரஜைகளை தாய்லாந்தில் சந்திக்கிறார் சூகி

மியன்மாரின் எதிர்க் கட்சித் தலைவி ஆங் சாங் சூகி தாய்லாந்தில் உள்ள தமது நாட்டுப் பிரஜைகளைச் சந்திக்கவுள்ளார்.

மியன்மாரைச் சேர்ந்த ஒரு இலட்சத்து 30 ஆயிரம் பேர் தாய்லாந்தில் வசிக்கின்றனர் என்று குறிப்பிடத் தக்கது. இரண்டு தசாப்தங்களுக்கு பின்னர், முதல் தடவையாக தாய்லாந்துக்கான பயணத்தில் ஆங் சாங் சூகி ஈடுபட்டுள்ளார்.

நீண்ட இடைவேளையின் பின்னர் வெளிநாடு ஒன்றுக்கான பயணத்தில் மியன்மார் எதிர்க்கட்சித் தலைவர் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ள ஆங் சாங் சூகிக்கு அண்மையிலேயே கடவுச் சீட்டு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யேமனில் 31 பேர் சாவு

ஏடன், ஜூன் 1

யேமன் நாட்டின் பாதுகாப்புப்படையினருக்கும் அல் குவைதாவுக்கும் இடையே நடைபெற்ற பரஸ்பர தாக்குதல்களில் 22 தீவிரவாதிகள் உள்பட 31 பேர் உயிரிழந்தனர்.

அல்குவைதாவின் ஆக்கிரமிப்பில் யேமனில் நாட்டின் தெற்குப் பகுதி உள்ளது.

இங்குள்ள அபயான் மாகாணத்தில் ஜார் என்ற இடத்தில் அல்குவைதாவினர் மீது யேமன் இராணுவத்தினரும் அமெரிக்கப் படையினரும் இணைந்து தாக்குதல் நடத்தினர். இரு தரப்பிலும் பயங்கர துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 21 அல்குவைதா தீவிரவாதிகள் மற்றும் 6 இராணுவத்தினர் என 31 பேர் உயிரிழந்தனர்.

இதேபோன்று யேமனின் சானா, ராடா ஆகிய நகரங்களிலும் அல்குவைதாவினரின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதால் அங்கும் இராணுவத்தினர் தீவிர தேடுதல் நடத்தி வருகின்றனர் என இராணுவத் தளபதி ஒருவர் தெரிவித்தார்.

தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்தாலேயே சிறை

இஸ்லாமாபாத், ஜூன் 1

பாகிஸ்தான் மருத்துவர் ஷகில் அப்ரிடிக்கும் தடை செய்யப்பட்ட தீவிரவாத இயக்கத்துக்கும் இடையே தொடர்பு இருந்த குற்றத்துக்காகத்தான் அவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்பட்டது என்று நீதிபதிகள் தெரிவித்தனர்.

முன்னதாக அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ உடன் தொடர்பு வைத்திருந்ததால் தண்டனை அளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டதை நீதிபதிகள் மறுத்தனர்.

தடைசெய்யப்பட்ட லஷ்கர்-இ-இஸ்லாம் இயக்கத்துடன் தொடர்பு வைத்திருந்ததால் அப்ரிடிக்கு 33 ஆண்டு சிறைத் தண்டனை மற்றும் ரூ. 3.20 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டது.

''தீவிரவாத இயக்கத்துக்கு நிதியுதவி அளித்தது, காயமடைந்த தீவிரவாதிகளுக்கு சிகிச்சை அளித்தது, பாதுகாப்புப் படையினர்மீது தாக்குதல் நடத்தியது'' உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்குத்தான் அப்ரிடிக்குத் தண்டனை வழங்கப்பட்டது. சி.ஐ.ஏ அமைப்புடன் அவருக்கு இருந்த தொடர்புக்காக அல்ல'' என்று நீதிபதிகள் தெரிவித்துள்ளனர் என 'டொன்' செய்திச் சேவை குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், அப்ரிடிக்கும் சி.ஐ.ஏ இற்கும் உள்ள தொடர்பு குறித்து வரும் காலத்தில் நடைபெறும் விசாரணையில் அவர் கூற வேண்டும் என்றும் நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

தீவிரவாதி ஒசாமா பின் லேடனை அமெரிக்கப் படையினர் கடந்த ஆண்டு மே 2ஆம் திகதி அதிரடித் தாக்குதல் மூலம் சுட்டுக் கொன்றனர்.

பின்லேடன் கொல்லப்பட்டவுடன், சி.ஐ.ஏ அமைப்புக்கு உதவி செய்ததாகக் கூறி அப்ரிடி கைது செய்யப்பட்டார். பாகிஸ்தானின் இந்த நடவடிக்கைக்கு அமெரிக்கா கண்டனம் தெரிவித்திருந்தது.

அப்ரிடிக்கு சிறைதண்டனை வழங்கப்பட்டதற்கு அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளியுறவுத்துறை அமைச்சர் ஹிலாரி கிளின்ரன் மற்றும் மனித உரிமை ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அப்ரிடியின் சகோதரர் ஜமைல் அப்ரிடி மற்றும் வழக்குரைஞர்கள் இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்வதாகத் தெரிவித்தனர்.

இதற்கிடையில் அப்ரிடி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெஷாவர் சிறையில் அவருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது எனத் தெரியவருகின்றது.

அவர் மீது கோபத்தில் இருக்கும் ஏனைய தீவிரவாத அமைப்புக்கள் சிறைக்குள் வைத்தே அவரைக் கொலை செய்யதிட்டமிட்டிருக்கின்றன எனப் பாகிஸ்தான் உளவு அமைப்பு எச்சரித்துள்ளது.

நாடு கடத்தப்படுகிறார் விக்கி லீக்ஸ் அசாஞ்சே

விக்கிலீக்ஸ் இணைய தள நிறுவனர் ஜூலியன் அசாஞ்சேயை சுவீடனிடம் ஒப்படைக்க பிரிட்டன் உச்ச நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது. ஜூலியன் அசாஞ்சே கடந்த ஆண்டிலிருந்து குறித்த குற்றச்சாட்டின் காரணமாக நீதி மன்றதத்தால் விசாரிக்கப் பட்டு வந்த நிலையில் பிரிட்டன் நீதிமன்றம் இந்த தீர்ப்பை அவருக்கு அளித்துள்ளது.

விக்கிலீக்ஸ் இணையத் தள நிறுவுநரான அசாஞ்சே தனது இணையதளத்தில் அமெரிக்கா உள்பட பல நாடுகளைப் பற்றிய அரசு மற்றும் இராணுவ ரகசியங்களை வெளியிட்டு உலகம் முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியவர். இந்த இணைய தள நிறுவனத்தில் பணிபுரிந்த சுவீடனைச் சேர்ந்த 2 பெண்கள், ஜூலியன் அசாஞ்சே மீது பாலியல் பலாத்கார புகார் அளித்திருந்தனர். அவற்றின் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு குறித்து விசாரணை நடத்த அசஞ்சேவை சுவீடனிடம் ஒப்படைக்க அந்த நாட்டு அரசு கோரியிருந்தது. இந்த வழக்கு தொடர்பாக லண்டனில்கைது செய்யப்பட்ட அசாஞ்சே, தன்னை சுவீடனுக்கு நாடு கடத்த கூடாது எனக் கோரி லண்டன் நீதி மன்றத்தில் முறையீடு செய்திருந்தார். அது தள்ளுபடியானது. அதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அதை விசாரித்த நீதிபதிகள், நேற்றுமுன்தினம் விசாரணைக்காக அசாஞ்சேயை சுவீடனுக்கு நாடு கடத்தலாம் எனத் தீர்ப்பளித்தனர்.

யுரேனியம் செறிவூட்டல் ஈரானின் அடிப்படை உரிமை

யுரேனியம் செறிவூட்டல் என்பது ஈரானின் அடிப்படை உரிமை, அதற்காக அணு குண்டைத் தயாரிப்பதற்கான முயற்சி என அர்த்தம் கொள்ளக் கூடாது என அந்த நாட்டின் ஜனாதிபதி முகமது அகமது நிஜாத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து இவர் மேலும் கூறுகையில், ஈரான் தனது எரிசக்திக்காகவே இந்த ஆண்டு யுரேனியம் செறிவூட்டலை 20 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தச் செறிவூட்டல் சர்வதேச விதிகளுக்கு உள்பட்டுதான்நடக்கிறது.இதனை மேற்குலக நாடுகள் தவறாக எடுத்துக் கொள்கின்றன.



யுரேனியம் செறிவூட்டல் ஈரானின் அடிப்படை உரிமை. அதற்காக அணு குண்டு தயாரிப்பதற்கான முயற்சி என அர்த்தம் கொள்ளக்கூடாது.

மேற்குலக நாடுகள் இது குறித்துத் தீவிரமாகப் பரிசீலிக்க முன்வந்தால் நாங்கள் 20 சதவீத யுரேனியம் செறிவூட்டலை நிறுத்தி வைக்கத் தயார் என்றார்.

கவர்ச்சிகரமாய் ஆடை அணிந்த மனைவியைக் கொன்ற கணவன்

இத்தாலியின் ரோம் நகரில் வசிக்கும் இந்தியர் ஒருவர் தன் மனைவி கவர்ச்சிகரமாக ஆடை அணிந்ததற்காக அவரைக் கொலை செய்துள்ளார். இது குறித்து மேலும் தெரிவருவதாவது

இத்தாலியின் பிசேலி கோட்டூஸ் வில்வேஜ் பகுதியைச் சேர்ந்தவர் சின்ஜ் குல்பர். இந்தியரான இவர் கடந்த 10 வருடங்களாக இத்தாலியில் குடும்பத்துடன் வசித்து வருகிறார். குல்பீரின் மனைவி கவுர் பல்விந்தே. தற்போது கவுர் 3 மாத கர்ப்பிணியாக இருக்கின்றார். கடந்த சில மாதங்களுக்கு முன்பு கவுர் திடீரென மாயமானார். கவுரின் தந்தை கொடுத்த புகாரின் பேரில் பொலிஸார் அவரைத் தேடி வந்தனர். குல்பரிடம் கேட்ட போது, தன்னுடன் வாழப் பிடிக்காமல் கவுர் சென்று விட்டார் எனக் கூறினார். இந்த நிலையில், கவுரின் சடலம் அந்தப்பகுதியில் உள்ள நதிக்கரையோரத்தில் கடந்த சில நாள்களுக்கு முன்பு கண்டுபிடிக் கப்பட்டது.

பொலிஸார் சடலத்தைக் கைப்பற்றி விசாரணை நடத்தினர். அதில் கணவர் மீது சந்தேகம் ஏற்பட்டது. அவரிடம் நடத்திய தீவிர விசாரணையில், மனைவியைக் கொன்றதை ஒப்புக் கொண்டார். பொலிஸில் அவர் அளித்துள்ள வாக்குமூலத்தில், என் மனைவி கவுருக்கு இந்திய பாரம்பரிய ஆடைகள் பிடிக்க வில்லை. அவர் கவர்ச்சியான மேற்கத்திய பாணி உடைகளையே அணிந்தார். அது எனக்குப் பிடிக்காத தால் பலமுறை எடுத்துக் கூறினேன்.

ஆனால் அவர் கேட்கவில்லை. பிடிவாதமாக கவர்ச்சி ஆடைகளையே அணிந்து வந்தார். இது என் கோபத்தை அதிகரித்தது. அதனால் அவரைக் கொலை செய்தேன் எனக் கூறியுள்ளார்.

சிரிய விடயத்தில் ஐ.நா. புதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடாது

சிரிய நெருக்கடியை தீர்ப்பது தொடர்பான புதிய நடவடிக்கைகள் குறித்து ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை கவனம் செலுத்தக் கூடாதென ரஷ்யா கூறியுள்ளது.

இராணுவத் தலையீடுகள் தொடர்பான எந்தவொரு நடவடிக்கைகளும் தடைசெய்யப்படும் என்பதன் ஒர் அறிகுறியாக இந்த அறிவிப்பு உள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இராணுவத் தலையீடுகள் குறித்துப் பிரான்ஸ் ஜனாதிபதி பின்சுவா ஹோலண்ட் எச்சரித்துள்ள நிலையில் ரஷ்யா இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இதனிடையே சிரியா தொடர்பாகப் ஐ.நா பாதுகாப்புப் சபையின் புதிய நடவடிக்கைகளுக்கான அழுத்தத்தை கொடுக்கவுள்ளது என ஜேர்மனியும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிரிய ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படும் நிலையில், ரஷ்யா, சீனா போன்ற நாடுகள் சிரியாவுக்குத் தொடர்ந்தும்ஆதரவுவழங்கிவருகின்றன.

சிரிய அரசுக்கு ஆயுத ரீதியான உதவிகளை வழங்கி வரும் ரஷ்யா நேரடியாக கருத்துச் சொல்லியது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

எயிட்ஸ் நோயாளர்களுக்கு சிறுமிகள் மணம் முடித்து வைக்கப்படுகின்றனர்

தென் ஆபிரிக்காவின் கிழக்கு கேப் பிராந்தியத்திலுள்ள கிராமப் பகுதியில் எயிட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட முதியவர்களுக்கு, அப்பாவி சிறுமிகள் திருமணம் செய்து வைக்கப்படுகின்றனர் என்ற அதிர்ச்சித் தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

கன்னித் தன்மையை இழக்காத சிறுமிகளுடன் உறவு வைத்துக் கொள்வது எயிட்ஸ் நோயைக் குணப்படுத்தும் என்ற மூட நம்பிக்கை அந்தப் பிராந்தியத்தில் நிலவுகின்றமையே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுமிகளின் பெற்றோருக்குப் பணத்தை வழங்கிய பின் அவர்களின் அனுமதியுடன் அந்தச் சிறுமிகளை எயிட்ஸ் தொற்றால் பாதிக்கப் பட்ட வயோதிபர்களுக்கு சட்டபூர்வமாக திருமணம் செய்து வைக்கின்றனர் என்பதும் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் மேற்படி பிராந்தியத்தில் பிறந்து வளர்ந்தவரும், உலக எயிட்ஸ் நோய் எதிர்ப்புப் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளவருமான நொம்பாஸா ஸகுலுவே, தனது பிராந்தியத்தில் சிறுமிகள் அனுபவிக்கும் கொடுமைகளுக்கு எதிராகப் போராடி வருகிறார்.

லுஸி கிஸிகி கிராமத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர் விவரிக்கையில், எனது வீட்டின் அருகில் வசிக்கும் பெண்ணொருவர் என்னிடம் திருமணம் செய்வதற்கு விருப்பமா என்று வினாவினார். நான் இல்லை எனப் பதிலளித்தேன். நான் மறுத்தால் என்னைப் பலவந்தமாக அடித்து உதைத்துத் திருமணத்தை நடத்த நேரிடும் என அச்சுறுத்தினார்.

மறுநாள் இரவு அந்தப் பெண் எனது வீட்டிற்கு வந்து என்னை ஆற்றங்கரை ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். அங்கு 7 பேர் காத்திருந்தனர்.

அவர்கள் என்னை வயதான நபர் ஒருவரின் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். எனக்கு அங்கு திருமணம் நடைபெறுகிறது என்பதை என்னால் நம்ப முடியாமல் இருந்தது என்று தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ சந்திரசேகரவிநாயகர் திருக்கோயில்
மஹோற்சவம் - 2012

01.06.2012 வெள்ளிக்கிழமை

மாலை 6.00 மணிக்கு சப்பரத்திருவிழா
தினமும் நண்பகல் அன்னதானம் இடம் பெறும்
(18376)(45.6.9) கோண்டாவில் மேற்கு

சுழிபுரம் பறாளாய்
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்
சப்பர வெள்ளோட்டப் பெருவிழா

நாளை (02.06.2012) சனிக்கிழமை மாலை 6.30 மணிக்குப் புதிதாக அமைக்கப்பட்ட சப்பர வெள்ளோட்டப் பெருவிழாவும் விசேட மேள வாத்திய இசையுடன் சுவாமி வீதி உலாவும் இடம் பெறும் என்பதை அடியார்களுக்கு அறியத்தருகின்றோம்.

- உபயகாரர்.
பறாளாய், சுழிபுரம்.
(18822)(2-6-7-9)

தசாக கிருகயக்ஞ அழைப்பு

24.05.2012 வியாழக்கிழமை அமரத்துவமடைந்த எமது குடும்பத் தலைவர்
பிரம்மஸ்ரீ குகானந்தசர்மா இரத்தினேஸ்வரஜயர்

அவர்களின் தசாகாதி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

தசாகம்	02.06.2012 சனிக்கிழமை	முற்பகல் 10.00 மணி
ஏகோதிஷ்டம், மாசியம்	03.06.2012 ஞாயிற்றுக்கிழமை	முற்பகல் 10.00 மணி
சபிண்டீகரணம்	04.06.2012 திங்கட்கிழமை	முற்பகல் 10.00 மணி
கிருகயக்ஞம்	05.06.2012 செவ்வாய்க்கிழமை	முற்பகல் 11.00 மணி

மேற்படி கிரியைகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு 05.06.2012 செவ்வாய்க்கிழமை மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

"ஸ்ரீநிவாசா"
8ஆம் கட்டை ஒழுங்கை, தெல்லிப்பழை.

மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(18795) (6,9,10)

கண்டி - வத்துகாமம்
அருள்மிகு
ஸ்ரீ முத்துமாரி
அம்மன் தேவஸ்தானம்

பஞ்சரதபவனிப் பெருவிழா

துவஜாரோஹணம் 20.05.2012
துவஜ அவரோஹணம் 03.06.2012

பஞ்சரத பவனி - 02.06.2012 சனிக்கிழமை

" சர்வதேச இந்துமத குருபீடாதிபதி - சபரிமலைக்குருஜீ"
'சிவாகம விலாரத்' - 'சிவாகம கலாநிதி'
ஆன்மிக அருள்ஜோதி
ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யார் J.P.
(சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி - தலைவர், இந்து சமய கலாசார முத்தமிழ் சங்கம்)
அவர்களின் பூரண அருளாசியுடன் மஹோற்சவம் நடைபெறும்.
அனைவரும் வருக!
அன்னை அருள் பெறுக!

ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்
ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானம்
வத்துகாமம்.
(சி/263) (2-6-7-9)
நிர்வாகஸ்தர்கள்,
சைவ அபிமானிகள் சங்கம், வத்துகாமம்.

கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(24)

ஒருநாள் தன்னைக்காண வந்த நண்பர் ஷீல்லரிடம் ஆண்ட்ரி சொன்னார், '' என் வாழ்வின் பெரிய துக்கம் அது. என்னுடைய அத்தனை துணிவையும் நம்பிக்கையையும் திரட்டிக் கொண்டு அதை நான் காதில் வாங்கினேன்''. ''உன்னை விட்டு விலகுவதும் இல்லை. உன்னைக் கைவிடுவதும் இல்லை'' என்கிற தேவ வார்த்தைகளில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதை வழங்கியவரிடத்திலும் நான் நம்பிக்கை வைத்திருக்கிறேன் என்று.

''உங்களுடைய அன்பான மனைவியையும் அருமையான மகளையும் பறிகொடுத்துவிட்டீர்கள். கடவுள் இரக்கமற்றவர் என்ற எண்ணம் உங்களுக்குத் தோன்றவில்லையா?'' ஷீல்லர் கேட்டார்.

''கடவுள் அவர்களை அழைத்துக் கொண்டார். மகனை என்னோடு விட்டு வைத்திருக்கிறார். இரண்டுமே இறைவனின் விருப்பப்படி நடந்திருக்கிறது. அவருடைய திட்டத்தை ஏற்று வாழ்வதில் எனக்கு எந்த வருத்தமும் இல்லை'' என்றார் ஆண்ட்ரி.

கடவுள் நமக்கு வழங்கிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு நாளிலும், அவருடைய பெருங்கருணையை நாம் அனுபவித்து உணர முடியும்.

நாம் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியிலும் இறைவன் நம்முடன் இருந்து நம்மை வழி நடத்துகின்றான்.

சின்னதாய் உருவகக் கதையொன்று.

ஒரு மனிதன் கடவுளிடம் சொன்னான்: நான் மகிழ்ச்சியாயிருந்த போதெல்லாம் என்னோடு இருந்த நீர் சோதனைக் காலத்தில் என்னைக் கைவிட்டு விட்டீரே! என்றான்.

கடவுள் கேட்டார், '' நீ எதனால் அப்படிச் சொல்கிறாய்?'' என்று ''நான் மகிழ்ச்சியாயிருந்த போது என் பாதை நெடுகிலும் எனது பக்கமாய் நீரும் வந்தீர். எனது சுவடுகளுக்கு அருகே உமது சுவடுகளும் இருந்தன. நான் துயர் படும் காலத்திலோ ஒரு ஜோடி காலடிச் சுவடுகள் மட்டுமே இருந்தன. அது என்னுடைய சுவடுகள் என்றால் உம்முடைய சுவடுகள் இல்லைத்தானே. நீர் என்னைக் கைவிட்டது உண்மைதானே?'' என்றான் அந்த மனிதன்.

கடவுள் சிரித்தார். ''மகனே, அது என்னுடைய சுவடுகள். அந்தக் கால கட்டத்தில் நான் உன்னை எனது தோள்களில் சுமந்து வந்தேன்'' என்றார்.

''நான் உன்னை விட்டு விலகுவதில்லை. உன்னைக் கைவிடுவதுமில்லை'' என்கிற வாக்குறுதியை அவர் எப்போதுமே காப்பாற்றி வருகிறார்.

இந்த உலகில் உங்களுடைய சோகம் தான் மிகப் பெரியது என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். உங்களைவிட மோசமான நிலையில் நிறையப் பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எதையெல்லாம் இழந்தோம் என்று பட்டியலிட்டுக் கொண்டிராமல், எதுவெல்லாம் மிச்சமிருக்கிறது என்று பாருங்கள்.

உங்கள் தோல்வியின் போது எண்ணிக் கொள்ளுங்கள் அதற்கு முன் நீங்கள் பெற்ற வெற்றிகளை. நீங்கள் கவலைப்படுகிற நிலையில் நினைவு கூருங்கள் வாழ்வில் அதற்கு முன் உங்களுக்கு வந்த மகிழ்ச்சிகரமான தருணங்களை நாம் எண்ணி வியப்பதற்கும், இறைவனுக்கு நன்றி சொல்வதற்கு எத்தனையோ விசயங்கள் உள்ளன.

மனித மனம் விசித்திரமானது. ''தன் தோட்டத்து மலர்களை அது கணக்கில் கொள்வதில்லை. காய்ந்த சருகுகளைக் குவித்து வைத்துக் கொண்டு 'இதுவா, வாழ்க்கை' என்று கேட்கும்.

நாம் தெரிந்தோ, தெரியாமலோ செய்யும் தவறுகளின் விளைவு தான் நம்முடைய வருத்தமும், கவலையும், வேதனையும் இதனைப் புரிந்து கொள்கிற போது வாழ்வின் புதிர்கள் ஒவ்வொன்றாய் விடுபடும். இறைவனின் திட்டமும் ஒருநாள் நமக்குப் புரிய வரும்.

தியானத்தில் கிடைக்கும் தீர்வு

தியானம் என்றாலே ஆன்மிக சாதனம், இறையுணர்வோடு இருந்து இறைவனைக் காண்கிற பயிற்சி என்று எண்ணிவிடக் கூடாது. தியானம் ஒரு மகத்தான சக்தி. தியானத்தின் மூலம் பல அற்புத அனுபவங்களைப் பெற முடியும். அந்த அனுபவங்களை ஓரளவுக்கு மேல் வார்த்தையால் விவரிக்க முடியாது. அனுபவித்தே அறிய வேண்டும்.

தியானம் மன ஆற்றலை அதிகரிக்கிறது. மனதை ஒருமுகப்படுத்தி முயல்கிறவர்களுக்கே அது வாய்க்கிறது.

எங்கெங்கோ அலைந்து திரிகிற மனதை இழுத்துப் பிடித்து, ஒரு நிலையில் நிறுத்தும் முயற்சியே தியானம்.

மனதில் ஓயாமல் அலையடித்துக் கொண்டிருக்கும் எண்ண அலைகள்! எண்ணங்கள் சக்தி மிக்கவை. எண்ணம் ஏற்படுத்துகிற பாதிப்பு நல்ல விதமாக இருக்குமோ, கெட்ட விதமாக இருக்குமோ என்பது எண்ணத்தின் இயல்பைப் பொறுத்தது.

எண்ணங்கள் நம்முடைய ஆழ்மனதில் பதிவுகளை ஏற்படுத்தும். பிறகு அந்த எண்ணங்கள் வலுப்பெற்று செயலாய் வெளிப்படும். நல்ல எண்ணங்கள் நம்முடைய வாழ்க்கையை மேம்படுத்தும். எதிர்மறை எண்ணங்களில் மனம் பலவீனப்படும். அமைதியிழக்கும்: அசுத்தமடையும். விளைவாக மனதின் ஆரோக்கியம் கெடும். நம்மைக் கவலைக் குள்ளாக்கும் தீய எண்ணங்கள் நம்முடைய உடல், மன ஆற்றல்களை மங்கச் செய்து விடும்.

தீய எண்ணம் ஒருவரைப் பிணிவாய்ப்படுத்தும் என்றால் நல்ல எண்ணம் அவரை ஆரோக்கியமுடையவராக்கும் என்று நம்பலாம்.

-சி.எஸ்.தேவநாதன் *(தொடரும்)*

பிள்ளைகளின் ஆற்றல்களை இனங்கண்டு தட்டிக் கொடுத்து வளர்க்க வேண்டும்

தெல்லிப்பழை கோட்டக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

சுன்னாகம், ஜூன் 1

பிள்ளைகளிடத்தில் பல்வேறு ஆற்றல்கள் பொதிந்துள்ளன. அவற்றைச் சரியான முறையில் இனங் கண்டு தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும் என தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுல குமாரன் தெரிவித்தார்.

தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலையின் நிறுவுநர் நினைவுநாள் மற்றும் பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் பா.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சண்முககுலகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

மாணவர்கள் தமது திறமையை வளர்த்துக் கொள்ள ஊக்கமளிப்பது பாடசாலைகளின் கடமையாகும். மாணவர்கள் பாடரீதியிலும், இணைப் பாட ரீதியிலும் தமது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும். மாணவர் மன்றங்கள், காலைப் பிரார்த்தனைகள் மாணவர்களின் திறமைக்கு உதவும் களங்களாக அமையும்.

> மாணவர்கள் தமது திறமையை வளர்த்துக் கொள்ள ஊக்கமளிப்பது பாடசாலைகளின் கடமையாகும். மாணவர்கள் பாடரீதியிலும், இணைப் பாட ரீதியிலும் தமது திறமைகளை வளர்த்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பங்கள் வழங்கப்பட வேண்டும்.

அத்துடன் மாணவர்களின் திறமைகள் கௌரவிக்கப்படுவதும், அதன் மூலம் ஊக்குவிக்கப்படுவதும் அவசியமாகும்.பரிசளிப்பு விழாக்கள் ஊக்கமளித்துக் கௌரவிக்கும் ஒரு செயற்பாடேயாகும் என்றார். இளைப்பாறிய நிர்வாக சேவை உத்தியோகத்தர் சு.ஏழூர் நாயகம் இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். (எ-38)

திருமுறைப் பரீட்சைக்கான விண்ணப்பம் கோரல்

கத்தோலிக்க மறையாசிரியர்களுக்கான அங்கீகாரம் வழங்குவதற்காக நடத்தப்படுகின்ற கத்தோலிக்கத் திருமுறைப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்பட்டுள்ளன.

இந்தப்பரீட்சைக்கு மறைப் பாடசாலை பத்தாம் தரத்தில் சித்தி பெற்று இறுதி நற்சான்றுப் பத்திர வகுப்பில் ஒரு வருடம் கல்வி பயின்றவர்கள் அல்லது கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் கத்தோலிக்க மறை பாடத்தில் சித்தி பெற்றிருப்பவர்கள் அல்லது கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் கத்தோலிக்க மறை பாடத்தில் சித்தி பெற்றிருப்பவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

இந்தப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்தில் பருத்தித்துறை மானிப்பாய் யாழ். நகரம் நெடுந்தீவு ஆகிய இடங்களில் பரீட்சை நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. (எ-130)

மாற்றுவலுவுடையோர் விண்ணப்பிக்கவும்

பண்டத்தரிப்பு ஜூன் 1

அரசாங்க முகாமை உதவியாளர் சேவையின் வகுப்பு III இற்குஆட்சேர்ப்புச் செய்வதற்காக 2009 இல் விண்ணப்பங்கள் கோரப்பட்டு 2010 மே மாதம் 8 ஆம் திகதி நடத்தப்பட்ட பரீட்சையில் தோற்றி மொத்தப்புள்ளியில் 50 அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப்பெற்றவர்களில் மாற்றுவலுவுடையோர் யாரும் இடம்பெற்றிருந்து விண்ணப்பப் படிவத்தில் மாற்றுவலுவுடையோர்களுக்கான கட்டத்தை நிரப்பத் தவறியிருப்பின் அவர்களுக்கு மற்றுமொரு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அவர்கள் வர்த்தமானியில் வெளியாகியுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து 2012 யூன் மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம், இணைந்த சேவைகள் பிரிவு, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு, சுதந்திர சதுக்கம், கொழும்பு 7. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது. (எ-130)

வடமாகாண எழுத்தாக்க போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 1

மாகாணநிலைத் தமிழ் மொழித் தினப்போட்டிகள் -2012 இன் எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. விவரம் வருமாறு:-

சிறுகதை ஆக்கம் பிரிவு-5

முதலாமிடம் கே.வினோதினி வ/புதுக்குளம் ம.வி, இரண்டாமிடம் சி.கிருசாந்தினி வ/பூவரசங்குளம் ம.வி.

சிங்கள மாணவர்களுக்கான தமிழ்

பிரிவு-49

நிர்மாணி வக்சலா வ/அக்ர போதி ம.வி.

பிரிவு-50

கவிதா சந்தகெரணி வ/மடுகந்த ம.வி

யாழ்.மாவட்ட எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

பிரிவு-1

ஆக்கம்- எழுத்து

முதலாமிடம் அ.வெற்றிதரன் யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி, இரண்டாமிடம் இ.கிரூபிகா, யா/மிருசுவில் அ.த.க.பா, மூன்றாமிடம் க.கிறிஸ்ரினா யா/நல்லூர் சென். பெனடிக்ற் வித்தி.

(தொடரும்)

விமானத் தாக்குதலில் அழிவடைந்தாலும் நவாலி முருகன் ஆலயத்தின் பணி தொடர்கிறது

வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம், ஜூன் 1

நவாலி கதிர்காம முருகன் ஆலயம் 1995 இல் விமானத் தாக்குதலுக்கு உள்ளாகி அழிவடைந்த நிலையிலும், அதன் ஆன்மிகப் பணி மற்றும் சேவைகள் அன்று தொட்டு இன்றுவரை தொடர்ந்த வண்ணமே உள்ளன.

அந்தளவுக்கு சமாதியடைந்த குரு முருகன் திருமதி சண்முகம் இராசமணி வழிநடத்தி அருட்பணி புரிந்துள்ளார் என வலி. மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார்.

நவாலி கதிர்காமக் கந்தனின் 30 ஆம் ஆண்டு குருபூசை தினமும் குரு முருகன் அருளமுதம் மலர் வெளியீடும், பட்டமளிப்பு விழாவும் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

09.07.1995 இல் நவாலி கதிர்காம முருகன் ஆலயம் விமானத் தாக்குதலில் அழிவடைந்தது. ஆலயம் முழுவதும் இரத்தக் கறைகளும் பிணங்களும்- காயமடைந்தவர்களுமாக நிரம்பி வழிந்தன. இந்தநிலையில் கதிர்காமக் கந்தன் தனது ஆன்மிகப் பணி மற்றும் சேவைகளை நிலை நிறுத்தினான்.

இதனால் தான் இன்று நாம் சமாதியடைந்த குருமுருகன் திருமதி சண்முகம் இராசமணியின் ஐம்பொன்னிலான சிலையை இந்தியாவில் இருந்து இங்கு கொண்டு வந்து நூதன பிரதிஷ்டை செய்து மகா கும்பாபிஷேகமும் இடம் பெற்ற வரலாற்று சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அத்துடன் குருமுருகனின் வாழ்க்கை வரலாற்றை எடுத்து இயம்பும் சிறப்புக் கட்டுரைகளைக் கொண்ட ''குருமுருகன் அருளமுதம்'' என்ற மலரும் வெளியிடப்பட்டுள்ளது.

எப்படி ஹம்பாந்தோட்டையிலுள்ள திஷமஹாராகவில் கதிர்காம கந்தன் மானுடயத்திற்கு என்ற அருளாட்சி புரிகின்றாரோ அதே போல, நவாலி கதிர்காமக் கந்தனும் இங்கு அருளாட்சி புரிகின்றார்- என்றார்.

இந்த நிகழ்வில் நவாலி கதிர்காமக் கந்தனின் ஆலய பிரதம குரு சிவத்திரு மா.பத்மநாதனுக்கு நவாலி ஹேமலதா செல்வராஜா சிறுவர் ஞாபகார்த்த நிதியம் '' கந்த சிரோன்மணி'' என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட யாழ். செயலக மாவட்ட இந்து கலாசார அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன், முருகானந்தா, சன சமூக நிலையத் தலைவர் செ.மகேந்திரன், நவாலி கிழக்கு கிராம அதிகாரி ரி.நித்தியானந்தன் உட்படப் பலரும் உரையாற்றினர்.

(எ-50)

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' –மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹரா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

அமெரிக்காவும் இலங்கையும்

அமெரிக்காவின் நியூயோர்ஸி மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் நடந்த சம்பவமும் அதைத் தொடர்ந்து இடம்பெற்ற வழக்கும் முக்கியமானவை. யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையில் மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டியவை.

2010ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்துக்குப் புதுமுக மாணவர்களாக வந்தவர்களில் இருவர் ஒரே அறையில் தங்க வைக்கப்பட்டனர். ஒரு நாள் அதிலொரு மாணவன் தான் அறையில் தனித்திருக்கப் போவதாக மற்றைய மாணவனிடம் கேட்டதின் அடிப்படையில் அவன் அங்கிருந்து வெளியேறினான். ஆனால், போகும் போது தனது மடிக் கணினியில் இருந்த 'வெப் கமெரா'வை இயங்கு நிலையில் வைத்துவிட்டுச் சென்றிருக்கிறார்.

அறையில் இருந்த மாணவன் தனது ஆண் நண்பனுடன் பாலியல் உறவில் ஈடுபட்ட விடயம் அந்த கணினியில் பதியப்பட்டுள்ளது. அறைக்குத் திரும்பிய நண்பன் இந்த காணொலியைப் பார்த்துவிட்டு அதனைக் கேலியாக எடுத்துக் கொண்டான். விளையாட்டாக தனது 'ருவிட்டர்' கணக்கில் இந்த விடயங்கள் அனைத்தையும் அம்பலப்படுத்தியும் விட்டான்.

தனது அந்தரங்கம் அம்பலமானதால் மனமுடைந்து போன மாணவன் பாலத்திலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டான். 2010 நவம்பர் மாதம் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. தொடர்ச்சியாக நடைபெற்று வந்த விசாரணைகளின் முடிவில் இப்போது, தற்கொலை செய்து கொண்ட டெய்லர் கிஎமெண்டியின் சாவுக்குக் காரணமாக இருந்தார் என்ற குற்றத்துக்காக அவரது அறைச் சகா தருண் ரவிக்கு [வயது 20] 30 நாள்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டுத்தனம், வினையாகும் என்று தெரியாமல் ஒரு தற்கொலைக்குக் காரணமாக இருந்ததற்காக தருண் ரவிக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இது அமெரிக்காவில் நடைபெற்ற சம்பவம்.

அண்மையில் யாழ்ப்பாணத்திலும் ஓர் இளம் பெண் தற்கொலை செய்து கொண்டார். அவரது தற்கொலைக்கு கடன்காரர்களின் தொல்லையே காரணம் என்று விசாரணைகளின்போது சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது.

அந்த இளம் பெண்ணின் தந்தைக்குக் கடன் கொடுத்தவர்கள் வீட்டுக்கு அடிக்கடி வந்து கொடுத்த இம்சைகள், அவர்கள் வார்த்தைகளால் ஏற்படுத்திய மனக் காயங்கள், அயல் அட்டைக்கு முன்பாக அந்த இளம் பெண்ணையும் தாயையும் பேசிய வார்த்தைகள் எல்லாம் சேர்ந்து அந்தச் சிறு பெண்ணைத் தற்கொலைக்குத் தூண்டின என்று ஆணித்தரமாக நம்ப முடியும். போதாததற்கு கடன்காரர்களின் தொல்லையால்தான் இளம் பெண் இறந்துபோனார் என்று சாட்சியம்வேறு உடற்கூறு விசாரணையின்போது வழங்கப்பட்டுமுள்ளது.

ஆனால், இது வரைக்கும் அந்த இளம் பெண்ணைத் தற்கொலைக்குத் தூண்டிய கடன்காரர்களில் எவரும் அடையாளம் காணப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இவ்வாறான ஒரு கோணத்தில் விசாரணைகள்கூட ஆரம்பிக்கப்படவில்லை. ஏனென்றால் இது இலங்கை.

2004ஆம் ஆண்டு வரையில் இலங்கையில் தற்கொலை செய்து கொள்வதே ஒரு குற்றமாகத்தான் இருந்தது. அப்படியிருந்தும் ஓர் இளம் பெண்ணைத் தற்கொலைக்குத் தூண்டியவர்கள் இன்னும் சுதந்திரமாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

'கேக்' இல்லாமலேயே 'ஜசிங்' போடும் இலங்கைப் பொருளாதாரம்

தமிழில்- வி.எஸ்.ரி
சிங்கள மூலம்- ஜனக் குமாரசிங்க

அபிவிருத்திச் செயற்பாடு என் பதற்கு பல கோணங்களில் நின்று பலதரப்பட்ட விளக்கங்களை முன்வைக்க முடியுமாயினும், நாட்டின் பொது மக்களது முகங்களின் சாதகமான பிரதிபலிப்பிலேயே அதன் வெற்றி தங்கியுள்ளது என அபிவிருத்திப் பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு பெற்றவரான பேராசிரியர் அமிர்தாசென் ஒரு சந்தர்ப்பத்தில் கருத்து வெளியிட்டிருந்தார்.

நாட்டில் எட்டு வீத பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும், பணவீக்கம் குறைந்து வேலை வாய்ப்பின்மை வீதம் குறைவடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்ற போதிலும், அது நாட்டு மக்களில் பிரதிபலிக்கின்றதா? இல்லையே!

நாட்டு மக்கள் வாழ்க்கைச் செலவு உயர்வால் கடும் சிரமத்தையல்லவா எதிர்நோக்க நேர்ந்துள்ளது. இலங்கை மத்திய வங்கி கூறுவது போன்று இன்று நாட்டில் பணவீக்கம் குறைவடைந்திருந்தால், வேலைவாய்ப்புக்கள் அதிகரித்திருந்தால், நாடு அபிவிருத்தி கண்டிருந்தால் மக்களது வாழ்க்கை நிலை உயர்வு கண்டிருக்க வேண்டும். அவ்வாறமையாததால் இன்று நாட்டு மக்கள் தமது மிக அத்தியாவசியத் தேவைகளுக்காக மட்டுமே பணத்தைச் செலவிட நேர்ந்திருக்கிறது. அந்த வகையில் அவர்கள் உணவு, உடை, மருந்து மற்றும் மிக அத்தியாவசிய பயணங்களுக்கென மட்டுமே தமது செலவீனத்தை மட்டுப்படுத்திக் கொண்டுள்ளனர்.

இதற்கான பொருத்தமான உதாரணமாக அண்மையில் கொண்டாடப்பட்ட வெசாக் தினத்தைக் குறிப்பிட இயலும். அரச மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களின் அனுசரணையுடன் இடம்பெற்ற பந்தல் அலங்காரங்கள் விடியும் வரை நடத்தப்பட, கிராமமட்ட பந்தல் அலங்காரங்களின் மின் விளக்குகளை ஒளிர வைப்பது குறிப்பிட்ட நேரத்துடன் மட்டுப்படுத்தப்பட்டமை அதிகரித்த மின் கட்டணத்தைச் செலுத்துவதில் ஏற்படும் சிரமத்தைக் கருத்தில் கொண்டு மேற் கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தலாகும்.

அந்த வகையில் அண்மையில் வெளியிடப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் நாட்டின் அபிவிருத்தி மற்றும் பொருளாதார நிலை புள்ளிவிவர அறிக்கை குறித்த பொதுமக்கள் அவநம்பிக்கை அடைந்துள்ளார்கள். மத்திய வங்கியின் அறிக்கை என்பது நாட்டின் பொருளாதார நிலையை அச்சொட்டாக வெளிப்படுத்தும், எமது பொருளாதாரத்தின் நிஜ உருவத்தை அச்சொட்டாக பிரதிபலிக்கும் முகம்பார்க்கும் கண்ணாடிக்கு ஒப்பான ஒன்றாகும். நாட்டின் எதிர்காலப் பயணம் தொடர்பான செயற்பாடுகளை நிர்ணயிக்க உதவுவது மத்திய வங்கியின் ஆண்டறிக்கையே. இதனாலேயே ஒரு நாட்டின் பைபிள் அல்லது திரிபீடகம் என அது கருதப்படுகிறது.

மத்திய வங்கியின் ஆண்டறிக்கை தெளிவானதொரு விளக்கத்தை வழங்காவிட்டால், அரசு தம்மை ஏமாற்றுவதாகவே பொதுமக்கள் கருதத் தலைப்படுவர்.

உண்மையை உரைப்பது இலேசான காரியம். பொய் கூறுவது மிகச் சிரமம். ஏனெனில் கூறும்விடயம் அது வேறு தரப்புகளால் உறுதிப்படுத்தப்படாவிட்டால் அது பொய் என்பது தெளிவாகிவிடும். இலங்கையில் தற்போது இடம்பெறுவதும் இது போன்றதே. மத்திய வங்கியின் அறிக்கையில் வெளியிடப்பட்ட தவறான விவரங்கள் புள்ளிவிவரத் திணைக்கள அறிக்கை மூலம் பொய்யானவையே என நிரூபிக்கப்பட்டுள்ளன. மூன்று உறுப்பினர்கள் கொண்டதொரு குடும்பம், தனது மிக முக்கிய தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ள மட்டும் மாதமொன்றுக்கு முப்பதாயிரம் ரூபா செலவிட வேண்டியுள்ளதாகப் புள்ளிவிவரத் திணைக்கள அறிக்கை கூறுகிறது. இதில் வேடிக்கை என்னவெனில் இந்த இரண்டு நிறுவனங்களும் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களை வகுப்பதில் கைகோர்த்துச் செயற்பட வேண்டியுள்ள அரச நிறுவனங்கள் என்பதேயாகும்.

நாட்டில் வேலைவாய்ப்பின்மை விகிதம் குறைவடைந்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கை கூறுகிறது. ஆயினும் எவராக இருப்பினும் சரி அவர் தமது தகுதி தராதரத்துக்கேற்ற தொழிலொன்றை மேற்கொள்ள வாய்ப்பு அமைதல் வேண்டும். அப்போதுதான் அங்கு தராதரத்துக்கேற்ற சேவை வினைத்திறன் கிடைக்கும். பட்டதாரி ஒருவர் கூலி வேலை செய்தாலும் மத்திய வங்கியின் கணிப்பின்படி அவர் தொழில் செய்பவராக கணிப்பிடப்படுவார் போலும்.

உண்மையில் பொதுமகன் ஒருவருக்கு மாதமொன்றுக்கு உயிர்வாழ 2500 ரூபா போதும் என்ற வாதத்தை ஏற்றுக்கொண்டாலும், உலக வங்கியின் கொள்கைப்படி அது ஒரு மனிதனுக்கு நாளொன்றுக்கு உயிர்வாழ 2560 கலோரி அளவு அவசியம் என்ற வகையில் கணிப்பிடப்படுகிறது. அத்தகைய 2560 கலோரி அளவைப் பெறத் தேவையான பணம் அந்த மனிதனிடம் இருப்பின் அவனை ஏழையாகக் கணிக்க இயலாது. ஆனால் அதனைவிட ஒரு மனிதனுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் ஏனைய விடயங்கள் கணக்கில் எடுக்கப்படாது மத்திய வங்கியின் அறிக்கையில் மனிதனொருவனுக்குத் தேவையான கலோரி அளவு குறித்தே குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய விதத்தில் வார்த்தைகளையும் புள்ளிவிவரங்களையும் திரிவுபடுத்தி நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்திவிட இயலாது.

பொதுமக்களது பாவனைப் பொருள்களின் விலைப் பட்டியலில் வேகமாக விலை அதிகரிக்கும் பொருள்கள் குறித்த விவரங்களை மத்திய வங்கி நீக்கி விடுகின்றது. அத்தகைய பொருள்களின் பாவனை விலை ஏற்றம் காரணமாக பொதுமக்களால் தவிர்க்கப்படுவதாக மத்திய வங்கி கருதுகிறது. விலை அதிகரிக்கும் பொருள்களைத் தவிர்த்து விலை குறைந்த பொருள்களை அதற்கு மாற்றீடாகப் பொதுமக்கள் பயன்படுத்துகின்றனர் என்ற நிலைப்பாடு தவறான ஒன்று. அந்த வகையில் பெற்றோலியப் பொருள்களின் விலை அதிகரித்தால் மாற்றீடாக பொதுமக்களால் வேறெதனைப் பயன்படுத்த இயலும்? இத்தகைய விதத்தில் பணவீக்கம் குறைவடைவதாகக் காட்டிக் கொள்ள முடியுமேயன்றி உண்மை அதுவல்ல.

சாதாரணமாக ஏனைய நாடுகள் பாவனைப் பொருள்களின் விலைப்பட்டியலில் ஒரு பொருளை உள்ளடக்கினால், அந்தப்பொருள் விலை ஏறும் வேளையிலும் அந்தப்பட்டியலில் இருந்து அப்பொருளை நீக்கிக் கொள்வதில்லை. பஸ் கட்டணத்தை அதிகரித்தால் பொது மக்கள் தமது போக்குவரத்தைக் குறைத்துக்கொள்வர் என மத்திய வங்கி எதிர்பார்க்கிறது. தமது தொழில் தொடர்பாக தினமும் பஸ் பயணம் செய்ய வேண்டிய ஒருவர் அதனைத் தவிர்க்கவோ குறைக்கவோ இயலுமா? இத்தகைய நிலைப்பாடு வெளிப்பார்வைக்கு சரியேயாயினும் செயலளவில் தவறானதொன்றாகும்.

அரசின் அதிவேக நெடுஞ்சாலை அமைப்பு, கட்டட நிர்மாணம், துறைமுக நிர்மாணம் என்பவை அபிவிருத்திப் பணிகள் என்ற வகையில் வரவேற்கப்படத்தக்கவையே. ஆயினும், இவை நாட்டின் சாதாரண பொதுமக்களில் எத்தனை சதவிகிதத்தினருக்குப் பயன்படுகிறது? இத்தகைய முதலீடுகள்எமது பொருளாதார முன்னேற்றத்துக்கு பெரும் அளவில் உதவப்போவதில்லை.

அதிவேக நெடுஞ்சாலைகளை எமது உற்பத்திப் பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக எடுத்துச் செல்லப் பயன்படுத்த முடிந்தால் அது பிரயோசனமானதொன்றாக அமையும். உற்பத்தி முயற்சிகளுக்கு ஊக்கமளித்தால் அது பொருளாதார முன்னேற்றத்துக்கு உதவும். நாம் எமக்கான பொருள்களை பெருமளவில் இறக்குமதி செய்வதற்கே எமது துறைமுகங்களும் அதிவேக நெடுஞ்சாலைகளும் எங்களால் பயன்படுத்தப்படுகின்றன. எமக்கான பொருள்களை வெளிநாடுகளிலிருந்து பெருமளவில் இறக்குமதி செய்வதன் மூலம், நாட்டின் நிதி வெளிநாடுகளுக்குப் போய்ச் சேர்கிறது. வெளிநாட்டுச் செலாவணியென எதுவும் இந்நாட்டுக்கு கிட்டுவதில்லை.

விளையாட்டுப் போட்டிகள், காரோட்டப் பந்தயங்கள் எல்லாம் தவறல்ல ஆயினும், அவற்றுக்கெல்லாம் முன்பதாக நாம் மேற்கொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளனவே. நாட்டின் அபிவிருத்தியை முன்னிலைப்படுத்தி என்ன செய்யவேண்டும் என்பதை இன்னமும் அடையாளம் காணாமல் இருக்கிறோம். உண்மையில் கடைசியில் மேற்கொள்ள வேண்டியதை முதலில் தொடங்கிக்கொண்டு, முதலில் மேற்கொள்ளவேண்டிய வற்றை முற்றுமுழுதாக மறந்துபோயுள்ளோம். இதற்குக் காரணம் எம்மிடம் தேசியக் கொள்கையென்று ஒன்று இல்லாமையே ஆகும். ✸

தூரப்போகிறது இந்தியா

தெற்காசிய நாடுகளின் தலைவர்களுடன் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கடந்த ஆண்டில் இரு தரப்புப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இந்தச் சந்திப்புகள் புதுடெல்லியிலோ அல்லது அந்தந்த நாட்டின் தலைநகரிலோ இடம்பெற்றுள்ளன.

பாகிஸ்தானுடன் அதிகார பூர்வ இருதரப்பு பேச்சுக்களை அவர் நடத்தவில்லை. பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி கடந்த ஏப்ரல் மாதம் புதுடெல்லியில் மன்மோகன் சிங்கை சந்தித்திருந்தார். ஏழு ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தியப் பிரதமர் ஒருவரை பாகிஸ்தான் ஜனாதிபதி சந்தித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

மியான்மருக்கான பயணத்துக்கு முன்னர் கடந்த 2011 நவம்பரில் மாலைதீவுக்கும், 2011 செப்ரெம்பரில் பங்களாதேசுக்கும் மன்மோகன் சிங் சென்றிருந்தார். அத்துடன் நேபாளப் பிரதமர், பூட்டான் மன்னர், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஆகியோரை புதுடெல்லியில் கடந்த ஆண்டு ஒக்டோபரில் அவர் சந்தித்தார். ஆனால் தெற்காசியப் பிராந்தியத்தில் உள்ள இலங்கை ஜனாதிபதியை மட்டும் இருதரப்பு பேச்சுக்களுக்காக மன்மோகன்சிங் சந்திக்கவில்லை.

இலங்கை ஜனாதிபதியை, மன்மோகன்சிங் மாலைதீவில் நடந்த சார்க் மாநாட்டின் போது ஒரு முறையும், ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்றிருந்த போது ஒருமுறையும் சந்தித்திருந்தார். இந்தச் சந்திப்புகள் அவசர சந்திப்புக்களாகவும் - குறுகியதாகவும் இருந்தன.

இதன் போது எந்த விவகாரம் குறித்தும் விரிவாகப் பேசப்படவில்லை இந்தியப் பிரதமர் கடைசியாக 2008 இல் இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார். அதுகூட ஒரு இருதரப்பு சந்திப்புக்கான பயணம் அல்ல சார்க் மாநாட்டில் பங்கேற்பதற்கே அவர் அங்கு சென்றார்.

2010 ஜூன் மாதம் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ புதுடில்லி சென்றபோது கடைசியாக இருதரப்பு சந்திப்பு இடம் பெற்றது. இந்தியப் பிரதமருடான இந்தச் சந்திப்பின் போது, அதிகாரப் பகிர்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்த பல வாக்குறுதிகளை மஹிந்த ராஜபக்ஷ வழங்கினார்.

இந்த வாக்குறுதிகள் எதுவும் காப்பாற்றப்படவில்லை என்று இந்திய அதிகாரிகள் கூறுகின்றனர்.

இதே வாக்குறுதிகள் மீண்டும் இந்திய வெளிவிவகார அமைச்சர். எஸ்.எம். கிருஷ்ணா 2012 ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் இலங்கை சென்று ஜனாபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்த போதும், நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர் சுஸ்மா சுவராஜிடமும் வழங்கப்பட்டன.

இவை வெறும் கடதாசிகளில் மட்டுமே இருக்கின்றன. போர் முடிவுக்கு வந்த பின்னர், வடக்கில் உள்ள தமிழர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் வகையில்-நியாயமான அரசியல் தீர்வு ஒன்றுக்கு இந்தியா அழுத்தம் கொடுத்தது. 13ஆவது திருத்தத்துக்கு அப்பாற்பட்ட ஓர் அரசியல் தீர்வை வழங்குவது தொடர்பான வாக்குறுதியை இலங்கையிடம் இருந்து இந்தியா மீண்டும் பெற்றுக்கொண்டது.

இந்த நிலையில் இலங்கைக்கு வருமாறு மஹிந்த ராஜபக்ஷ விடுத்த அழைப்பை மன்மோகன் சிங் 2010 ஜூன் இல் ஏற்றுக்கொண்டிருந்தார். ஆனால் அவர் அதன் படி இலங்கை வரவில்லை. இந்தியப் பிரதமர் ஏன் இலங்கை செல்லவில்லை. இதில் என்ன

பிரச்சினை என்று கேட்டதற்கு- ''இந்திய வெளிவிவகார அமைச்சிடம் தான் கேட்க வேண்டும். நாம் எப்போதும் அவரை வரவேற்கத் தயாராகவே உள்ளோம்'', என்று கூறியுள்ளார் இலங்கை உயரதிகாரி ஒருவர். இந்தியப் பிரதமர் மட்டும் இலங்கையில் இருந்து விலகி நிற்கவில்லை. அவரது அமைச்சர்களும் கூடத் தான் விலகி நிற்கின்றனர். 2012 ஜனவரியில் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஸ்ணா பயணத்துக்குப் பின்னர், இதுவரை எந்தவொரு மூத்த அமைச்சர்களும் அங்கு செல்லவில்லை. மத்திய அமைச்சரும், காங்கிரஸ் தலைவர்களில் ஒருவருமான ஜெய்ராம் ரமேஸ், கதிர்காமர் நிலையத்தினால் எதிர்வரும் ஜீலை மாதம் கொழும்புக்கு அழைக்கப்படவுள்ளார். எதிர்வரும் ஜீலை 11 ஆம் திகதி கொழும்புக்குச் செல்லும் அவரது பயணம் குறுகியது.

மஹிந்த ராஜபக்ஷ தற்போது இரு தரப்பு சந்திப்புக்காக தாய்லாந்து சென்றுள்ளார். முன்னதாக அவர் கட்டார், தென்கொரியா, சிங்கப்பூர், பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டுவருகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(நன்றி- இந்திய ஊடகம்)

புத்தரின் படுகொலை

நேற்று என் கனவில்
புத்த பெருமான் சுடப்பட்டிறந்தார்
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.

இரவில் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்
''எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?''
என்று சினந்தனர்

''இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்.....''
என்றனர் அவர்கள்.

''சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை''
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்

சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோவாத சூத்திரத்தினைக்
கொழுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான் சாம்பரானது

எம்.ஏ.நுஃமான்
1981.06.01

எரிக்கப்பட்ட அறிவு

தகனன்

தெற்காசியாவின் முதல்நிலை நூலகமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணப் பொது நூலகம், அப்போதைய அரசின் அமைச்சர் காமினி திசா நாயக்கா, பொலிஸ்மா அதிபர், பிரிகேடியர் ஆகியோர் யாழ்ப் பாணத்தில் இருக்கத்தக்கதாக இற்றைக்கு 31 ஆண்டுகளுக்கு முன்னர் எரியூட்டப்பட்டது. அதிலிருந்த பல்லாயிரக்கணக்கான நூல்களும் அழித்தொழிக்கப்பட்டன.

1930களில் ஹிட்லரின் தளபதி கோயபல்ஸ் தலைமையில் பெர்லின் நூலக எரிப்பின்போது கூட சில நூல்கள் மட்டுமே எரிக்கப்பட்டன. ஆனால் யாழ். நூலக எரிப்புச் சம்பவத்திலோ முழு நூல்களும், கட்டடமும் சேர்த்து எரிக்கப்பட்டது.

அமைச்சர்கள் மற்றும் அரச படையின் மூத்த அதிகாரிகளினால் நன்கு வகுக்கப்பட்ட திட்டத்துக்கு அமைய 31 ஆம் திகதி இரவு 10 மணியளவில் நூலகத்துக்குள் நுழைந்த காடையர் கும்பல் முழு நூலகத்தையும் பெற்றோல் ஊற்றி எரியூட்டியது.

ஏன் நூலகத்தை எரித்தார்கள்? நூலகத்தை எரியூட்டியதால் அவர்கள் என்ன சாதித்தார்கள்?

அவர்களின் நோக்கம் தற்போது ஓரளவுக்கு நிறைவேறியுள்ளது என்றே கூற வேண்டும். தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்துவதற்கு மூல வித்தாக அமைந்த காரணிகளுள் நூலக எரிப்புச் சம்பவமும் ஒன்றாகும்.

கல்வியிலே மட்டும் நாட்டம் செலுத்தி இலங்கைத்தீவில் கல்வியில் முன்னணியில் இருந்த எம் இளைஞர்களின் கல்வியை சிதைத்து அவர்களை திசை திருப்பி ஆயுத மேந்த வைத்ததன் மூலம் பல்லாயிரக்கணக்காண உயிர்களைப் பறித்து ஈற்றில் முள்ளிவாய்காலில் வரலாறு காணாத கொடூரம் புரிந்து எமது மக்களை 30 தசாப்தங்கள் பின்னோக்கி செல்ல வைத்து, தாம் நினைத்ததை அவர்கள் சாதித்துள்ளார்கள்.

1981 இல் நூலகம் எரிக்கப்பட்ட போது அதிலே 97000 புத்தகங்கள் இருந்தன. மருத்துவம், இலக்கியம், ஜோதிடம் சம்பந்தமான உலகில் எங்குமே தேடிப்பெறமுடியாத பல நூற்றுக்கணக்கான ஓலைச்சுவடிகள் இருந்தன. அமரர் செல்லப்பா, தாவீது அடிகள் மற்றும் ஏனைய பெரியோர்களால் 1950 களிலிருந்து மெல்ல மெல்ல வளர்த்தெடுக்கப்பட்ட அந்த நூலகமும் அதிலிருந்த புத்தகங்களும் ஓரிரவில் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

யாழ். நூலகம் எரிக்கப்படுவதை அறிந்த தாவீது அடிகளார் அதிர்ச்சியில் மரணித்தார். இது பற்றி நூலக வெள்ளி விழா மலரில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. ''யாழ். நகரின் இதயமென நிமிர்ந்து நின்றன இரண்டு கல்விக் கோபுரங்கள். அதில் ஒன்று எரிந்தது. மற்றொன்று சரிந்தது''

அந்தக் கால கட்டத்தில் நூலகத்தில் பணிபுரிந்த ஊழியர்கள் இன்றும் அந்தச் சம்பவத்தை அப்படியே மறக்காமல் சோகத்துடன் நினைவு கூறுகின்றார்கள்.

நூலக உதவியாளராகப் பணிபுரிந்து ஓய்வுபெற்று தற்போது நாச்சிமார் கோயிலடியில் வசித்து வருகின்ற இரா.பற்குணம் இது பற்றி கூறுகையில்:

''அன்று காலை நூலகம் எரிக்கப்பட்டது பற்றி கேள்விப்பட்டதும் நாச்சிமார் கோவிலடியில் இருந்து நான் ஓட்டமும் நடையுமாக நூலகம் நோக்கி விரைந்தேன். மணிக்கூண்டுக் கோபுரத்துக்குக் கிட்ட போகும் போதே எரியுற வெக்க முகத்தில் அடிக்குது. அழுது கொண்டே நூலகத்தை நோக்கி ஓடினேன்'' என்றார் சோகத்துடன். மேலும் அவர் கூறுகையில் ''எங்கட சாமி அறைக்குள்ள சாமிப்படங்களுடன் நூலகத்தின் படத்தையும் வைச்சிருக்கிறன். என்னை வாழ வைச்சது அந்த நூலகம் தான்'' என்று தன் உணர்வுகளைப் பகிர்ந்து கொண்டார்.

மற்றுமொரு நூலக உதவியாளரான டொன் பொஸ்கோ தற்போது ஓய்வுபெற்று சில்லாலையில் வசித்து வருகின்றார். அவர் இது பற்றி கூறுகையில் :

''அதை நூல் நிலையம் என்று சொல்றதைவிட யுனிவசிட்டி என்டு தான் சொல்ல வேண்டும். அந்தளவுக்கு நிறைய புத்தகங்கள் இருந்தன. தூர இடங்களில் இருந்தெல்லாம் பொம்பிளைப் பிள்ளைகள் கூட இரவு மட்டும் இருந்து படிக்கிறதுகள்'' என்று நூலகம் அந்தக் காலத்தில் கல்வித்துறைக்கு எவ்வளவு தூரம் பயன்பட்டிருந்தது என்பது பற்றி கூறுகிறார்.

இவ்வாறெல்லாம் முக்கியம் பெற்றிருந்த நூல்நிலையம், புத்தரின் கொள்கைகளை கடைப்பிடிக்கின்றவர்கள் என்று தம்மை தாமே வர்ணித்துக் கொள்கின்றவர்களால் ஓரிரவில் எரித்து சாம்பலாக்கப்பட்டு நேற்றுடன் 31 வருடங்கள் உருண்டோடிவிட்டன. தற்போது நூலகம் புனரமைப்புச் செய்யப்பட்டு புதுப் பொலிவுடன் இயங்கி வருகிறது. தமது சோதரர்களால் எரிக்கப்பட்ட நூலகத்தைத் தென்னிலங்கையில் இருந்து வருகின்ற சுற்றுலாப்பயணிகள் தரிசிக்கத் தவறுவதில்லை. நூலகம் எரிக்கப்பட்டமைக்கான சுவடுகளை இல்லாமல் செய்து வரலாற்றில் தமக்கு ஏற்பட்ட களங்கத்தைத் துடைக்க ஆட்சியாளர்கள் முற்படுகின்றார்கள்.

என்னதான் தீயினால் நூலகத்திற்கு ஏற்பட்ட எரிகாய வடுக்கள் தீந்தையினால் பூசி, மெழுகி மறைக்கப்பட்டு அழகிய தோற்றம் கொடுக்கப்பட்டிருந்தாலும், எமது உள் மனதில் இருக்கின்ற வடுக்களையும், நூலகம் பற்றிய நினைவுகளையும் ஆற்றி விடமுடியுமா? அல்லது அங்கிருந்து எரிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான கிடைத்தற்கரிய நூல்களையும், சுவடிகளையும் மீண்டும் கொண்டு வரத்தான் முடியுமா?

பணம் செய்யும் மாயம்

பணம் வந்தால் பத்தும் பறந்து போகும் என்று கேள்விப் பட்டிருக்கிறோம். ''பணம் வந்தால் பற்றும் பறந்து போகும்'' என்றார் நண்பர் ஒருவர்.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்றேன்.

அவர் ஒரு கதை சொன்னார்.

ஒரு கணவனும் மனைவியும் சுற்றுலா சென்றார்கள். ஓர் இடத்தில் சுற்றுலாப் பயணிகளை சிறு விமானங்களில் ஏற்றிச் சுற்றிக்காட்டிக் கொண்டிருந்தார்கள். ''அந்த விமானத்தில் ஏறி சுற்றிப் பார்க்க ஆசையாக இருக்கிறது'' என்றாள் மனைவி. இருவரும் போய் விசாரித்தார்கள்.

''ஆளுக்கு நூறு ரூபாய் செலவாகும்'' என்று பதில் வந்தது.

''அப்படி என்றால் இரண்டு பேருக்கும் இருநூறு ரூபா ஆகுமே..என்னத்துக்கு வீண் செலவு...?'' என்று பேசிக் கொண்டார்கள்.

இவர்களின் தயக்கத்தைப் புரிந்துகொண்ட விமானி, ''சரி..நீங்க பணம் எதுவும் தர வேண்டாம்... விமானத்தில் ஏறிக்கொள்ளுங்கள்...ஆனால், ஒரு நிபந்தனை...'' என்றார்.

''என்ன, சொல்லுங்கள்?'' என்றனர் அந்தத் தம்பதியர்.

''விமானத்துக்குள்ளே ஒரு சிறு சத்தம்கூடப் போடக்கூடாது. அப்படிப் போட்டால் நீங்கள் இருநூறு ரூபா எனக்குத் தர வேண்டும்''

''அவ்வளவுதானே, நாங்கள் கட்டுப்படுகிறோம்''

பிறகென்ன...கணவனும் மனைவியும் மிகுந்த உற்சாகத்துடன் ஏறி உட்கார்ந்தார்கள்.

விமானம் புறப்பட்டது. சிறிது நேரத்தில் உயரே எழும்பியது...

அதுவரை இருவருக்கும் பயம் ஒன்றும் தெரியவில்லை. அதன் பின்னர்தான் எல்லாம்!

விமானம் கண்மண் தெரியாத வேகத்தில் பறக்க ஆரம்பித்தது. ஆகாயத்தில் எவ்வளவு உயரத்துக்குப் போக முடியுமோ அவ்வளவு உயரத்துக்குப் போனது.

அங்கேயிருந்து திடீரென்று கீழே வந்தது. குட்டிக்கரணம் அடித்தது.

தலைகீழாகப் பறந்தது.

எந்தெந்த வகையில் பயமுறுத்த முடியுமோ அந்தந்த வகையில் எல்லாம் பயமுறுத்திப் பார்த்தார் விமானி. எப்படியாவது அவர்களைச் சத்தம்போட வைத்து இருநூறு ரூபாயை வாங்கிவிட வேண்டும் என்பது அவர் நோக்கம். ஆனால், அது நிறைவேறவில்லை. ஏனென்றால் விமானத்துக்கு உள்ளிருந்து கொஞ்சம்கூடச் சத்தம் வரவில்லை.

இனியும் இவர்களைச் சத்தம் போட வைக்க முடியாது என்று முடிவெடுத்து விமானத்தைக் கீழே இறக்கினார் விமானி.

அந்தப் பெண்மணிதான் முதலில் கீழே இறங்கினாள். அவளை நெருங்கித் தன் பாராட்டுதலைத் தெரிவித்தார் விமானி. ''பரவாயில்லையே...நீங்கள் ஒரு சிறு சத்தம் கூடப் போட வில்லையே'' என்றார்.

''ஒரு கட்டத்தில் என்னையும் அறியாமல் சத்தம் போட இருந்தேன். நல்லவேளை அடக்கிவிட்டேன்'' என்றார் அந்தப் பெண்.

''எப்போ அது?'' என்று விமானி ஆவலுடன் கேட்டார்.

''என் வீட்டுக்காரர் விமானத்திலிருந்து கீழே விழுந்தபோது...'' என்றாள் அந்தப் பெண் சாதாரணமாக.

நண்பர் சொன்ன கதையைக் கேட்டு நான் வாய்விட்டுச் சிரித்தேன். ஆனாலும் அது என்னை சிந்திக்கவும் வைத்தது.

பணம் பற்றையும் பறக்க வைத்து விடுகிறது.

சரி, இதற்கு என்ன செய்யலாம்? ஞானிகள் சொல்கிறார்கள்: ''பணத்தின் மீது வைக்கிற பற்றையே கொஞ்சம் விலக்கி வையுங்கள்''

பணம், கணவன்-மனைவி என்கிற வார்த்தைகளையே அர்த்தம் இல்லாமல் செய்துவிடும் என்பதற்கு இது ஓர் உதாரணம்:

மேல்நாட்டில் ஒரு கணவன்-மனைவி. மனைவியின் ஊதாரித்தனத்தைப் பொறுக்க முடியாத கணவன் பத்திரிகையில் ஓர் அறிவிப்பு கொடுத்தார். ''இனி என் மனைவி வாங்கும் எந்தக் கடனுக்கும் நான் பொறுப்பாளியாக முடியாது''

''மறுநாள் அதே பத்திரிகையில் மனைவி கொடுத்த அறிவிப்பு''

''என் கடன்களுக்கு யார் பொறுப்பாளியாக இருக்கிறாரோ... அவர் தான் இனி என் கணவர்''.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

சமய நல்வாழ்வுக்கு வழிகாட்டியாகத் திகழும் வலி.கிழக்கு சைவசமய அருள் நெறி மன்றம்

(கடந்தவாரத் தொடர்ச்சி)

ஞானி

சைவசமயம் சார் நிலையில் நல்வாழ்வுக்கும் ஆன்மிக மேம்பாட்டிற்கும் வழிகாட்டும் சைவசமய அருள் நெறிமன்றம் மாணவர்களின் கல்வி மேம்பாடு, வறிய மக்களின் வாழ்வாதார மேம்பாடு என்ற வகையில் சமயம் சாராத நிலையில் சகல மதத்தவரையும் சமமாக மதித்து அவர்களுக்கு உதவி வருவதும் மனிதநேயம் சார் நிலையில் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதும் சமரச சன்மார்க்கத்தை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது.

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'' என்ற மகுடவாக்கியத்துடன் சிவலிங்கம் பஞ்சகிருத்திய யோகநிலையில் சிவபெருமான் மற்றும் சூரியன் உள்ளடங்கிய சிவசின்னங்களை இலச்சினையாகக் கொண்ட வலி.கிழக்கு சைவசமய அருள்நெறி மன்றம் விளம்பரம் இன்றி கருமமே கண்ணாகக் கொண்டு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. கருமங்களுக்கான வழிகாட்டல்களை மன்றத்தின் ஸ்தாபகரும் தலைவருமான சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்தி ஹரக் குருக்கள் மேற்கொண்டு வருகிறார். மன்ற நிர்வாகம் சகல நிலையிலும் தனது ஒத்துழைப்பை வழங்கி வேலைத்திட்டங்களை நிறைவுசெய்து வருகின்றது.

2011 ஆம் ஆண்டு நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதலாவது குரு மகா சந்நிதானத்தின் 30 ஆவது குருபூசை விழா, நாயன்மார்களின் குருபூசை தின விழாக்கள், சிறப்புச் சமயச் சொற்பொழிவுகள், சங்கீத இசைக்கச்சேரி (சங்கீத பூஷணம், ஏ.கே. கருணாகரன்)நவராத்திரி தினங்களில் விழாக்கள், ஆறுமுக நாவலர் குருபூசை, மாணவர் மட்டத்திலான பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, சகலகலாவல்லி மாலை மனைப் போட்டி, அறிஞர்கள், கலைஞர்கள் பாராட்டு விழா, கூட்டுப் பிரார்த்தனை, சமய சார் நிலையில் துண்டுப்பிரசுரங்கள், சமய அறிஞர்களின் வரலாற்றுக் குறிப்பு, நல்லை ஆதீன குருமகா சந்நிதான வரலாறு பிரசுரம், உள்ளடங்கலாக 25 இற்கு மேற்பட்ட நிகழ்வுகளை நடத்தியுள்ளது. அவற்றோடு கூடிய நிலையில் வெற்றி பெற்ற மாணவர்கள் மற்றும் போட்டியாளர்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்துள்ளது. இந்த வகையில் நியமப் படுத்தப்பட்ட நிலையில் ஆண்டுதோறும் விழாக்களை நடத்தி வருவதோடு நிகழ்வுகளை ஒரே இடத்தில் நடத்தாமல் வலி.கிழக்கில் உள்ள கிராமங்களில் உள்ள ஆலயங்கள் தோறும் நடமாடும் நிலையில் நடத்தி வருகின்றது.

மக்களை தேடிச்சென்று சமய விழாக்கள் மாணவர்களுக்கான போட்டிகள் விழாக்களை கிராமிய மட்டத்தில் நடத்துவது குறித்த விழாக்களில் உள்ளூர் பிரமுகர்கள் மற்றும் கல்விமான்களைக் கௌரவித்து மேல் நிலைப் படுத்துவது மக்களின் வரவேற்பை பெற்றிருப்பதோடு ஏனைய அமைப்புகளுக்கு முன்னோடியாகவும் உள்ளது.

நல்லை ஞான சம்பந்தர் ஆதீனத்தினால் முதலாவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி நாததேசிக ஞானசம்பந்தர் பிரமச்சாரிய சுவாமிகள் காலத்தில் வெளியிட்டு வந்த ஆதீன முதல்வரை ஆசிரியராகக் கொண்ட '' அருளமுதம்'' இதழ் சமய சஞ்சிகை கடந்தகால நாட்டு நிலைமைகளினால் வெளிவராத போதிலும் அந்த சஞ்சிகையை நினைவுகூரும் வகையில் ''அருள் அமுதம் '' சஞ்சிகை ஒன்று மன்றத்தினால் 2010 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன் அட்டையில் கோமாதாவாகிய பசுவின் உடலின் அங்கங்கள் தோறும் அழைந்திருக்கும் தேவர்கள், இருஷிகள்,தெய்வங்களின் படங்கள் அழகுவர்ணத்தில் அச்சிடப்பட்டிருப்பது சஞ்சிகைக்கு பெருமை சேர்த்திருப்பதோடு கோமாதா தொடர்பான விழிப்புணர்வை சமூகத்திலும் குறிப்பாக இளம் தலைமுறையினர் மத்தியிலும் ஏற்படுத்தியுள்ளது.அத்துடன் அதன் உள்ளடக்கமும் மிக மிக காத்திரமானதாக அமைந்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற மன்றத்தின் ஆண்டு விழா வைபவத்தில் யாழ். மாவட்டத்தின் மூத்த அறிஞர்கள், துறைசார் நிபுணர்கள் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டிருப்பதோடு அவர்களுக்கு விருதுகளும் சான்றுப் பத்திரங்களும் மன்றத்தினால் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பாராட்டுகளுக்கான தெரிவுகள் வலி. கிழக்கு பிரதேசம் சார் நிலையில் மட்டுப்படுத்தப்படாமல் யாழ். மாவட்ட நிலையில் மேற் கொள்ளப்பட்டிருப்பது மன்றத்தின் பணி முன்னெடுப் புக்கள் பிரதேசம் சார் நிலை யில் இல்லாமல் மாவட்டம் சார் நிலையில் சமயத்தைக் கடந்து தமிழர்கள் என்ற நிலையில் மேற் கொள்ளப் பட்டிருப்பதைக் கண்டுகொள்ள முடிகின்றது.

மாணவர்களுக்கான கௌரவிப்புக்கள் மற்றும் கல்வி ஊக்குவிப்பு,போட்டிகள் சைவ சமயம் சார் நிலையில் மட்டுப்படுத்தப்படாமல் தமிழ் மாணவர்கள் என்ற நிலையில் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. சைவ மாணவர்களுடன் போட்டியிட்டு கிறிஸ்தவ, கத்தோலிக்க மாணவர்களும் தமது திறமையை நிலைநாட்டி பரிசில் பெற்றுள்ளனர் பாராட்டப்பட்டுள்ளனர் .

வறிய குடும்பங்களுக்கான வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகளும் சமயம் கடந்த நிலையில் சமூக மேம்பாட்டை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மாணவர்களுடன் தொடர்பான நிகழ்வுகளில் சமயம் சார்புகளுக்கு அப்பாற்பட்ட நிலையில் கல்வி மேம்பாடு மற்றும் குறித்த போட்டியாளரின் தனிப்பட்ட திறமை தேர்ச்சி என்பவற்றை கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்படுகின்றது.

மன்றத்தின் பணி முன்னெடுப்புக்கள் மற்றும் தகவல்களை '' www.arulneri.com'' என்ற இணையத்தளத்தின் மூலம் மேலும் அறியலாம். சமகாலச் சூழலில் மன்றச் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு புலம்பெயர் உறவுகள் மற்றும் நிதிவளம் கொண்டவர்கள் உதவ முன்வருவது வரவேற்கத்தக்கது என மன்றத்தின் பொருளாளர் பிரம்மஸ்ரீ பி.ரவிசங்கசர்மா தெரிவித்தார். சைவ சமய அருள் நெறி மன்றத்தின் பணிகள் மேலும் வளர வாழ்த்துவோம்.

மன்றத்தின் பணி முன்னெடுப்புக்கள் மற்றும் தகவல்களை "www.arulneri.com" என்ற இணையத் தளத்தின் மூலம் அறியலாம். சமகாலச் சூழலில் மன்றச் செயற்பாடுகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு புலம்பெயர் உறவுகள் மற்றும் நிதிவளம் கொண்டவர்கள் உதவ முன்வருவது வரவேற்கத்தக்கது

(முற்றும்)

தடைசெய்யப்பட்ட வலைகளைப் பாவித்த இருவர் கைது

சிலாபம்,ஜூன்1

சிலாபம் பிரதேச ஏரிகளில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பாவித்து மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட இருவரை மாரவில மாவட்ட கடற்றொழில் அலுவலக அதிகாரிகளுடன் இணைந்து சிலாபம் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்றுமுன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்டதாக மாரவில கடற்றொழில் அலுவலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிலாபம் பொலிஸாருடன் இணைந்து கடற்றொழில் அலுவலக அதிகாரிகள் மேற்கொண்ட இந்த நடவடிக்கையின் போது சுமார் ஒரு லட்சம் பெறுமதியான தடை செய்யப்பட்ட வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த வலைகளைப் பாவிப்பதால் ஏரிகளில் உள்ள சிறிய மீன் குஞ்சுகள் அந்த வலைகளுக்குள் அகப்பட்டு இறந்து விடுவதால் மீன் உற்பத்தி பாதிக்கப்படுகின்றது என்று கடற்றொழில் அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)

பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை

மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் தகவல்

பட்டதாரிகளின் அரச நியமனம் தொடர்பான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளன.

எருவில்,ஜூன்1

மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலுள்ள பட்டதாரிகளின் அரச நியமனம் தொடர்பான நேர்முகப்பரீட்சைகள் எதிர்வரும் 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் வி.முரளிதரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பரீட்சையில் அனைத்துப் பட்டதாரிகளும் கலந்து கொள்ளவேண்டும். கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் ஆராயப்பட்டு, உடனடியாக திறை சேரிச் செயலாளருக்கு ஜனாதிபதி விடுத்த உத்தரவின் அடிப்படையில் இந்த நியமனங்களுக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் அடிப்படையில், 2009 ஆம் ஆண்டுவரையில் பட்டங்களை எடுத்த அனைத்துப் பட்டதாரிகளும் உள்வாங்கப்படவுள்ளனர். அதன்மூலம் பட்டதாரிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பலவற்றுக்குத் தீர்வு கிடைக்கும். எனவே விண்ணப்பித்த அனைத்துப் பட்டதாரிகளும் இந்த நேர்முகப் பரீட்சையில் கலந்துகொள்ள வேண்டும்.

விண்ணப்பித்த பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் விரைவில் அனுப்பிவைக்கப்படும். பட்டதாரிகளுக்கான அனைத்து ஒத்துழைப்புகளையும் வழங்கவுள்ளேன்.- என்றார். (ச-30)

அக்கரைப்பற்று வலயத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகள்

வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

எருவில்,ஜூன்1

அக்கரைப்பற்று கல்வி வலயத்திலுள்ள அனைத்து பாடசாலைகளிலும் இந்த ஆண்டுக்குரிய கல்வி அபிவிருத்திக்கான முன்னெடுப்புகள் நடைபெற்று வருகின்றன என்று அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.எம். காசீம் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்ட கல்வி அபிவிருத்திக்கான கூட்டம் அண்மையில் அக்கரைப்பற்று வலயக்கல்விப் அலுவலகத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பணியை மேலும் சிறப்பிக்கும் வகையில் அதற்காகவலயக்கல்விப்பணிப்பாளர் உட்பட அனைத்து உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசர்களும் தங்களுக்கானபணியை சிறப்பாக நடத்துவதற்கு உதவவேண்டும்.

தற்போது மாணவர்களின் அனைத்து செயற்பாடுகளிலும் ஆசிரியர்கள் கவனம் செலுத்தவேண்டும். கல்வி மேலதிகாரிகள், ஆசிரியர்களை மேற்பார்வை செய்வதுடன் நின்றுவிடாது, பாடசாலைகளின் அனைத்து செயற்பாடுகளிலும் மேற்பார்வை செய்து அறிக்கை சமர்ப்பிக்கவேண்டிய கடப்பாடு உள்ளது.

மாணவர்களுக்கான போஷாக்குணவு விநியோகம், தரமான உள்ளீட்டுப் பொருள்களின் பாவனை, அதிபர் முகாமைத்துவம், மாணவர்களது கற்றல் - கற்பித்தல் நடவடிக்கைகள் போன்ற அனைத்து விடயங்களும் மேற்பார்வை செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் மாணவர்களிடமிருந்து சிறப்பான பெறுபேற்றை அடைந்து கொள்ளலாம் -என்றார். (ச-31)

ஆயுதத்தை மீட்கும் போர்வையில் கிழக்கில் புதையல் கொள்ளை

மட்டக்களப்பு,ஜூன்.1

கிழக்கு மாகாணத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளினால் மறைத்து வைக்கப்பட்ட ஆயுதங்களை மீட்கும் போர்வையில் புதையல் கொள்ளையில் ஈடுபட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் உஹன, தமன போன்ற பிரதேசங்களில் புலிகள் ஆயுதங்களை மறைத்து வைத்துள்ளதாக தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதங்களை மீட்கும் போர்வையில் தமக்கு நெருங்கியவர்களையும், நட்பான உத்தியோகத்தர்களையும் கொண்டு புதையல் வேட்டையில் அவர் ஈடுபட்டுள்ளார். பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு ஆதரவு வழங்கிய இரண்டு உத்தியோகத்தர்களுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

புதையல் கொள்ளைக்காக குறித்த பொலிஸ் அதிகாரி, எம்பிலிபிட்டி பிரதேசத்திலிருந்து சிலரை கிழக்கு மாகாணத்துக்கு அழைத்துச் சென்றிருந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஆயுதங்களை மீட்கும் நோக்கில் மேற்கொள்ளப்படவிருந்த புதையல் கொள்ளையை இடைநிறுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தையொட்டி மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று வியாழக்கிழமை புகைத்தல் எதிர்ப்பு விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

பிணையில் விடுவிக்கப்பட்டவர் மீண்டும் விளக்கமறியல்

மட்டக்களப்பு,ஜூன்1

லஞ்சம் பெற்றமை தொடர்பான சம்பவமொன்றின் சந்தேகநபரை லஞ்ச மற்றும் ஊழல்கள் தொடர்பான ஆணைக்குழுவின் ஆட்சேபத்துக்கு மத்தியிலும் அக்கரைப் பற்று நீதிவான் பிணையில் செல்ல அனுமதித்த ஒருவரை மீண்டும் மறியலில்தள்ளியதுகொழும்பு பிரதான நீதிவான் மன்று. நேற்றுமுன் தினம் புதன்கிழமை செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இது நடந்தது.

குறித்த சந்தேகநபர் அக்கரைப்பற்று பஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாவார்.

ஆவணமொன்றில் கையெழுத்திடுவதற்காக பஸ் சாரதியிடமிருந்து 250 ரூபாவை பெற்றுக்கொண்டார் என அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

லஞ்ச குற்றச்சாட்டுக்குள்ளான சந்தேகநபரை விடுவிப்பதற்கு கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்றுக்கும் மேல் நீதிமன்றத்துக்கும் மாத்திரமே அதிகாரம் உள்ளது என்று அதிகாரிகள் வாதாடினர்.

இதை அடுத்து சந்தேகநபருக்கு வழங்கப்பட்ட பிணை அனுமதியை இரத்துச் செய்த கொழும்பு பிரதம நீதிவான், அவரை எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ச)

இரண்டு சடலங்கள் மீட்பு

கஹாவத்தை,ஜூன்1

கஹாவத்தையில் எரிந்த நிலையில் இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கஹாவத்தை, வராபிட்டிய என்னும் இடத்தில் அமைந்துள்ள வீடொன்று தீப்பற்றி எரிந்தது.

அந்த வீட்டில் வாழ்ந்து வந்த இரண்டு சகோதரிகளே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கஹாவத்தை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ச)

ஓட்டோவுக்கு தீ வைப்பு பொலிஸார் விசாரணை

ஓட்டோ மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள் என்பனவற்றின் மீது தீ வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு,ஜூன்1

மட்டக்களப்பு மாவட்டத்தின்களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைத்தீவில் வீட்டின் முன்பாக நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோ மற்றும் இரண்டு மோட்டார் சைக்கிள் என்பன தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

பெரியபோரைதீவு, முனைத் தீவைச் சேர்ந்த மயூரன் என்பவரது ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் என்பனவற்றின் மீதே இந்தத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் ஓட்டோவின் மேல் பகுதி எரிந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிள்களின் மேல் பகுதியும் எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞர் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர் என்பதால் அதன் காரணமாக ஏதாவது செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்ற ரீதியில் விசாரணைகள் இடம்பெற்றுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும் அந்தப் பிரதேச தகவலின்படி தனிப்பட்ட பிரச்சினைகள் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை களுவாஞ்சிக்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

மகனின் தாக்குதலில் உயிரிழந்தார் தாய்

தொம்பே ,ஜூன்1

தொம்பே - தெகடன பிரதேசத்தில் மகனின் தாக்குதலுக்கு இலக்காகி தாய் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை 8.40 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

தாய்க்கும் மகனுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் மோதலில் சென்று முடிந்ததில் இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது.

சடலம் தொம்பே வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் இதுவரை கைது செய்யப்படவில்லை எனத் தெரிவித்த தொம்பே பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

இளைஞர்கள் குழு சாய்ந்தமருது வருகை

சாய்ந்தமருது,ஜூன்1

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஸ்ரீலங்கா யூத் இளைஞர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் அடங்கிய குழுவொன்று சாய்ந்தமருது இளைஞர் சேவை மத்திய நிலையத்துக்கு வருகை தந்துள்ளனர்.

கிழக்கு மாகாண கரையோர இளைஞர், யுவதிகளுடனான பரஸ்பர புரிந்துணர்வினையும் இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் பேணுவதுடன் கலை மற்றும் கலாசார விழுமியங்களை பரிமாறும் அடிப்படையில் இந்த ஒன்று கூடல் நிகழ்வு இடம்பெற்றது. (ச)

தருவது வித்தீயா இன்றைய நாள்

உங்களுக்கு எப்படி?

மேடம்: அவசரப்பட்ட செயற்பாடுகளால் ஆதாயங்களைவிட விரயங்களே அதிகரிக்கும். சுய தேவைகள், ஆடம்பர விருப்பங்களை நிறை வேற்ற முற்படுவீர்கள். அலுவலகப் பணிகளில், தேவையற்ற தொந்தரவுகளை சந்திக்க நேரிடும். பழக்கப்பட்டபெண் நண்பர்களால், சில காரியங்களைச் செய்து கொள்வீர்கள்.

இடபம்: நீங்கள் விரும்பியோ, விரும்பாமலோ சில பொறுப்புகள் ஏற்படும். ஏற்றுக்கொண்ட பொறுப்புகளால் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடலாம். எதிலும் பொறுமையோடு செயற்படுங்கள். பேச்சுக்களால் சில காரியங்களை எளிதாக முடிக்க வாய்ப்பு உண்டு. உறவினர் ஒருவரின் காரியம் பொருட்டு அலைச்சல் அதிகமாக இருக்கும்.

மிதுனம்: புதிய அறிமுகங்களால் ஆதாயங் கள் கிடைக்கப்பெறுவீர்கள். விடுபட்ட பணி ஒன்றை இன்று செய்து முடிப்பீர்கள். குழந்தை களின் ஆசைகளை நிறைவேற்றும் பொருட்டு, செலவுகள் மேற்கொள்வீர்கள். உடன்பிறப்புகளின் முன்னேற்றத்திற்காக சில முயற்சிகளை பெற்றோருடன் கலந்துரையாடுவீர்கள்.

கடகம்: உடல்நிலையில் திருப்தியற்றபோக்கு என்றபோதும், வேலைகளை பிற்போடாமல் செய்து முடிப்பீர்கள். பொருளாதாரத்தை கணக்கில் கொண்டு. சில வகையில் சிக்கன நடவடிக் கைகளை மேற்கொள்வீர்கள். மாலையில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொள்ளத் திட்டமிடுவீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்கள் விரிவடையும்.

சிங்கம்: மனதில் ஒன்றை நினைத்து, அதை வெளிக்காட்ட இயலாமல் செயற்படுவீர்கள், குடும்ப விவகாரங்களில் சற்று கூடுதல் நிதானம். விமர்சனங்களை தவிர்க்கும். பொதுக்காரியங் களில், தலையீடுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள். முக்கி யஸ்தர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் சற்று தாமதப்படும். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால் செலவுகளே.

கன்னி: வாக்குக் கொடுத்த விவகாரங்களைக் காப்பாற்றுவதற்காக, தீவிர முயற்சி மேற் கொள்வீர்கள். தொழிலில், சிற்சில பிரச்சினைகள் ஏற்பட்டு விலகும். பெண்களால் சில ஆதாயங் களைப் பெறுவீர்கள். வெளிவட்டாரப் பழக்க வழக்கங்களால், சில இடர்பாடுகள் ஏற்பட்டபோதும் பெரிய பாதிப்பு என்று எதுவும் இருக்காது.

நிலவரம்

வைகாசி 20 சனிக்கிழமை 02.06.2012
திதி: திரயோதசி மு.இ 10.07 வரை
நட்சத்திரம்: சுவாதி பி.ப 02.44 வரை
சுபநேரம்: 02.52- 04.22 வரை
ராகு காலம்: 08.52- 10.22 வரை

துலாம்: நீங்கள் நினைத்தபடி சரியென்றும், முடிவானதென்றும் கொள்வீர்கள். பெற்றோரின் உதவிகள் மிகுந்த பயன் தரும். வீட்டிலும், வெளியிடங்களிலும் என்னதான் நல்லவிதமாக செயற்பட்டாலும், நற்பெயர் என்பது கொஞ்சம் கஷ்டமே. முக்கியஸ்தர்களின் சந்திப்பின்போது, உங்களின் கோரிக்கை கள், பேச்சுகள் மிகத்தெளிவான வகையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள்.

விருச்சிகம்: பிரியமான உறவினர்களின் சந்திப்பு நிகழும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். அலைச்சல்களில் இருந்து ஓய்வு பெறுவீர்கள். சில விடயங்களில் தனிமை யில் இனிமை காண முற்படுவீர்கள். போட்டி, பந்தயங்களில் வெற்றி காண்பீர்கள்.

தனுசு: உங்களின் பணிகளைத் தெளிவாக வும், விரைவாகவும் செய்து முடிப்பீர்கள். பணம் பற்றிய கவலைகள் மறையும். குழந்தைகளின் எதிர்கால நலனை கருத்தில் கொண்டு அதற்காக சில ஏற்பாடு மேற்கொள்வீர்கள். அலுவலகப் பணிகளில் எதிர்பாராதவிதமாக பணியில் பளுகூடும். சுபகாரிய விடயமாக பயணம் இருக்கும்

மகரம்: கவனக்குறைவான வார்த்தைகள், கண்மூடித்தனமான செலவுகள், அவசரப்பட்ட செயல்களால் அல்லல்பட நேரிடும்; கவனம். வீட்டிலும், வெளியிலும் வார்த்தைகளில் மென்மை கலந்து இருக்கட்டும். புதிய வேலை வாய்ப்புக்கான முயற்சி வெற்றி தரும். தொழிலில் ஏற்ற இறக்கமான சூழ்நிலை காணப்படும். பயணங்கள் வெற்றி தரும்.

கும்பம்: தெளிவாகத் திட்டமிட்டபோதும், என்னவோ சற்று தடுமாற்றத்துடனேயே செயற்படுவீர்கள். பல சிந்தனைகளை மனதில் போட்டுக் குழப்பிக் கொள்ளாமல், மன நிலையை ஒருநிலைப்படுத்தி செயற்படுங்கள். பண வரவுகள் பற்றாக்குறையாக இருந்தபோதும், தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமம் இருக்காது. குடும்ப நலன் கூடும்.

மீனம்: உங்களின் ஒவ்வொரு காரியங்களிலும் நேர்மறையான மற்றும் எதிர்மறையான விளைவு களை எண்ணிப் பார்த்து செயற்படுவீர்கள். கடன் ஒன்றுக்காக, மாற்று ஏற்பாட்டுக்காக அலைச்சல் இருக் கும். செய்தொழிலில் அபிவிருத்தி காணப்படும். உறவினர் கள் உங்கள் சிக்கலைத் தீர்க்க உதவிக்கரம் நீட்ட முன்வருவர்.

சுடோக்கு

எண் விளையாட்டு

	8	7	5	1			2	
		1		6		5	7	
3	5		8	2				
	4	3	7					
8		9				6		2
					4	8	3	
				4	5		6	9
	6	2		3		7		
	9			7	6	1	8	

சுடோக்கின் நேற்றைய விடை

2	6	1	4	5	8	7	3	9
3	7	8	6	9	2	5	4	1
9	4	5	1	7	3	8	2	6
4	5	3	7	6	1	2	9	8
7	1	9	2	8	4	3	6	5
8	2	6	5	3	9	1	7	4
5	3	4	9	1	7	6	8	2
1	8	2	3	4	6	9	5	7
6	9	7	8	2	5	4	1	3

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத் தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங் கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

14ஆம் ஆண்டு நெஞ்சழியா நினைவு

அன்னை மடியில்
10 * 03 * 1942

அதியாய அழிப்பில்
05 * 06 * 1998

அமரர்

சின்னத்தம்பி நமசிவாயம் (J.P)

(உரிமையாளர்: சிவகுமார் ஸ்ரோர்ஸ்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்)

அக்கிரமக்காரர்களின் அநியாய அழிப்பினாலே
சீக்கிரமாய் எம்மை விட்டு சென்றதேனோ அப்பாவே
ஈரேழு ஆண்டுகள் இங்கில்லையென்றாலும்
முகைவிடும் பூவாகி மணம் வீசி
பூமிதனில் வாழ்ந்திடுவீர் - என்றும்
உம் வழித்தடங்கள் எம் வாழ்வுக்கு வழிகாட்டும்

சிவசக்தி வாசம்
20/11, வைரவர் கோயில் ஒழுங்கை
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(18780) (6,9,10)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



மண்மகிழ
24 ★ 04 ★ 1919

விண்தழுவ
02 ★ 05 ★ 2012

அமரர்

வல்லிபுரம் இராசையா

மாதம் ஒன்று முடிந்ததுவோ ? ஐயா
உங்கள் மலர் முகம் பார்த்து
வழி நடத்தும் தலைவா ? நீ
வான் சென்று மறைந்தனையோ ?
எம் இல்லத்து இறைவனுக்கு எமது இதய
அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்

கோண்டாவில்
இருபாலை வீதி,
கோப்பாய்.

நித்தமும் உம் நினைவுகளுடன்
போராடும்
குடும்பத்தினர்.

[18828][6-7-8]

குடிசன மதிப்பீட்டில் உண்மையில்லை

விதுர எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூன்1

2011ஆம் ஆண்டு குடி சன மதிப்பீட்டு நடவடிக் கைகள் உரிய முறையில் நடத்தப்படவில்லை. சனத் தொகை மதிப்பீடு செய்த அதிகாரிகள் இதுவரையில் எனது வீட்டுக்கு வரவில்லை. அப்படியானால் நான் கள் ளத் தோணியா? என்று முன் னாள் பிரதமரின் மகனும் ஆளும்கட்சி நாடாளுமன்ற உறுப்பினருமான விதுர விக்ரமநாயக்க கேள்வி எழுப் பியுள்ளார்.

> சனத்தொகை மதிப்பீட்டு நடவடிக்கை களில் உண்மை யான தரவுகள் பிரதிபலிக்கப் படவில்லை.

இலங்கையில் நடை பெற்ற சனத்தொகை மதிப் பீட்டு நடவடிக்கைகளில் உண்மையான தரவுகள் பிரதி பலிக்கப்படவில்லை என் பதை எந்த இடத்திலும் தெரிவிக்கத் தயார் என்று அவர் கூறியுள்ளார். (ச)

சிங்கப்பூர் வெளிநாட்டு மற்றும் சட்ட அலுவல்கள் அமைச்சர் கே. சண்முகம் நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீமை நேற்றுமுன்தினம் புதன்கிழமை சந்தித்துள்ளார். இந்தச் சந்திப்பில் நீதி அமைச்சின் செயலாளர் கமலினி டி. சில்வா உட்பட இரு நாடுகளினது பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

எரிபொருள் விலையைக் குறைக்காது மக்கள் வாழ்வை பாழடிக்கிறது அரசு

உறுதிமொழியை நிறைவேற்றக் கோருகிறார் சஜித்

கொழும்பு,ஜூன்1

சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை குறை வடைந்துவரும் நிலையில், தொடர்ந்தும் உள்நாட்டுச் சந்தையில் எரிபொருள்க ளின் விலையை உயர்மட்டத் தில் வைத்திருப்பதன் மூலம் அரசு மக்களின் வாழ்க்கை யில் பெரும் சுமையைச்சுமத்தி வாழ்க்கையைப் பாழடிக்கிறது அரசு ஐக்கிய தேசியக் கட்சி யின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சர்வதேச சந்தையில் எரி பொருள் விலை குறை வடைகின்றபோது உள் நாட்டுச் சந்தையில் அதன் விலையைக் குறைப்பதற்கு அரசு பின்வாங்காது என

> சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை குறைவ டைந்துள்ள நிலை யில் அரசு ஏற்கனவே வழங்கிய உறுதி மொழி நிறைவேற் றப்பட வேண்டும்.

பெற்றோலிய வளத்துறை அமைச்சர் ஏற்கனவே கூறி யுள்ளார். எவ்வாறாயினும் அதிக விலையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எரிபொருள் கையிருப்பை, குறைந்த விலைகளில் விற்பனை செய்ய முடியாது என தற்போது அமைச்சர் கூறிவருகின்றார் சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை குறைவ டைந்துள்ள நிலையில் அரசு ஏற்கனவே வழங்கிய உறுதி மொழி நிறைவேற்றப்பட வேண்டும்.- என்றார். (ச)

விலைகளை காட்சிப்படுத்தாத வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

நுகர்வோர் விவகார அதிகார சபை அறிவிப்பு

கொழும்பு,ஜூன்1

பொதுமக்களின் பார் வைக்கு விலைப்பட்டியல் களை காட்சிப்படுத்தத் தவ றும் வர்த்தகர்களுக்கு எதி ராக நடவடிக்கை எடுக்கப்ப டும் என்று நுகர்வோர் விவ கார அதிகார சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.

வர்த்தக நிலையங்களில் பொருள்களின் விலைப் பட் டியல்கள் பொதுமக்களின் காட்சிக்கு வைக்கப்படாமல் இருந்தால் நுகர்வோர் அதி கார சபையிடம் பொதுமக் கள் முறையிடலாம் என்று அச்சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து நுகர்வோர் விவகார அதிகார சபையின் தலைவர் தெரிவித்ததாவது:-

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் எல்லா நேரங்களிலும் பொருள்களின் விலைகள் காட்சிக்கு வைக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நுகர்வோரின் வசதிக் காகவும் வெளிப்படைத் தன்மை பேணுவதை உறு திப்படுத்துவதற்காகவும் விற்பனை செய்யப்படும் அனைத்துப் பொருள்களின தும் விலைகளை விற்பனை யாளர்கள் காட்சிப்படுத்து வது அவசியமாகும். இதற் கிணங்க அவர்கள் நடந்து கொள்ளாவிட்டால் அது சட்டமீறலாக அமைகிறது.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள் நடைமுறையில் உள்ளதை அறியாமல் பொருள் களின் விலைகளை நுகர் வோருக்கு காட்சிப்படுத் தாமல் விற்பனையாளர்கள் சிலர் விற்பனையில் ஈடுபடு கின்றனர்.

இதனால் பொருள்களை காட்சிப்படுத்தாமை தொடர் பாக மாதாந்தம் சோதனை நடத்தப்பட்டு வருகின்றது. கடந்த மாத சோதனை நட வடிக்கையின்போது 4,000 பேர் இவ்வாறு பொருள் க ளின் விலைப்பட்டியல்கள் இல் லாமல் விற்பனையில் ஈடு பட்டுள்ளனர் - என்றார். (ச)

மாணவர் எண்ணிக்கையை கல்வி அமைச்சு கோருகிறது

கொழும்பு,ஜூன்1

பாடசாலை வகுப்பு க ளில் அதிகமாக மாணவர் கள் உள்ளனர். இதனால் ஒவ் வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை குறித்து அறிக்கை சமர்ப்பிக் குமாறு அனைத்து தேசிய பாடசாலைகளையும் கல்வி அமைச்சு கோரவுள்ளது.

சில வகுப்புகளில் 45 மாணவர்கள் உள்ளனர். இந்த நிலை தொடர அதிபர்கள் அனுமதிக்கக்கூடாது என்று கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சர்வதேச தராதரங்களின் படி ஒவ்வொரு வகுப்பிலும் 35 மாணவர்களே இருக்க வேண்டும். எனினும் நாம் 42 மாணவர்களை நியமமாக நிர்ணயித்துள்ளோம். ஆனால் சில பாடசாலைகளில் இந்த விதி பின்பற்றப்படுவதில்லை என்று அவர் கூறினார்

சில பாடசாலைகளில் மாணவர்களின் வருகைப் புத்தகத்தில் சில மாணவர் களின் பெயர்கள் பதிவு செய்யப்படாமலும் உள்ளன. ஒவ்வொரு வகுப்பிலும் உள்ள மாணவர்களின் எண் ணிக்கை குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு 356 தேசிய பாடசாலைகளின் அதிபர் களையும் கோரவுள்ளேன் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

ரயில் மோதி இருவர் சாவு

கனேகொட ரயில் நிலையத்துக்கு அண்மையில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி வந்த ரயிலில் மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்றுமுன்தினம் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

கனேகொடயில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ரயிலுடன் மோட்டார் சைக்கிள் மோதியது. இதில் பயணித்த ஆணும் பெண்ணும் உயிரிழந்தனர். (ச)

நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பில்லை

கொழும்பு,ஜூன்1

இலங்கையில் நில நடுக்கம் ஏற்பட வாய்ப் பில்லை என்று புவியியல் மற்றும் அகழ்வாராய்ச்சித் திணைக்களத்தின் தலை வர் என். ஜீ. விஜேயானந்த தெரிவித்தார்.

நாட்டின் பல பகுதிக ளில் அண்மையில் சிறி யள விலான நிலநடுக் கங்கள் பதிவாகியிருந்தன.

இந்த நில நடுக்கங்கள் ஆபத்தானவை இல்லை என்று அவர் தெரிவித்தார்.

இலங்கையில் நில நடுக் கம் தொடர்பில் ஆய்வு நடத் தக்கூடிய தகுதியும் திறமை யும் உடைய அதிகாரிக ளும், தொழில்நுட்பமும் கா ண ப் ப டு கி ன் ற மை குறிப்பிடத்தக்கது.

(ச)

காலி கோட்டையில் 100 பீரங்கிகள் மாயம்

கொழும்பு,ஜூன்1

காலி கோட்டையின் கண்காணிப்பு நிலைகளில் பொருத்தப்பட்டிருந்த 100 பீரங்கிகள் காணாமல் போயுள் ளன என்று தெரிவிக்கப் படுகின்றது.

ஒல்லாந்தரின் ஆட்சி யில் இலங்கை இருந்த போது, பயன்படுத்தப்பட்ட பீரங்கிகளே காணாமற்போயுள் ளன என்று காலி மரபுரிமை கள் நிறுவகம் தெரிவித் துள்ளது. காலி கோட்டை யில் இந்தப் பீரங்கிகளைக் கண்காணிப்பு நிலைகளில் பொருத்தி வைத்து ஒல் லாந்தர் பயன்படுத்தி வந்த னர் என்று அந்த அமைப்பு கூறியுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர் பாக விசாரணைகள் மேற் கொள்ளப்படவுள்ளன என்று தேசிய மரபுரிமைகள் அமைச் சர் ஜெகத் பாலசூரிய தெரி வித்துள்ளார். இந்தப் பீரங் கிகள் உலோகத்துக்காக திரு டிச் செல்லப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ச)

சட்டவிரோத ஆள்கடத்தல்: அரசியல்வாதிக்கு தொடர்பு

கொழும்பு,ஜூன்1

சட்டவிரோத ஆள் கடத்தல் சம்பவங்களு டன் அரசியல்வாதி ஒருவருக்கு தொடர்பு இருப்பதாகத் தெரி விக்கப்படுகிறது.

படகு மூலம் ஆள் களை சட்டவிரோத மாகக் கடத்தும் சம்ப வத்துடன் பிரபல அரசி யல்வாதி ஒருவருக்கு தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின் றது.

கடந்த 28 ஆம்திகதி ஆஸ்திரேலியா நோக் கிச் செல்ல திட்டமிட் டிருந்த 112 பேர் கைது செய்யப்பட்டதனைத் தொடர்ந்தே இந்த விட யம் அம்பலமாகியுள் ளது.

இந்தச் சம்பவத் துடன் தொடர்புடைய ஏழு முகவர்கள் கைது செய்யப்பட்ட போதி லும், பிரதான முகவர் இதுவரையில் கைது செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படு கின்றது. (ச)

அபராதத்தைச் செலுத்தினார் பொன்சேகா

கொழும்பு,ஜூன்1

முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா வெள்ளைக் கொடி வழக்கில் விதிக்கப்பட்ட அபராதத் தைச் செலுத்தியுள்ளார்.

வெள்ளைக் கொடி வழக்கில் சரத் பொன்சேகாவுக்கு மூன்றாண்டு கால சிறைத்தண்டனையும் ஐயாயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டிருந்தது.

கொழும்பு மேல் நீதிமன்றில் குறித்த அபராதப் பணத்தை சரத் பொன்சேகா செலுத்தியுள்ளார்.

அபராதப் பணத்தைச் செலுத்தா விட்டால் மேலும் ஆறு மாத கால கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப் படும் என்று நீதிமன்றம் அறிவித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (ச)

VACANCIES
UNIVERSITY OF JAFFNA, SRILANKA.

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

FACULTY OF MEDICINE

Senior Professor/Professor in
Anatomy/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Forensic Medicine/ Pharmacology/ Medicine/ Paediatrics / Surgery/ Obstetrics & Gynaecology

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in
Biochemistry/ Physiology/ Community & Family Medicine/ Pathology/ Forensic Medicine/ Pharmacology/ Psychiatry/ Paediatrics/ Surgery/ Psychology

Endowment Chair in Oncology/ Orthopaedic Surgery

Note:
1. Applications will be entertained from candidates with **MBBS** degree only for the above posts.
2. Preference will be given to those who have **MD in Family Medicine** or **MBBS degree with commitment to do Family Medicine** for the Posts in **Community & Family Medicine**.

PARA MEDICAL DEGREE PROGRAMME

Senior Lecturer Grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in
Medical Laboratory Technology

SALARY AND OTHER BENEFITS

Post	Salary scale
Senior Professor	Rs.57,755 - 11x900 - 67,655/-p.m
Professor	Rs.50,905 - 13x850 - 61,955/-p.m
Senior Lecturer Gr.I	Rs.42,650 - 7x800 - 48,250/-p.m
Senior Lecturer Gr.II	Rs.37,650 - 11x700 - 45,350/-p.m
Lecturer (Probationary)	Rs.26,900 - 10x585 - 32,750/-p.m

Note:

In addition to the above salary, the following allowances will also be paid:
i. Academic allowance
ii. Research allowance - 25% of the basic salary
iii. Special allowance -10% of the basic salary
iv. Cost of living allowance of Rs.5,850/-p.m

Statutory benefits:

I. Sabbatical leave entitlement for the holder of the Post of Senior Lecturer Gr.II and above.
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
III. Gratuity payments
IV. Employees' Trust Fund benefits.
V. Free Medical Services.

Closing date:

Post of Senior Professor/Professor - 17.08.2012

Other posts - 13.07.2012

Applications and other documents for the Post of Senior Professor/Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/Academic Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self –addressed stamped envelope 23x10 c.m. in size.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**. Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order/Postal Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments /Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

REGISTRAR
UNIVERSITY OF JAFFNA
SRI LANKA
30.05.2012

(C\245) (6,7,10)

போட்டி

உலக புத்தக தினத்தை முன்னிட்டு நூலக விழிப்புணர்வு நிறுவகம் நடத்தும் கவிதை, கட்டுரை, சிறு கதை மற்றும் ஓவி யப் போட்டிகளுக் கானவிண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

நாடளாவிய ரீதி யில் நடத்தப்படும் இந்தப் போட்டியில் பாடசாலை மாணவர் கள் உட்பட பொது மக் களும் பங்குபற்றலாம்.

ஆர்வமுடையவர் கள் எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திக திக்கு முன்னதாக தலைவர், நூலக விழிப்புணர்வு நிறு வகம், வட்டுவிளி அம்மன் கோயிலடி, இணுவில் மேற்கு, சுன்னாகம் எனும் முகவரிக்கு ஆக் கங் களை அனுப்பி வைக் கலாம். (எ-14)

கருத்தரங்கு

யாழ். வ ல ய க் கல்வி அலுவலக வெளிக்கள நிலை யம் நடத்தும் 2012 ஆம் ஆண்டு உயர் தர மாணவர்களுக் கான உயிரியல் பாட கருத்தரங்கு எதிர்வ ரும் 5 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடை பெறவுள்ளது. அத னைத் தொடர்ந்து எதிர் வரும் 7 ஆம் திகதி வியாழக்கி ழமை காலை 8.30 மணிக்கு பௌதீகவியல் பாடத் தின் இலத்திரனியல் தொடர்பான கருத் தரங்கும்நடைபெறும்.

இந்தக் கருத்த ரங்கில் உயிரியல், கணிதபாட மாண வர் கள் கலந்து பயன் பெறுமாறு கூறப்பட் டுள்ளது. (ம-14)

நீங்கா நினைவில்
3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
பற்குணம் சதீஸ்குமார்
(Dip. in Nursing- தாதிய உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை)

பிறப்பு
08★10★1976

இறப்பு
04★06★2009

எண்ணம் போல் வாழ்வொன்று இனிதாக அமைந்திடுமென
தின்ணமாய் நம்பியிருந்தோம் தீதேதும் நினைக்கவில்லை உன்
வண்ணச் சிரிப்பழகும் வடிவழகு வதனமும் இன்றளவும்
எண்ணத்தில் நின்றாடி இதயத்தை பிழியுதடா சதீஸ்!
மண்விட்டு நீ மறைந்தோடி மூன்றாண்டு ஆனாலும்
கண்விட்டு அகலவில்லை உன் உருவம் பாதி வழியில்
விண்ணுக்கு விரைந்தோடி நீ போனாலும் உன் குரல்
பண்ணாக செவியினில் ஒலிக்குதடா அன்புச் சோதரனே
ஆண்டுகள் எத்தனை அடுக்கடுக்காய் கழிந்தாலும்
மீண்டும் ஒரு தடவை நீ வருவாய் என காத்துள்ளோம்!
ஆண்டவனை நினைக்கும் அத்தனை பொழுதுகளிலும்
மீண்டும் உன் உடன் பிறப்பாகிடவே வேண்டுகின்றோம்!

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(18831)(45.6.9)

மரண அறிவித்தல்

சுப்ரமணியஐயர் யோகீஸ்வர சர்மா
(பிரதமகுரு, பாணன்குளம் நாச்சியம்மன் கோயில் கச்சேரி நல்லூர் வீதி),

நல்லூரைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கை.கோயிலின் பிரதம குருவுமான சுப்ரமணிய ஐயர் யோகீஸ்வர சர்மா (30.05.2012) புதன்கிழமை மாலை அம் பிகையைச் சரணடைந்துவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுப்ரமணியஐயர் (ஈச்சமோட்டை வைரவகோயில் முன்னாள் பிரதம குரு) மற்றும் பார்வதியம்மா தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்றவர்களான காரைநகர் ஹரிஹர சாஸ்திரிகள் - பூரணம்மா தம்பதியரின் மருமகனும் சுஹன் பாபு (H.N.B. யாழ்ப்பாணம்) இன் அருமைத் தகப்பனாரும், சாவித்திரி (இந்தியா), ஞானகி, தேவகி (இந்தியா), ஞானாம்பிகை, கலைச்செல்வி ஆகியோரின் சகோதரனும், சந்திர மௌலீஸ்வரக் குருக்கள் (கொழும்பு), சிவஞான சுப்ரமணிய சர்மா (இறைப்பாறிய ஆசிரியர்), H.S. சர்மா (ரமணி ஐயர்), வசந்தி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.06.2012) வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

இல. 56,மூத்தவிநாயகர் வீதி,
முதலாவது ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.

(18553) 45. 6.9)

வான் சாரதி தேவை

பாடசாலை சேவையில் பண்டத் தரிப்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் சேவை செய்ய வான் சாரதி தேவை.

தொடர்பு : 077 9182920

(18852)(2-7-6)

நினைவஞ்சலி

அமரர்
தம்பிமுத்து ஸ்ரீபன் துரைசிங்கம் (சேனர்)

நேற்றைய (31/05/2012) ஆம் திகதி உதயனில் பக்கம் 6 B இல் பிரசுரமாகிய 31ஆம் ஆண்டு நினைவஞ்சலியை 31ஆம் நாள் நினைவஞ்சலி என வாசிக்கவும். (C\253)

நன்றி நவிலலும்
31 ஆம் நாள் நினைவலையும்

அமரர்
பொன்னுத்துரை கந்தசாமித்துரை
(ஓய்வுபெற்ற அம்புலன்ஸ் சாரதி)

தாயின் மடியில்
29.04.1947

ஆண்டவன் அடியில்
03.05.2012

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு சகல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும், வெளி நாடுகளிலும் உள்நாட்டிலும் இருந்து தொலை பேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை அவரின் இல்லத்தில் நாளை (02.06.2012) சூரிக் கிழமை காலை 6 மணிக்கு நடைபெற்று ஊறணி தீர்த்தக் கடற்கரையில் அஸ்தி கரைக்கப்பட்டு அதனைத்தொடர்ந்து முற்பகல் 11 மணிக்கு ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும், மதியபோசனமும் இடம்பெறும். அதில் தங்களையும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

65/5, ஆலடி ஒழுங்கை
கரவத்தனை, வல்வெட்டித்துறை,
தொ.பே. 077 7430895

குடும்பத்தினர்

(16997) (45 .7 .9)

"தம்பி என்ன கேட்டனீர்?"

ஒருவர் இறந்துவிட்டால் அந்தச் செய்தியை ஊருக்கு அறிவிப்பதற்காக பறை மேளம் அடித்து அந்த ஒலியின் மூலம் அந்தச் செய்தியை தெரியப்படுத்துவார்கள். அந்தக் காலத்தில் சனம் குறைவாக இருந்தால் ஒரு வீட்டுக்கும் மற்ற வீட்டுக்கும் தூர இடைவெளி இருந்தபடியால் பறைமேளம் அடித்து ஓலி எழுப்பி ஒருவருடைய சாவுச் செய்தியை அறிவிப்பார்கள்.

இந்தக் காலம் அப்படி அல்ல மக்கள் தொகை அதிகரித்து விட்டது. புதிய கருவிகளைக் கண்டுபிடித்துள்ளனர். போனில் தொடர்பு கொண்டு தமது உறவுகளுக்கு அறிவித்து விடலாம். பத்திரிகைகளில் மரணஅறிவித்தல் விளம்பரம் கொடுத்து தெரியப்படுத்தலாம். ஆனாலும் சாவு வீட்டினை ஆடம்பரமாகவெண்டாடத் தான் எல்லோரும் நினைக்கிறார்கள்.

பாண்ட் வாத்தியங்கள் அல்லது பறை மேளம் சில சமயம் இரண்டுமே அடித்து வெடி கொளுத்தி பக்கத்து வீட்டுக்காரருக்கு இடைஞ்சலை ஏற்படுத்தி சாவு வீட்டினை கொண்டாடத்தான் நினைக்கிறார்கள். அந்தளவுக்கு எங்கட சனம் சுயபுத்தி இல்லாமலும் இல்லை. சிலர் வலிய வந்து தலை போடேக்கே என்ன செய்யமுடியும்? இறந்தவரின் வாழ்நாளில் உதவிசெய்ய முன்வராத உறவுகள் அவர் இறந்து விட்டதும் அந்த சாவு வீட்டு நிகழ்வினை ஆடம்பரமாக நடத்திக் கொள்வார்கள். அங்கு வந்திருப்பவர்களுக்கு ''இவற்ற செலவில் தான் நிகழ்வு நடக்கு'' என்ற எண்ணத்தை ஏற்படுத்தத்தான் இவர்கள் செலவு செய்கிறார்கள் போலும். இதைவிட. சாவு வீட்டுக்குப் பக்கத்தில் திருமண நிகழ்வு அல்லது கோயில் திருவிழாக்கள் நடந்தால் போதும் சம்பந்தப்பட்டவர்கள் சாவு வீட்டுக்காரரிடம் வந்து எப்ப பொடியை எடுக்கப்போறியள் என்று கேட்டுவிட்டு இத்தனை மணிக்குத் திருமணம். இத்தனை மணிக்குத் திருவிழா அதனால உடனேயே பொடியை எடுங்கோ என்றும் படியும்,பறை மேளம், அடிக்க வேண்டாம் என்றும் வெடி கொளுத்த வேண்டாம் என்றும் சொல்லி விடுவார்கள். அழுகிற சத்தம் கூட வெளியே கேட்கக் கூடாது என்ற மாதிரி சொல்லி விடுவார்கள். ஏனெனில் அவர்களுக்கு திருமணம் நடக்க வேண்டும். அவர்களுக்கு திருவிழா நடக்க வேண்டும். மனிதனாகப் பிறந்தவர்களுக்கு சாவு நிச்சயம். இது புரியாதவர்களா? இல்லை இல்லை அவர்கள் ஊரோடு ஒத்து ஓடுகிறார்கள். ஊர் இளைஞர்கள் கேட்காமல் கொள்ளாமல் மற்றவரின் வாழைத் தோட்டத்துக்குள் இறங்கி வாழைமரம் வெட்டி, தென்னம் குருத் தோலை வெட்டி வீதியை பயன்படுத்த முடியாத அளவுக்கு சோடனை செய்வார்கள். அந்த வீதியூடாக போக்கு வரத்துச் செய்பவர்கள் பற்றிச் சிறிதளவு கூட சிந்தனை இல்லாமல் இல்லை. இளைஞர்கள் இப்படித்தான். பலர் மதுபோதையில் நிற்பார்கள். இன்றைய யாழ்ப்பாணசாவுவீடுநிகழ்வுகள் இப்படித்தான்.

கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு சாவு வீடு நிகழ்வு வலிகாமம் பகுதியில் இடம் பெற்றது. அந்த சாவு வீட்டுக்காரர் பெரிய பணவசதி படைத்தவர் அல்ல. ஆனால் அந்த சாவு வீட்டின் உறவினர் ஒருவர் அந்த சாவு வீட்டினை ஆடம்பரமாக நடத்திக் கொண்டிருந்தார். சாவு வீட்டு நிகழ்வுகளில் பறை மேளம் பிடித்தால், பாண்ட் வாத்தியங்களைப் பிடிக்கமாட்டார்கள். ஆனால் இங்கே பறை மேளமும் பிடித்து பாண்ட் வாத்தியமும் பிடிக்கப்பட்டது. பிறகு என்ன சொல்லவா வேண்டும். பல பேருக்கு சாவு வீடா அல்லது ஏதாவது இசை நிகழ்ச்சிகள் நடைபெறுகிறதா என்று கூட நினைக்கும் அளவுக்கு இசை வாத்தியங்கள் முழங்கின. இரண்டு குழுவும் போட்டிக்கு வாசித்துக் கொண்டிருந்தார்கள். நீயா நானா என போட்டிக்குச் சளைக்காமல் வாசித்துக் கொண்டிருந்தார்கள். அங்கு வந்தவர்களின் காதுகள் வெடிக்காத குறையாய் சவ்வுகள் அதிர்ந்து கொண்டிருந்தன. நிற்பாட்டவா முடியும். வாத்தியக்காரர்களின் முகங்களைப் பார்க்கும் போது கொலைவெறி தெரிந்தது. அப்படித் தெரிந்தும் அவர்களிடம் சென்று நிப்பாட்டச் சொன்னால் அங்கே ஒரு கலவரமே உருவாக வாய்ப்பிருப்பதால் எல்லோரும் பேசாமல் இருந்துவிட்டனர். இதற் கிடையில் இறந்தவர் உடலைக் கூடப் பார்க்காமல் இசைக் கச்சேரியைப் பார்த்துக் கொண்டு இருந்தார்கள். இவர்களுள் நானும் ஒருவனாக அமர்ந்திருக்கிறேன். எனக்குப் பக்கத்தில் ஒரு முதியவர் அந்த இசையில் லயித்து இசைக்கேற்ப தலையை ஆட்டிக் கொண்டிருந்தார். அவருடன் கதைப் பதற்காக அவர்முகம் பக்கம் எனது முகத்தைத் திருப்பினேன். அவர் வாயில் இருந்து வந்த மது மணம் எனது மூக்கில் நுழைந்து சிறிது நேரம் திக்குமுக்காட வைத்தது. இப்படியா மனுசன் குடிப்பது என்று எனக் குள்ளே சொல்லிக் கொண்டு அவரிடம் கதையைக் கொடுத்தேன். ''ஏன் இரண்டையும் பிடித்திருக்கிறீர்கள் காது வெடிக்குது'' என்று கேட்டேன். அவரோ ''அடிக்கத்தான்'' என்றார். உதுதான் குடிகாரரோடு கதைத்தால் இப்படித்தான் இடக்குமுடக்கா பதில் வரும் என்பது தெரிகிறது. அவரிடம் கதைக்காமல் அங்கு இருக்கும் வேறு யாருடனும் கதைப்போம் என்று சுற்றும் முற்றும் பார்க்கிறேன். இதற்குள் அந்த குடிகாரர் என்னைப் பார்த்து விட்டான் ''என்ன தம்பி கேட்டனீர்'' என்று என்னிடம் கேட்டான். நானோ '' ஒன்றுமில்லை சும்மா தான்'' என்று சொன்னேன் அதற்கு அந்தக் குடிகாரன் மீண்டும் என்னிடம் கேட்டான் ''என்ன தம்பி கேட்டனி'' என்று உந்தாளுக் குப் பக்கத்தில் நின்றால் அவ்வளவுதான் என்று அந்த இடத்தை விட்டு எழும்பி வேறோர் இடத்தில் சென்று அமர்ந்தேன்.

கோப்பாய் சண்முகம்
கதையோடு செய்தி

எனக்குப் பக்கத்தில் ஒரு இளைஞர் அவரிடம் அந்த குடிகாரரிடம் கேட்ட கேள்வியைக் கேட்டேன். அதற்கு அந்த இளைஞர் "உதவிக்கு உதவாத பணம் இப்படித் தான் போகும்'' என்று சொன்னார். ''ஒன்றுமே புரியல என்ன சொல்லுறியள்'' என்று கேட்டேன். அந்த இளைஞரோ ''இந்த வீட்டுக்காரர் பணவசதி குறைந்தவர்கள் அவர்களின் வாழ்க்கைக்கு உதவி செய்யாத இந்த உறவினர் ஒருவர் பணத்தைக் கொண்டு வந்து அவர்களின் சாவு வீட்டுக்கு செலவு செய்கிறார். அந்த ஆளுக்குத்தான் பணத்தை எந்த வழியில் செலவு செய்வது என்று தெரியல'' என்றார். இதால பிறருக்கு ஏற்படும் அசௌகரியங்களைப்பற்றி கொஞ்சமும் நினைக்காதவர்கள் இருக்கும்போது பிற கென்ன என்ன வேண்டுமானாலும் நடக்கலாம். என்று எனக்குள்ளே நினைத்துக் கொண்டு அந்த உடலுடன் மயானத்துக்குச் சென்று அடக்கம் செய்துவிட்டுத் திரும்பினேன். என்னை வழி மறித்த அதே குடிகாரன். ''தம்பி என்ன கேட்டனீர்'' என்றார். ''ஒன்றுமில்லை'' என்று சொல்லிவிட்டு வீடு நோக்கி வந்தேன். இந்த சாவு வீடு என்ன, இனிவரும் சாவு வீடுகளும் இதேபோலத் தான் சனம் என்ன கேட்டார்கள் என்று தெரியாமல் இடம்பெறப்போவது தான் கவலைக்குரிய விடயமாகவுள்ளது.

மாற்றுவலுவுடையோரை புகைப்படம் எடுத்தல்

நவாலி, ஜூன் 1

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாற்று வலுவுடையோருக்கு விசேட அடையாள அட்டை வழங்குவதற்கு பிரதேச செயலகத்தில் வைத்து புகைப்படம் எடுக்கப்படவுள்ளது. இன்றும் எதிர்வரும்5,7, 11 ஆகிய தினங்களில் காலை 9மணிக்கு சமுகமளிக்கு மாறு சமூக சேவை உத்தியோகத்தர் என். புரட்சிதாசன் அறிவித்துள்ளார். (வ-100)

கார் விற்பனைக்கு
KP - xxx MARUTI Suzuki, ESTILO VXI
உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0777448689
(18809)(2-6-7)

காணி விற்பனைக்கு
வேம்பிராய் சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரத்திலுள்ள 8 பரப்பு தென்னங்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 9271528
(18620)(6-7-8)

பெயர் மாற்றம்

சந்திரசேகரப்பிள்ளையார் கோயில் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த கரோலிஸ் புஞ்சிபபா ஆகிய நான் இன்று முதல் எனது சகல ஆவணங்களிலும் கரோலிஸ் கபிஷன் என்றே கையொப்பம் இடுவேன் என அறியத்தருகின்றேன்.
(18823) (2-6-7) கரோலிஸ்கபிஷன்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்		மறைவு
26		12
★		★
10		06
★		★
1928		2011

அமரர்
இராமுப்பிள்ளை சிவலிங்கம்

அன்பு அப்பாவே
அன்புப்பார்வை எங்கே
அரவணைத்த கரங்களெங்கே
மகிழ்விக்கும் வார்த்தையெங்கே
எல்லாம் ஓய்ந்து ஓராண்டானதிங்கே

முதலாம் ஆண்டு நினைவு நிகழ்வு இன்று (01.06.2012) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற உள்ளது.
இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

கொத்துக்கட்டி வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்
குடும்பத்தினர்.
(18764)(6-9-8)

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு	உதிர்வு
28	01
★	★
08	06
★	★
1932	2006

அமரர் ஸ்ரீமான்
வை. இராமசாமிப்பிள்ளை வைத்திலிங்கம்

வருடங்கள் ஆறு ஓடி மறைந்தபோதும் ஐயா
நீங்கள் எம்மைவிட்டு மறைந்தாலும் எமது இதயங்களில்
என்றும் எம்முடன் தான் இருக்கிறீர்கள் உங்கள்
நினைவலைகள் பிறப்பும் இறப்பும் வாழ்வின் நியதியென்றால்
உங்கள் ஆத்மாவிற்கு சொர்க்கம் நிச்சயமே என நினைக்கிறோம்
உங்கள் ஆத்மா சாந்திபெற நாம் யாவரும் பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவுடன்

மனைவி, மகன்மார், மகள், மருமகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், ஸ்தாபனசேவையாளர்களும், சகஜழியர்களும்

சுபம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி
R.V.G. ஸ்தாபனம்,
நல்லூர் யாழ்ப்பாணம்.
(18801)(6-7-8)

வேலை வாய்ப்பு

அச்சு இயந்திர இயக்குனர்
Mechine Minder

பிரபல்யமாக இயங்கிவரும் அச்சகம் ஒன்றிற்கு Mechine Minder தேவை.
உணவு தங்குமிடவசதி இலவசம்.
HAMADA 700 CDX, HAMADA C48
சம்பளம் 25,000. 00 வழங்கப்படும்

தொடர்புகளுக்கு: 077-6687407

கண்ணீர் அஞ்சலி

வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மரியதாஸன் ஜெசு அவர்களின் அன்புத் தாய்
திருமதி
மரியதாஸன் மேரி அஞ்சலா

அவர்களின் பிரிவுச் செய்திகேட்டு துயர் அடைவதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்.
பிரதேசசபை, நெடுந்தீவு.
(சி/261) (2-6-7-9)

ஓராண்டு நினைவஞ்சலி
(வருஷாப்திகம்)

13.06.2011 இல்
இறைவனடி சேர்ந்த
திருமதி
சதாசிவ ஐயர் சுப்புலட்சுமி அம்மா

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (02.06.2012) சனிக்கிழமை மு.ப 10 மணியளவில் கொக்குவில் மேற்கு ஐயனார் கோயிலடியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் இந்த நிகழ்விலும் மதிய போசனத்திலும் பங்குபற்று மாறு உறவினர் நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

205/1,
முரசு மோட்டை,
பரந்தன்.
குடும்பத்தினர்
(19254) (6.9.10)

சிறார்களுக்கு ஓர் இணையத்தளம்

இன்றைய காலகட்டத்தில் இணையம்தான் உலகையே ஆட்டிப் படைக்கின்றது, இவற்றில் சிறுவர்களுக்கான பல்வேறு இணையத்தளங்களும் இருக்கின்றன.

Whyville என்னும் இந்தத் தளம் சிறுவர்களுக்கான சமூக வலைத்தளமாக இயங்குகிறது. இதன் மூலம் உங்கள் குழந்தைகள் பணத்தை நிர்வகிப்பது, சரியான முறையில் உண்பது மற்றும் இணையத்தளப் பாதுகாப்பு போன்ற விடயங்களை கற்றுக் கொள்ளலாம்.

ஏனைய தளங்கள் போலவே சட்டிங் சேவையும் பாதுகாப்பான முறையிலும் வழங்கப்படுகிறது. இந்தச்சேவையை உபயோகிக்கும் முன் சிறார்கள் சட்டிங் உரிமம் பெற வேண்டும்.

அதைப்பெறுவது அவ்வளவு சுலபமல்ல. இது தவிர சிறார்கள் தங்களுக்கென முகங்களை வடிவமைத்து உருவாக்கிக் கொள்ளல், விளையாட்டு அம்சங்கள் என பல உள்ளன. இத்தளம் பாதுகாப்பான முறையில் இணையத்தில் பாவிக்கும் அடிப்படை விடயங்களை கற்றுத் தருகிறது. இணையத் தளமுகவரி http://whyville.net/smmk/nice





ஐ போனிலும் இனி தெளிவாகப் படமெடுக்கலாம்!

ஐபோனில் தெளிவாகப் புகைப் படங்களை எடுப்பதற்கு உதவியாகப் புதிய சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

கைபேசிகள் வைத்திருக்கும் நபர்கள் தங்களுக்குப் பிடித்தமான புகைப்படங்களை எடுப்பது என்பது வழக்கமான ஒன்றுதான். ஐபோன்களைப் பயன்படுத்தி பகல் வேளைகளில் புகைப்படங்கள் எடுக்கும்போது சூரிய ஒளியின் குறுக்கீடுகள் காணப்படலாம். இதனால் புகைப்படங்களில் வேண்டத்தகாத விளைவுகள் உருவாகி தாக்கங்களை உண்டு பண்ணும். இவ்வாறான பிரச்சினைக்குத் தீர்வாக Daylight Viewfinder எனும் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது. இதனை போல் அன்டர்சன் என்பவர் வடிவமைத்துள்ளார். இதன் மூலம் புகைப்படம் எடுக்கும்போது குறித்த சூழலில் காணப்படும் ஒளியின் அளவைக் கட்டுப்படுத்த முடியும்.



எதிர்காலத்துக்கும் அனுப்பலாம் மின்னஞ்சல்

கடந்த காலத்திற்கு எம்மால் புத்திமதிகளைக் கூறமுடியாது. ஆனால் இப்புதிய சேவையினால் உங்களால் உங்களுக்கே எதிர் காலத்திற்கு மின்னஞ்சல் அனுப்பமுடியும்.

FutureMe.org என்ற இணையத்தளம் ஓர் எளிமையான மின்னஞ்சல் சேவையைப் போன்றுதான் செயற்படுகின்றது. எனினும் அதில் நீங்கள் உங்களது மின்னஞ்சல் சென்றடைய வேண்டிய திகதியைக் குறிக்கவேண்டியிருக்கும்.

FutureMe.org ஆனது மின்னஞ்சல்களை விடவும் குறைந்த துல்லியங் கொண்டவை யென்றே இந்தத்தளம் குறிப்பிடுகின்றது.

எதிர்காலத்திற்காக நீங்கள் ஏதாவதொரு சொல்லை எழுதி அனுப்புங்கள். அல்லது ஒன்றிரண்டு வருடங்களில் நீங்கள் எப்படியாக இருப்பீர்கள் என்பதுபற்றி எழுதுங்கள். இந்த மின்னஞ்சல் அந்தத் திகதியில் உங்களுக்கு மீண்டும் கிடைக்கும்.

இதுகிடைக்கும்போது நீங்கள் எப்படி மாறி விட்டீர்கள் என்பதை அப்போது கண்டு கொள்ளலாம். இந்த மின்னஞ்சல்களைத் தனிப்பட்ட ரீதியில் மற்றும் மறைமுகமாகவும் அனுப்ப இது உதவும்.

இவற்றில் பெரும்பாலானவை போராடும் மாணவர்களால் அனுப்பப்படும் வாழ்த்துக்களாகத்தான் உள்ளன. இதில் பலரும் பலவிதமாகக் கருத்துத் தெரிவிக்கின்றனர். சிலர் தம்மைத்தாமே அதிர்ச்சியடைய வைப்பதற்காகவும் அனுப்புகின்றனர். உங்களுக்கு இது நினைவிலுள்ளதா? இருக்காது. இதனை நீங்கள் 3 மாதங்களிற்கு முன்பாக உங்களது அறையிலிருந்து எழுதினீர்கள். நீங்களும் நண்பியும் இன்னமும் ஒன்றாகத்தான் இருக்கின்றீர்களென்று நம்புகின்றேன். இவ்வாறெல்லாம் எழுதிக்கொள்ளலாம். பெயர்களை இவ்வாறான மின்னஞ்சல்களில் எழுதிக்கொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இவை உண்மையில் சட்டக்காரணங்களுக்காகவே ஆகும். ஏனையவர்களுக்கும் இவ்வாறு அனுப்பலாமெனினும், இவை பெரும் விதிமுறைகளுடனும் தடைகளுடனுமே வருகின்றன.

இதற்கு நீங்கள் முதலில் ஒரு பதிவு செய்த பயனாளராக இருக்கவேண்டும். அதனைப் பெறும்போது உங்களது மின்னஞ்சல் முகவரியிலிருந்துதான் அனுப்பப்படுகின்றது என்று அது காட்டும். எனினும், இதில் பல சட்டங்கள் காணப்படுகின்றன. எனினும் இவ்வாறான FutureMe வசதிகளைப் பயன்படுத்த வென்றே இணையத்தளக் கொள்ளையர்கள் இருந்துவருகின்றார்களென்பதும் துரதிஷ்டமே.



Leap எனும் புதிய தொழில்நுட்பம் கணினி பயன்பாட்டில் கீபோர்ட் மற்றும் மவுஸை இல்லாமல் செய்து விடும் என கருதப்படுகின்றது. மேலும் மவுஸ் மற்றும் கீபோர்ட் கொண்டு கணினியை இயக்குவதை விட விரல்கள் மூலம் துல்லியமாக இயக்க முடியுமாம்.

5 வருடங்கள் கண்டறியப்படாத வைரஸ்

Flame என்று அழைக்கப்படும் மூன்றாவது பெரிய கணினி வைரஸ் மத்திய கிழக்கிலுள்ள ஆயிரக்கணக்கான கணினிகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது 2010இல் ஈரானின் அணுவாயுத நிகழ்ச்சிநிரலைத் தாக்கிய Stuxnet வைரசிற்கும் அதன் தரவுகளைத் திருடும் உதவியாளரான Duqu என்ற வைரசிற்கும் பின்னர் மூன்றாவதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. Duqu என்பது Star Wars திரைப்படத்தில் வரும் வில்லனின் பெயரைக் கொண்டதாகும்.

இந்த Flame வைரஸானது சாதாரண கணினி வைரஸ்களை விடவும் 100 மடங்கு மிகவும் சிக்கலானதாகும். இது தகவல்களைத் திருடுவதற்கென்றே வடிவமைக்கப்பட்டுள்ளது. இதனால் மைக்ரோபோன்களைக்கூடச் செயற்பட வைத்து உரையாடல்களைக் கேட்கமுடியும்.

இவ்வாறான வைரசைக் கண்டுபிடிக்க வேண்டுமெனில் அதற்கு ஒரு நாட்டின் உதவிதான் தேவைப்படும். Stuxnet வைரஸ் அமெரிக்காவால்தான் உருவாக்கப்பட்டதென்று பல பாதுகாப்பு நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் எல்லாவற்றையும்விடவும் மிகவும் சிக்கலானதாக Flame வைரஸ் காணப்படுகின்றதென Kaspersky ஆய்வுகூடத்தின் முத்த ஆய்வாளர் Roel Schouwenberg குறிப்பிட்டுள்ளார்.

5 வருடங்களுக்கு இந்த வைரசைக் கண்டுபிடிக்கமுடியாமல் இருந்ததென்றால் எமக்குத் தெரியாத வேறு நடவடிக்கைகளும் இடம் பெற்றுவந்திருக்கின்றன என்றுதான் முடிவுக்கு வரவேண்டியுள்ளது என்றார் அவர்.

மொஸ்கோவைத் தளமாகக் கொண்ட ரஷ்ய ஆய்வாளரான Eugene Kaspersky இன்கீழ் செயற்பட்டுவரும் நிறுவனமானது Suxnet மற்றும் Duqu இனைச் சுற்றியுள்ள பல புதிர்களைத் தீர்த்தது.

எனினும் தற்போதுதான் Flame இன் செயற்பாடுகளைத் தாங்கள் விளங்கிக்கொள்ளத் தொடங்கியிருப்பதாக Kaspersky இன் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் ஆய்வின்படி ஈரானில்தான் பெரியளவு பாதிக்கப்பட்ட கணினிகள் உள்ளதாக இதனைவிடவும் இஸ்ரேலின் பலஸ்தீனப் பகுதிகள், சூடான் மற்றும் சிரியாவிலும் இவை காணப்படுகின்றன.

ஈரானின் யுரேனிய உற்பத்திப் பகுதியைத் தாக்கிய இந்த வைரஸ் Suxnet இன் அளவைவிடவும் 20 மடங்கு அதிகமான பரிபாசைகளைக் கொண்டுள்ளதாகவும் அதன் மைய அணுஉலைகளைச் செயற்பட விடாமல் தடுத்ததாகவும் கூறப்படுகின்றது.

இது வழமையான வைரசைவிடவும் 100 மடங்கு வலிமை மிக்கதென்று Kaspersky நிறுவனம் தெரிவிக்கின்றது.

இதனால் தரவுக் கோவைகளைச் சேகரிக்கலாம், தொலைவிலிருந்து கணினி ஒழுங்குகளை மாற்றலாம், கணினியின் மைக்ரோபோன்களை முடுக்கிவிட்டு உரையாடல்களைப் பதியலாம், திரையிலுள்ளவற்றைப் படமெடுத்து உடனடிச் செய்திகளைப் பார்க்கலாம்.

இந்த வைரஸ் முன்பு வெளிவந்த இரு வைரஸ்களையும் வெளியிட்ட அதே நாட்டினால்தான் உருவாக்கி விடப்பட்டிருக்கவேண்டும் என்கின்றது இந்த நிறுவனம்.

இணையத் தளங்களுக்கு ஜூலையில் பாதிப்பு

எதிர்வரும் ஜூலை மாதம் உலகளவில் குறைந்தது 3 லட்சம் பேர் இணைய இணைப்புக் கிடைக்காமல் பாதிக்கப்படுவார்கள் என அமெரிக்காவின் புலனாய்வுத் துறை (FBI) எச்சரித்துள்ளது. தாங்கள் பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறோமா என்பதனை அறிந்து கொள்ள, புலனாய்வுத் துறை dcwg.org என்ற முகவரியில் ஓர் இணையத்தளத்தை அமைத்துள்ளது. இந்தத் தளத்திற்குச் சென்று உங்களது கணினி மால்வேர் வைரஸ் புரோகிராமினால் பாதிக்கப்பட்டுள்ளதா எனக் கண்டறிந்து, அதற்கான தீர்வையும் பெறலாம். டி.என்.எஸ் சேஞ்சர் (DNS Changer) மால்வேர் என அழைக்கப்படும் இந்த வைரஸைப் பரப்பியவர்கள், பல லட்சம் டொலர் பணத்தை இதன் மூலம் ஏமாற்றி சம்பாதித்துள்ளனர். இந்த வைரஸ் பாதித்த கணினி மூலம் இணைய இணைப்பில் செல்கையில், இந்த வைரஸ் நாம் காண விரும்பும் தளத்திற்குப் பதிலாக வேறு ஒரு தளத்திற்கு எம்மை இழுத்துச் செல்லும் ஆர்வத்தினை தூண்டும் வகையில் வாசகங்கள் தரப்பட்டு மேலும் சில லிங்க்குகள் தரப்படும். இதில் கிளிக் செய்து மாற்றிக் கொள்பவர்களின் பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல் திருடப்பட்டு, அதன் மூலம் பண மோசடியும் மேற்கொள்ளப்படும். மேற்கொள்ளப்பட்ட மோசடியின் மதிப்பு ஒரு கோடியே 40 லட்சம் டொலர் என எப்.பி.ஐ. மதிப்பிட்டுள்ளது.

இந்த மால்வேர் பாதிப்பை நீக்கும் கிளீன் சேவையை எப்.பி.ஐ. இதற்கென அமைத்துள்ள இணையத் தளம் தருகிறது. அப்படியும், ஐரோப்பிய நாடுகள் மற்றும் இந்தியாவில் 3 லட்சம் பேர் இதனால், பாதிப்படைந்தவர்களாகவே இருப்பார்கள்.

பொலிஸாருக்கு விளக்கமறியல்

திருகோணமலை,ஜூன்1

கைதுசெய்யப்பட்ட ஒருவரை கடித்து கடுங்காயங்குள்ளாக்கிய குற்றச்சாட்டின் பேரில் கைதான 3 பொலிஸ் உத்தியோகத்தர்களை எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிவான் எம்.எல்.எம். அஸ்கர் நேற்றுமுன்தினம் புதன்கிழமை உத்தர விட்டார்.

கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதான இளைஞர் ஒருவர் கடந்த 22 ஆம் திகதி இரவு 11 மணிக்கு தனது உறவினர் வீட்டில் கிரிக்கெட் போட்டியை பார்த்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தபோது கிண்ணியா, கட்டையாறு வீதியில் கைதுசெய்யப்பட்டார்.

இவர் பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளான நிலையில் கடந்த 23ஆம் திகதி பொலிஸ் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். இதனைத் தொடர்ந்து தனக்கு ஏற்பட்ட அநீதி மற்றொருவருக்கு ஏற்படக்கூடாது என்று எண்ணி சட்டத் தரணி எம்.எச்.எம்.ராபியின் உதவியுடன் வழக்குத் தாக்கல் செய்தார். இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே மேற்படி பொலிஸ் உத்தியோகத்தர் களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தர விட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

திருகோணமலைக்கு நேற்றுமுன்தினம் புதன்கிழமை சென்ற சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கே.சண்முகம் கிழக்கு மாகாண ஆளுநரை அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

திருமலை பிரதி முதல்வரை எதிர்த்து

சட்டத்தரணிகள் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை,ஜூன்1

கிழக்கு மாகாணசபை பிரதி முதல்வர் நீதிமன்றை அவமதிக்கும் வகையில் நடந்து கொண்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை மாவட்ட சட்டத்தரணிகள் நேற்று வியாழக் கிழமை காலை திருகோணமலை நீதிமன்றத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட சட்டத்தரணி கள் கலந்து கொண்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் குறித்து சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஏ.டபிள்யூ.ஏ.சத்தார், சிரேஷ்ட சட்டத்தரணி ஆ.ஜெகசோதி ஆகியோர் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண பிரதி முதல்வருக்கு எதிராக காசோலை வழக்கொன்று திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் இருந்துள்ளது. குறித்த பிரதிவாதி மன்றுக்கு குறித்த தினம் வராமையால் அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. பிரதி முதல்வர் கடந்த 28 ஆம் திகதி நீதிமன்ற வளாகத்துக்குள் வந்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணி ஒருவருடன் முரண்பட்டதுடன் நீதிவான் நீதிமன்றில் கடமையாற்றும் பதிவாளர், ஏனைய உத்தியோகத்தர்கள் மனம் நோகும்படி நடந்து கொண்டார்.

நீதிமன்ற வளாகத்துக்குள் அனுமதியின்றி கைத்தொலைபேசியுடன் வந்து விதிமுறைகளுக்கு மாறாக நடந்து கொண்டதுடன் நீதிமன்றையும், சட்டத்தரணிகளையும் அவமதிக்கும் முறையில் நடந்து கொண்டுள்ளார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோம்.

குறித்த அவமதிப்பு நடவடிக்கை குறித்து ஜனாதிபதி, நீதியமைச்சர், கிழக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோருக்கு எழுத்துமூலமும் தெரிவித்துள்ளோம்- என்றனர்.

இதேவேளை சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றில் முன்னிலையான உபதவிசாளர் ஆரியவதி கலப்பத்தியை விளக்கமறியலில்வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருப்பதாக பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்தார். (ச)

சேனைப் பயிர்ச்செய்கை பாதிப்பு

ரொட்டவெள மக்கள் கவலை

திருகோணமலை,ஜூன்1

திருகோணமலை,ரொட்டவெள பகுதியில் பரம்பரை பரம்பரையாக மேற்கொள்ளப்பட்டு வந்த சேனைப் பயிர்ச்செய்கையை தற்போது மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதாக அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சேனைப்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்த இடங்களில் இம்முறை அதனை முற்றாக தடுக்கும் நோக்கில் வனவள அதிகாரிகள் செயற்பட்டு வருவதாக அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அரச ஊழியர்கள் சேனைப் பயிர்ச்செய்கையை மேற் கொள்ளுவதில்லை. தொழிலின்றி தவிக்கும் அப்பாவிகளே சேனைப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர். பலவருடகாலமாக சேனைப்பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வயிற்றுப் பசியை போக்கும் குடும்பங்களை அனுசரித்து வருபவர்களின் வயிற்றில் அடிப்பது அதிகாரிகளா? அல்லது அரசா? என அப்பாவி மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

உண்பதற்கு உணவை அரசு தந்தால் தாங்கள் காட்டுக்குக்குச்சென்று தேன் எடுக்கவோ,கொல்லி வெட்டவோ செல்ல வேண்டியதில்லை என்று மக்கள் ஆவேசத்துடன் கூறுகின்றனர்.

எனவே, அரசியல்வாதிகள், அரச உயரதிகாரிகள் அப்பாவி மக்களின் வயிற்றுப் பசியை போக்கா விட்டாலும் பரவாயில்லை. தாங்கள் தங்கள் குடும்பங்களுடன் இணைந்து சேனைப்பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளுவதற்கு இடையூறு விளைவிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (ச-40)

கருத்தரங்கு

திருகோணமலை,ஜூன்1

திருகோணமலை பொலிஸ் நிலையத்தில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் நலன் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் களுக்கான மனித உரிமைகள் விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

திருகோணமலை எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் மனித உரிமைகள் பிரிவின் ஏற்பாட்டில் எகெட் கரித்தாஸ் நிலையத்தின் மனித உரிமைகள் பிரிவின் இணைப்பாளர் க.சூரியகுமாரியின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் 40 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டார்கள்.

எகெட் கரித்தாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் பிரான்சிஸ் சேவியர் டயஸ் கருத்தரங்கை ஆரம்பித்து வைத்தார். (ச)

அரசுடன் இணைந்த அடிவருடிகளுக்கு தமிழ் மக்கள் தக்க பாடம் புகட்டுவர்

கல்முனை மாநகர சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

அம்பாறை, ஜூன் 1

தன் தலைவனையே காட்டிக் கொடுத்துவிட்டு, அரசிடம் மண்டியிட்டு அரசின் அடிவருடிகளாகவுள்ளவர்களுக்கு தமிழ்மக்கள் தக்க பாடம் புகட்டுவர் என்று கல்முனை மாநகர சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஹென்றி மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக் கட்சியின் 14ஆவது தேசிய மாநாட்டில், தமிழீழ விடுதலை இயக்கம் சார்பில் கலந்துகொண்டு வாழ்த்துரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழரசுக் கட்சியின் 14ஆவது தேசிய மாநாடு மட்டக்களப்பு மண்ணில் இவ்வளவு சிறப்பாக நடைபெறுவது பெரு மகிழ்வைத் தருகின்றது.

இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மாநாட்டைக் குழப்புவதற்கு நம் சமூகத்தின் புல்லுருவிகளெடுத்த எந்த முயற்சியும் பயனளிக்காது, இத்தனை சிறப்பாக மாநாடு நடைபெற்றுள்ளது.

தன் தலைவனையே காட்டிக்கொடுத்துவிட்டு, அரசிடம் மண்டியிட்டு, அரசின் அடிவருடிகளாகத் திகழும் இவர்களுக்கு நம் தமிழ் மக்கள் எதிர்காலத்தில் தக்க பாடத்தைப் புகட்டவுள்ளனர். அப்போது தமிழினத்தின் துரோகிகள் யார், தியாகிகள் யாரென்பது வெளிச்சத்துக்கு வரும்.

நம் மண்ணில் நடந்த முப்பது வருட ஆயுதப் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த இந்தத் துரோகிகளுக்கு தமிழினத்தைப் பற்றிப் பேச என்ன உரிமையுள்ளது.

கடந்த இரு வருடங்களுக்கு முன்னர் தமிழரசுக் கட்சித் தலைவர் சம்பந்தன் நான் கல்முனை மாநகரசபை எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சமயம் என் பிரேரணையை ஏற்று கல்முனை மாநகரசபைக்கு பெரும் கௌரவம் அளித்ததை இன்று நினைத்துப் பார்க்கின்றேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கட்டுப்பாடுகள் உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். எத்தகைய கருத்து வேறுபாடுகள், பிரச்சினைகள் வரினும் அவற்றைப் பூட்டிய கதவுக்குள் கலந்து பேசித் தீர்வுகளைக் காண வேண்டும்.

அதைவிட்டுப் பத்திரிகைகள் மூலமாக அறிக்கையென்றும் கருத்து என்றும் சொல்ல விளைவது ஆரோக்கியமான விடயமல்ல. இத்தகையோர் மீது எதிர்காலத்தில் தலைமை கண்டிப்பான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தயங்கக் கூடாது -என்றார். (ச-30)

கைக்குண்டுடன் மூவர் கைது

திருகோணமலை,ஜூன்1

திருகோணமலை - உப்புவெளிப் பகுதியில் கைக்குண்டுடன் இரு ஆண்களும் ஒரு பெண்ணும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உப்புவெளி பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற விசேட தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது இவர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் உப்புவெளி பொலிஸ் நிலையத்தில் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர். (ச)

திருமலையில் ஜூலையில் கண்காட்சி

திருகோணமலை, ஜூன் 1

திருகோணமலை மாவட்டத்தின் இயற்கை அழகையும் உள்ளூர் வளங்களையும் திறமைகளையும் ஊக்குவிக்கும் மாபெரும் கண்காட்சி எதிர்வரும் ஜூலை மாதம் 4ஆம், 5ஆம், 6ஆம், 7ஆம் திகதிகளில் திருகோணமலை டச்சு விரிகுடா கடற்கரையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் மூத்த ஊடக வியலாளர்களுக்கு கௌரவிப்பும், விருது வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது என்று லவிங் ரிங்கோ செயற்பாட்டுக்குழுவின் பணிப்பாளர் ஏ.யூ.எல்.ஏ.ஹல்மி தெரிவித்தார்.

30 ஆண்டு காலமாகப் போரில் வாழ்ந்த கிழக்கு மக்களின் மன நிலையில் எண்ணங்களிலும் ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டு வருவதே இந்த லவிங் ரிங்கோவின் நோக்காக அமைகிறது என்று அவர் கூறினார்.

(ச-40)

கடலரிப்பைத் தடுக்க நடவடிக்கை

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா பகுதியில் கரையோர கடலரிப்பை பாதுகாப்பதற்காக தடுப்புச் சுவர் அமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

நீண்டகாலமாக கரையோர மக்களது பிரச்சினையாகவும் எதிர்கொள்ளக் கூடிய அபாயமாகவும் இருந்து வருவது குறித்து கரையோர பாதுகாப்பு திணைக்கள உயரதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது. அண்மையில் கரையோர பாதுகாப்புத் திணைக்கள உயரதிகாரிகள் குழுவினர் இந்தப் பகுதியை பார்வையிட்டதுடன் அதற்கான தடுப்புச் சுவர் அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-40)

பணியாளர்கள் தேவை

யாழ். நகரில் இயங்கும் பிரபல புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் (வயது 18-30 வரை) உடன் தேவை

தொடர்பு:
021 222 5578, 072 7122 944 (சி/271) (45.7.9)

நீங்காத நினைவுகளில் நான்கு ஆண்டுகள்

மண்ணில்
10 ★ 08 ★ 1933

விண்ணில்
16 ★ 05 ★ 2008

திதி :
பூர்வபக்கதுவாதசி

திருமதி யோகம்மா அருளப்பு
(முன்னாள் ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி)

எமது வாழ்வின் புனித ஜோதியே தாயே
உமது பிரிவில் நான்காண்டுகள் நகர்ந்ததம்மா
வலுஇழந்து இருள்மூழ்கி வாழ்கின்றோம்
இங்கே அருட்சோதி வடிவாக நீ மீண்டும் வருக

அன்னை இல்லம்
35/2, இந்துமகளிர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம் (18834)(6 8 9)

குடும்பத்தினர்

மனல் விற்பனைக்கு

கண்டாவளைமனல், பூச்சுமனல், கட்டுமண், கருங்கல் சல்லி, அரிந்தகல் என்பன குறைந்த விலையில் உங்கள் வீடுகளுக்கு கொண்டு வந்து தரப்படும். மற்றும் கொங்கீறீற் கலவை இயந்திரம் வாடகைக்கு விடப்படும்.

உரிமையாளர் - K.T.S. Transport
தொடர்புகளுக்கு - 0770302600 (F-278)

நெற்கபே பொருள்கள் விற்பனைக்குண்டு

கணினி செற், போட்டோ கொப்பி மெசின், ஸ்கானர், கணினி மேசை போன்ற சகல நெற்கபே பொருள்களும் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு

உடன் தொடர்பு கொள்ளவும்:
0776444418 (18864)

யா/மண்டைதீவு மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

இடம் : பாடசாலை பிரதான மண்டபம்
காலம் : 03.06.2012 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப. 3.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்

திரு.சு.கனகரத்தினம்
அதிபர்
(18857)(6-7-8)

விற்பனைக்கு

கடைக்குத் தேவையான சகல உபகரணங்களும் விற்பனைக்குண்டு.
(கணினி, போட்டோகொப்பி இயந்திரம் உட்பட)
தொடர்புகளுக்கு: 075 0964062
(18535)(6-7-8)

பணியாளர் தேவை

★ கம்யூட்டர் அனுபவமுள்ள ஒருவர்
★ காகிதாதிகள் விற்பனையாளர்கள்
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகள் நேரில்
ஸ்ரீ பேப்பர் மாட்
இல. 388 ஆஸ்பத்திரி வீதி,
பஸ்நிலையம் முன்,
யாழ்ப்பாணம்.
(18854) (45.7.9)

தெல்லிப்பழை மேற்கு வீமசிட்டி விந்தகபுரம் சிவகுருநாத சுவாமி ஆலயம்

பதிவு இல: HA/5/JA/1427

மேற்படி ஆலய பாலஸ்தாபன அபிஷேகம் நாளை (02.06.2012) சனிக்கிழமை பி.ப. 4 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகி 03.06.2012 ஞாயிறு வைகாசி விஷாக சுபநட்சத்திரத்தில் காலை 7 மணி முதல் 8.30 மணிவரை நடைபெறவுள்ளது.

அனைத்து எம்பெருமான் அடியார்களையும் பங்குபற்றி திருவருள் பெற்றுய்யும் வண்ணம் வேண்டுகிறோம்.

(18787) (6,9,10) ஆலய பரிபாலன சபையினர்

மரண அறிவித்தல்

சின்னத்தம்பி இராசானந்தன்

(முன்னாள் பொது முகாமையாளர் யாழ்.மாவட்ட அரிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்)



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், கனடாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்டிருந்த சின்னத்தம்பி இராசானந்தன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவன்) நேற்று முன்தினம் (30.05.2012) புதன்கிழமை காலை கனடாவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மலாயன் பென்சனியர் சின்னத்தம்பி- அரியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகேந்திரம் (முன்னாள் புகையிரத நிலைய அதிபர்)-சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், தங்கலட்சுமியின் (தங்கம் ரீச்சர்-உரும்பிராய் இந்துக் கல்லூரி முன்னாள் ஆசிரியை) பாசமிகு கணவரும், அனகனின் பாசமிகு தந்தையும், யாழினியின் மாமனும், மீனுகாவின் பேரனும், காலஞ்சென்றவர்களான திரவியம், சர்வானந்தன், பரமானந்தன், Dr.விவேகானந்தன் மற்றும் கிருஷ்ணானந்தன் ஆகியோரின் சகோதரனும், வீரசிங்கம் மாஸ்டர் (ஆஸ்திரேலியா), பத்மாசனி (லண்டன்), சத்தியேஸ்வரி, Dr.மீனலோஜினி, வடிவாம்பிகை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் (03.06.2012) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் கனடா ஒட்டாவாவில் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி.கிருஷ்ணானந்தன்
(சகோதரன், அப்பு மாஸ்டர்)
001-6134915022 (கனடா)

"உமாபதி",
பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு. (18862)

முல்லைத்தீவில்...

புலமைச்சுடர் நடாத்தும்

உதயன்
நாளிதழின்
ஊடக அனுசரனையுடன்

தரம் 5 மாணவர்களுக்கான இலவசக் கருத்தரங்கு

வருடா வருடம் நடாத்தப்படுகின்ற இலவசக் கருத்தரங்கானது இவ்வருடம் முதற்கட்டமாக முல்லைத்தீவு மண்ணில் நான்கு நிலையங்களில் ஒருங்கே நடைபெறவுள்ளது.

பங்குபற்றும் வளவாளர்கள்

திரு. பி. அம்பிகைபாகன் (கொழும்பு)
திரு. ஜி. கஜன் (மன்னார்)
திரு. என். எஸ். தீபன் (வவுனியா)
திரு. ஆர். பிராபாஹரன் (பதுளை)

அனைத்து மாணவர்களும் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இடம்

மு / உடையார்கட்டு மகாவித்தியாலயம்
மு / சிலாவத்தை தமிழ் வித்தியாலயம்
மு / கைவேலி கணேசா வித்தியாலயம்
மு / தண்ணிரூற்று சீ.சீ. பாடசாலை

காலம்	நேரம்
03.06.2012 (ஞாயிற்றுக்கிழமை)	காலை 9 மணி தொடக்கம் பி.ப 4.30 மணி வரை

பங்கேற்கும் மாணவர்களுக்கான வேண்டுகோள்

1. கருத்தரங்கிற்கு பாடசாலைச் சீருடையில் சமூகமளிக்கவும்.
2. குறிப்பிட்ட நேரத்திற்கு சமூகம்தரவும்.
3. மாதிரிப் பரீட்சை நடைபெறும்.
4. பரீட்சை எழுதுவதற்கு தயாராக வரவும்.
5. தங்களுக்கு சிற்றூண்டிகள் வழங்கப்படும்.

வெகுவிரைவில் உங்கள் மாவட்டங்களிலும் எதிர்பாருங்கள்

SPONSORED BY
M. Gowriharan
Member of Redbridge Tamil Society - London

மேலதிக தொடர்புகளுக்கு 071 6182182, 071 6850005

(C609)

அதிபர் மீது மாணவர்கள் தாக்கு

படுகாயங்களுடன் அவர் வவுனியா மருத்துவமனையில் அனுமதி

வவுனியா, ஜூன் 1

வவுனியா முருகனூர் பகுதியில் அமைந்துள்ள சாரதா வித்தியாலய அதிபரும், இலங்கை ஆசிரியர் சங்க வவுனியா மாவட்டக் கிளையின் பொருளாளருமான எஸ். நேசராசா மாணவர்களின் கடும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். இந்தச் சம்பவத்தால் வவுனியா கல்வித் திணைக்கள வட்டாரங்களில் பெரும் பரபரப்பு நிலை தோன்றியுள்ளது. இந்தத் தாக்குதலை பல அமைப்புகளும் கண்டித்துள்ளன.

சம்பவத்தால் வவுனியா கல்வித் திணைக்கள வட்டாரங்களில் பெரும் பரபரப்பு நிலை தோன்றியுள்ளது. இந்தத் தாக்குதலை பல அமைப்புகளும் கண்டித்துள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:-

கோமரசம்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று வந்த சுமார் 10 மாணவர்கள் காதல் விவகாரம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டு பாடசாலை அதிபரினால் இடைநிறுத்தப்பட்டனர். அதில் ஒரு மாணவன் எந்தப் பாடசாலையிலும் இணைய முடியாதவாறு சிவப்பு மையினால் அடையாளமிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த மாணவர்களின் பெற்றோர் இலங்கை ஆசிரியர் சங்க வவுனியா கிளை நிர்வாகத்திடம் வவுனியா தெற்கு வலய கல்விப்பணிப்பாளரிடமும் முறைப்பாடு செய்தனர்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் சம்பந்தப்பட்ட மாணவர்களை கற்பதற்கு அனுமதிக்க வேண்டும் எனவும் சம்மந்தப்பட்ட அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்தச் சூழ்நிலையில் ஆத்திரமடைந்த சிலர் உயர்தர வகுப்பு மாணவர்கள் நேற்றுக் காலை சாரதா வித்தியாலய அதிபர் கடமையில் இருந்தபோது அலுவலகத்துக்குள் அத்து மீறி நுழைந்து அதிபரைத் தாக்கியுள்ளனர். அதனை அடுத்து பாடசாலை மாணவர்களும், ஏனைய ஆசிரியர்களும் எழுப்பிய அபயக்குரலையடுத்து அயலில் உள்ளவர்கள் மாணவர்களைப் பிடித்து தடுத்து வைத்திருந்ததுடன் இது தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கும் முறைப்பாடு செய்தனர்.

இந்த நிலையில் அங்கு வந்த கோமரங்குளம் மகாவித்தியாலய அதிபர் தாக்குதலில் ஈடுபட்ட மாணவர்களை அழைத்துச் செல்ல முயன்றார். ஆனால் அங்கு நின்றவர்கள் அனுமதிக்கவில்லை. பின்னர் விரைந்து வந்த பொலிஸார் மாணவர்கள் அனைவரையும் பாடசாலைகளுக்குச் செல்லுமாறு பணித்ததுடன், தாக்குதலுக்கு உள்ளான சாரதா வித்தியாலய அதிபரையும் தாக்குதல் நடத்திய மாணவர்களைக் காப்பாற்ற முனைந்த கோமரசங்குளம் மகாவித்தியாலய அதிபரையும் உடன் வவுனியா பொலிஸ் நிலைத்திற்கு வருமாறு பணித்தனர்.

இந்தத் தாக்குதலில் ஈடுபட்ட அனைவரும் பாடசாலைச் சீருடை மற்றும் பாடசாலை கழுத்துப் பட்டி என்பவற்றை அணிந்திருந்தனர் என்று சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தாக்குதலுக்குள்ளாகிப் படுகாயமடைந்த அதிபரும் இலங்கை ஆசிரியர் சங்க வவுனியாக் கிளையின் பொருளாளருமான எஸ். நேசராசா வவுனியா பொலிஸ் நிலையத்திற்குச் சென்று சம்பவம் தொடர்பாக முறைப்பாடு செய்துள்ளதுடன் தற்போது வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

(க-400-402)

இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டிக்கிறது தாக்குதலை

இலங்கை ஆசிரியர் சங்க வவுனியா கிளைச் செயலாளர் நேசராஜா தாக்கப்பட்டமையை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பாக அச் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளதாவது-

இலங்கை ஆசிரியர் சங்கம் வவுனியாக் கிளையின் செயலாளரும், வவுனியா முருகனூர் சாரதா வித்தியாலய அதிபருமான பா.நேசராஜா பாடசாலையில் வைத்து மாணவர்களால் தாக்கப்பட்டுள்ளார். பிறிதொரு பாடசாலை மாணவர்களே தாக்குதலை மேற்கொண்டுள்ளனர். மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக குரல் கொடுத்ததாலேயே நேசராஜா பிற மாணவர்கள்மூலமாகத் தாக்கப்பட்டார். இதனை எமது சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

தாக்குதலை மேற்கொண்டவர்கள் மற்றும் அதற்குத் தூண்டுதலாக இருந்தவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும்-என்று தெரிவித்துள்ளார்.

(4-3)

சூது விளையாட்டில் சிக்கித் தவிக்கும் மன்னார் பெரிய கரிசல் கிராமம்

மன்னார் பெரிய கரிசல் கிராமத்தில் சூது விளையாட்டு அமோகமாக நடைபெறுவதால் முழுக் கிராமத்திலும் பல்வேறு பிரச்சினைகள் தலைதூக்கியுள்ளன.

மன்னார்-தலைமன்னார் பிரதான வீதியில் இந்தப் பெரிய கரிசல் கிராமம் அமைந்துள்ளது. இங்கு 250 முஸ்லிம் குடும்பங்களும் 10 தமிழ் குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன.

இந்தச் சூது விளையாட்டில் ஈடுபடும் குடும்பத் தலைவர்கள் மனைவி, பிள்ளைகளது நகைகளை விற்றும் காணி உறுதிகளை ஈடுவைத்தும் பணத்தைப் பெற்று இந்த விளையாட்டில் ஈடுபடுகின்றனர். சிலர் வீட்டிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருள்களை விற்றும் இதில் ஈடுபடுகின்றனர்.

இதனால் குடும்பங்களில் நாளாந்தம் பிரச்சினைகள் இடம் பெற்று வருகின்றன. மேலும் சிலரின் மனைவி, பிள்ளைகள் தற்கொலைக்கு முயற்சித்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன. குடும்பநிலை காரணமாகச் சில பிள்ளைகள் பாடசாலையைவிட்டு விலகியுள்ளனர்.

மேலும் குடும்பத் தலைவர்கள் முழு நேரமும் சூதாட்டத்தில் ஈடுபடுவதால் அவர்களைச் சார்ந்த குடும்பங்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

எனவே உரிய அதிகாரிகள் உடனே செயல்பட்டு இந்தச் சூது விளையாட்டை உடனடியாக நிறுத்துவதோடு, சூது விளையாட்டினால் பாதிக்கப்பட்டு வரும் குடும்பங்களுக்கு மறுவாழ்வை வழங்குமாறும் பாதிக்கப்பட்டவர்கள் பொது அமைப்புக்களின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

அடாத்தாகப் பயிரிட்டவர்களுக்கு எதிராகக் கடும் தீர்மானம்

அக்கராயன், ஜூன் 1

சிறுபோக நெற்செய்கையின் போது குடமுருட்டிக் குளத்தின் கீழ் அடாத்தாகப் பயிரிட்டவர்கள் காலபோகத்தின் போது நீதிமன்றஆணையுடன் வந்தாலே பயிர்ச்செய்கையில் ஈடுபடமுடியுமெனத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது குடமுருட்டிக் குளத்தின் கீழ் சிலர் அடாத்தான வகையில் சிறுபோகச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் ஏனையோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் பூநகரிப் பிரதேச செயலர் தலைமையில் சின்னப் பல்லவராயன் கட்டில் இடம்பெற்ற கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

சின்னப் பல்லவராயன்கட்டுக் கமக்கார அமைப்பின் விதிமுறைகளை மீறி அடாத்தான வகையில் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவர்களே நீதி மன்றம் சென்று தீர்வினைப் பெற்ற பின்னே பயிர்ச் செய்கையில் ஈடுபடமுடியுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (க-18)

தண்ணீரூற்றில் ஆயுததாரிகள் கொள்ளை

முல்லைத்தீவு தண்ணீரூற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை 3.45 மணியளவில் வீடொன்றுக்குள் புகுந்த கொள்ளையர்கள் நகை பணம் என்பவற்றை கொள்ளையிட்டுள்ளனர்.

இவர்கள் துப்பாக்கி கத்தி போன்ற ஆயுதங்களுடன் முகமூடிகளுடன் வந்ததாகவும் வீட்டில் உள்ளோரை மிரட்டி 18 பவுண், 15 ஆயிரம் ரூபா பணம் என்பவற்றை அபகரித்துச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மீண்டும் புதுப்பொலிவுடன் உருத்திரபுரம் ம.வித்தி

கிளிநொச்சி,ஜூன் 1

கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயம் மீண்டும் புதுப்பொலிவுடன் தனது கல்விப் பணிகளை ஆற்றி வருவதாகப் பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாடசாலையின் 2012 ஆம் ஆண்டுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்ற போது பாடசாலை அதிபர் வெளியிட்ட அறிக்கையில் கடந்த 1950 ஆம் ஆண்டு 40 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையானது இன்று பல்வேறு சாதனைகளைப் படைத்துள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு இன்று 470 இற்கும் மேற்பட்ட மாணவர்களுடன் தனது கல்விப் பணியை ஆற்றி வருகின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பாடசாலையில் கல்வி கற்றுவரும் மாணவர்களின் பரிசில் நாள் நிகழ்வு ஆண்டு தோறும் மே மாதத்தில் நடைபெற்று வருகின்றது. இதனடிப்படையில் 2012 ஆம் ஆண்டுக்கான பரிசில் நாள் நிகழ்வுகள் அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகவும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் சிறப்பு விருந்தினராகவும், கோட்டக் கல்வி அதிகாரி அ.அமிர்தலிங்கம் எஸ்ஜேசி/87 நிறுவன ஒருங்கிணைப்பாளர் ஆ.முருகானந்தன், உருத்திரபுரம் கிராம அலுவலர் ம.பாலகுமாரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

(க-6)

துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி

கொக்குவில் நியூ லயன்ஸ்

விளையாட்டுக் கழகம் நடாத்தும் 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டி நடைபெறவுள்ளது.
விண்ணப்ப முடிவுத் திகதி- 10.06.2012.

(சி/271)
பிரகாந்த் பலாலி வீதி, திருநெல்வேலி. 0212223184
பாக்கியா காகிதாதிகள் கொக்குவில் சந்தி
Sports world கஸ்தூரியார் வீதி, ராஜா தியேட்டர் அருகில்

கண்ணீர் அஞ்சலி

திருமதி மஞ்சுளா உதயகுமார்
(லிகிதர்- ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்)

ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தால் நிர்வகிக்கப்படும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் வளர்ந்து ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் லிகிதராகப் பணி புரிந்து 31.05.2012 அன்று இயற்கை அடைந்த

திருமதி மஞ்சுளா உதயகுமார்

அவர்களின் மறைவையிட்டு துயரடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
அந்தணர்கள், பணியாளர்கள்.

மரண அறிவித்தல்

திருமதி மஞ்சுளா உதயகுமார்

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான அலுவலரான திருமதி மஞ்சுளா உதயகுமார் நேற்று (31.05.2012) வியாழக் கிழமை அதிகாலை துர்க்கா தேவி பாதம் சேர்ந்து விட்டார்.

அன்னார் உதயகுமாரின் (பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை, கரைச்சி தெற்கு, கிழக்கு ப.நோ.கூ சங்கம்) பாசமிகு மனைவியும், தேவிகாவின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான தங்கராசா- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா -புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், நிர்மலா, குலேந்திரன், அகிலன், காலஞ்சென்ற பிரபாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜா, காலஞ்சென்ற மோகன், பிரபாகரன், உதயராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அனோஜன், கிருஷாந்தன், லக்சிகா, பிரணவன் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தெல்லிப்பழை கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் இன்று (01.06.2012) வெள்ளிக்கிழமை மு.ப 11 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கட்டுப்பிட்டி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(18870)

தகவல்: கணவன் (செ.உதயகுமார்).

கண்ணீர் அஞ்சலி

திருமதி மஞ்சுளா உதயகுமார்
(லிகிதர்- ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

எமது இல்லத்தின் மூத்த சகோதரி
திருமதி மஞ்சுளா உதயகுமார்

அன்புக் கரம் நீட்டி
ஆறுதலாய் நீ இருந்து
அன்பு கொண்ட எம் அக்காவாய்
பண்பு கொண்ட தோழியாய்
அனைத்துமாக இருந்துவிட்டு
அந்தரத்தில் எம்மை விட்டுச் சென்றீரோ?
உம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்

துர்க்காபுரம் மகளிர் இல்லம் பிள்ளைகள், பணியாளர்கள்.

(18871)

இதய அஞ்சலி

திருமதி மஞ்சுளா உதயகுமார்
(லிகிதர்- ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

அன்னை சிவத் தமிழ்ச் செல்வியின் ஆற்றுப்படுத்தலில் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் வளர்ந்து கடந்த பதினாறு ஆண்டுகளாக எமது தேவஸ்தானத்தின் வளர்ச்சியில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி எல்லோர் உள்ளங்களிலும் நிறைந்த, இனிய ஆத்மாவின் பிரிவு குறித்து மிகுந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற துர்க்காதேவியைப் பிரார்த்தித்து வணங்குகின்றோம்.

நிர்வாகசபை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
ஆறுதிருமுருகன், தலைவர்.

(18873)

கடற்படையிடம் வெற்றியை தாரைவார்த்த யாழ். அணி

வலி. வடக்கு, ஜூன் 1

யாழ்ப்பாணம் மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியினர் வெற்றி பெறவேண்டிய ஆட்டத்தில், அலட்சியமாக ஆடி அவர்கள் பந்துகளை கூடையில் போடத் தவறியதைப் பயன்படுத்திக்கொண்ட கடற்படையினர் அதனை புள்ளிகளாக்கி வெற்றி பெற்றுள்ளார்கள்.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் யாழ்ப்பாணம் வெற்றிக் கிண்ணத்துக்காக அகில இலங்கை ரீதியாக நடத்திய கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி அண்மையில் யாழ். மத்திய கூடைப்பந்தாட்ட திடலில் இடம் பெற்றது.

இதில் மூன்றாம் இடத்துக்கான போட்டி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம் பெற்றது.

மூன்றாம் இடத்துக்கான போட்டியில் யாழ்.மாவட்ட அணியும் கடற்படை அணியும் மோதிக்கொண்டன. நான்கு கால்பாதிகளைக் கொண்ட இந்த ஆட்டத்தில் முதல் கால்பாதி ஆட்டம் இறுதி வரை விறுவிறுப்பாக அமைந்தது. இந்த ஆட்டம் பார்வையாளர்களையும் ஆதரவாளர்களையும் பெரும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. இறுதி வரை எந்த அணி வெற்றி வாய்ப்பைப் பெறும் என்று தெரியாத நிலையில் ரசிகர்கள் ஆர்வத்துடன் போட்டியைக் கண்டு களித்தார்கள்.

முதல் கால் பாதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட அணி 22:20 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலையில் இருந்த போதிலும் இரண்டாம் கால்பாதி ஆட்டத்தில் கடற்படை அணி 15:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னணி பெற்றது.

மூன்றாம் கால்பாதி ஆட்டத்தில் மீண்டும் கடற்படை அணி தனது அபாரமான விளையாட்டின் மூலம் 16:13 புள்ளிகள் என்ற நிலையில்

தொடர்ந்தும் முன்னணியில் காணப்பட்டது.

ஆனாலும் யாழ் மாவட்ட அணி இதற்கு நான்காவது கால்பாதி ஆட்டத்தில் பதிலடி கொடுத்து கடற்படை அணியைவிடவும் அதிக புள்ளிகளை ஆரம்பத்தில் பெற்றுக்கொண்டது. எனினும் ஆட்டத்தின் இறுதி நிமிடங்களில் யாழ். அணி அலட்சியமாக விளையாடியது. புள்ளிகளைப் பெற கிடைத்த வாய்ப்புகளை யாழ். அணி தவற விட்டது. எனினும் அந்த வாய்ப்புகளை தமக்குச் சாதகமாக மாற்றிக்கொண்ட கடற்படை அணியினர் இறுதி நிமிடத்தில் வெற்றி வாய்ப்பை யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட அணியிடமிருந்து தட்டிப்பறித்து தம்வசமாக்கினர்.

போட்டியின் முடிவில் கடற்படை அணி 64:62 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (ங-23-86)

நடுவரைத் தாக்கிய அணிக்கு அபராதம் 15 ஆயிரம் ரூபா

வவுனியா, ஜூன் 1

போட்டியின் போது விதிகளை மீறியமைக்காகவும் நடுவரைத் தாக்கியமைக்காகவும் பட்டாணிச்சூர் அல்ஜீரா விளையாட்டுக்கழகத்துக்கு 15 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக விதிக்கப்பட்டுள்ளது.

இத்தண்டத்தை இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனம் கடந்த செவ்வாய்க்கிழமை விதித்துள்ளது.

அண்மையில் வவுனியா மாவட்ட உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் போது அல்ஜீரா விளையாட்டுக்கழகம் விதிகளுக்கு முரணாக விளையாடியதோடு போட்டிக்கு மத்தியஸ்தம் வகித்த நடுவரையும் தாக்கியது. இதனையடுத்து வவுனியா உதைபந்தாட்டச் சங்கத்தால் அவ்வணிக்கு மூன்று மாத காலத்துக்கு போட்டிகளில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டது.

இதனை ஆட்சேபித்த ஏனைய கழகங்கள் அவ்வணிக்கு மூன்று ஆண்டுகள் தடை விதிக்க வேண்டும் என்றும், தவறும் பட்சத்தில் அவ்வணி பங்கு பற்றும் எப்போட்டிகளிலும் தமது கழகங்கள் பங்குபற்ற மாட்டாது எனவும் வலியுறுத்தின.

இதனையடுத்து இது தொடர்பான மேன்முறையீடு ஒன்று இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்திடம் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில் வவுனியாவுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை வருகை தந்த உயர்மட்டக்குழுவினர் இது தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போது சம்பந்தப்பட்ட கழகத்தினர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அந்த அணியினரின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு குறித்த அணிக்கு 15 ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

இதேவேளை எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் கழகங்கள் விளையாடுவதற்கு ஆயுட் காலத்தடை விதிக்கப்படும் என்றும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. இவ்வாறு முறைதவறி நடந்துகொண்ட கழகம் ஒன்றுக்கு அபராதம் விதிக்கப்படுவது வவுனியாவில் இதுவே முதல் முறை என்றும் கூறப்படுகிறது. (ங-400)

சீன தற்பாதுகாப்புக் கலை அறிமுகம் திறமையானோருக்கு தேசிய வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 1

இலங்கை வூஷூ சம்மேளனத்தினால் நடத்தப்படும் வூஷூ தற்காப்புக் கலை அறிமுக நிகழ்வும், பயிற்சி முகாமும் நாளை 2 ஆம் திகதி சனிக்கிழமை முதல் 4 ஆம் திகதி திங்கட்கிழமை வரை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாளை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ள பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்புபவர்கள் உரிய ஆயத்தங்களுடன் வருகை தர வேண்டும் என்றும், பயிற்சிகளின் போது திறமையை வெளிப்படுத்துபவர்கள் தேசிய வூஷூ அணியில் பங்குபெறுவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு என்றும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை வூஷூ சம்மேளனத்தின் தலைவரும் பயிற்சிகளின் போது திறமையை வெளிப்படுத்துபவர்கள் தேசிய வூஷூ அணியில் பங்குபெறுவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு

கலை, கலாசார விவகாரங்களுக்கான அமைச்சருமான ரீ.பி.ஏக்கநாயக்கா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுகளுக்கு இலங்கைக்கான சீனத் தூதரகம் அனுசரணை வழங்கவுள்ளது.

சர்வதேச வூஷூ மத்தியஸ்தரும், இலங்கை வூஷூ சம்மேளனத்தின் செயலாளருமாகிய சீபூ. மானல் தர்மகீர்த்தி தலைமையில் ஆசிய சம்பியன்களான இலங்கை வூஷூ அணியின் பயிற்றுநர்குழுவும், வீரர்களும் பயிற்சிகளை வழங்கவுள்ளனர். (ங)

வேகம் காட்டத் தயார்...

வடமாகாண கல்வித்திணைக்களத்தால் நடத்தப்பட்ட வேகநடைப்போட்டியில் புறப்படுவதற்குத் தயாராகக் காத்திருக்கும் வீரர்கள். (ங-23)

வலிகாமம் வலய தடகள, பெருவிளையாட்டு முடிவுகள்

நீளம் பாய்தல்

குணபாலசிங்கம் பிரவீன் (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி), அல்போன்ஸ் சபிதாஸ் (இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி), உதயகுமார் அகிலன் (அளவெட்டி அருணோதயக் கல்லூரி).

முப்பாய்ச்சல்

குணபாலசிங்கம் பிரகீன் (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி), ஜெயந்தகுமார் கலிந்தன் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), அல்போன்ஸ் சபிதாஸ் (இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி).

குண்டு எறிதல்

சற்குணராசா செந்தூரன் (இணுவில் மத்திய கல்லூரி), ஸ்ரீதரன் பிரசாத் (சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கு.கணேசன் திருரங்கன் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

தட்டெறிதல்

சற்குணராசசர்மா சண்மதுரன் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), சற்குணராசா செந்தூரன் (இணுவில் மத்திய கல்லூரி), அன்ரனி அலென் (இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி).

ஈட்டி எறிதல்

சற்குணராசா செந்தூரன் (இணுவில் மத்திய கல்லூரி), எஸ்.பிரதீபன் (தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி), சற்குணசிங்கம் சஜீவ் (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

4X100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்

அளவெட்டி அருணோதயக் கல்லூரி, இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி.

4X400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்

இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரி, அளவெட்டி அருணோதயக்கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான பெரு விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

கூடைப்பந்தாட்டம் 19 வயது

மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, உடுவில் மகளிர் கல்லூரி.

மென்பந்து கிரிக்கெட் 19 வயது

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை.

மேசைப்பந்தாட்டம் 15 வயது

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

மேசைப்பந்தாட்டம் 19 வயது

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, அளவெட்டி அருணோதயக் கல்லூரி, ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை.

சதுரங்கம் 15 வயது

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி, அளவெட்டி அருணோதயக் கல்லூரி.

சதுரங்கம் 19 வயது

அளவெட்டி அருணோதயக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

பூப்பந்தாட்டம் 15 வயது

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

பூப்பந்தாட்டம் 19 வயது

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி.

கரம் 15 வயது

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை, உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்.

கரம் 19 வயது

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம், மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, வயாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.

ஹொக்கி

உடுவில் மகளிர் கல்லூரி, பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை, வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி.

உடற்பயிற்சி

மானிப்பாய் மகளிர் கல்லூரி, தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை

ரெனிஸ்

வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி.

(ங-86)

(முற்றும்)

மம்தா பானர்ஜியின் தலையில் முத்தமிட்ட ஷாருக்கான், அவரையும், மாநில ஆளுநர் நாராயணனையும் நடனமாட அழைத்தார். அவர்கள் முதலில் மறுத்தனர். ஆனால், பிடிவாதமாக இருவரது கைகளையும் பிடித்தவாறு நடனம் ஆடினார்.

"ஹெல்கேட்"டுடன் ஊரை சுற்றப் போகும் டோனி



மோட்டார் சைக்கிள் பிரியரான டோனி, ரூ. 28 லட்சம் ரூபாய் மதிப்பிலான " ஹெல்கேட்" என்ற போர் ரக மோட்டார் வாகனத்தை இறக்குமதி செய்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் டோனிக்கு, மோட்டார் சைக்கிள் என்றால் கொள்ளை பிரியம். இவரிடம் "காவாசாக்கி இசட் எக்ஸ்14", "ஹார்லி-டேவிட்சன்" உள்ளிட்ட 22 நவீன மோட்டார் சைக்கிள்கள் உள்ளன. இந்த வரிசையில் புதிதாக சுமார் ரூ. 28 லட்சம் மதிப்பிலான " எக்ஸ் 132 ஹெல்கேட்" என்ற மோட்டார் சைக்கிளை அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்துள்ளார். தென் கிழக்கு ஆசியாவிலேயே, இந்த புயல் வேக மோட்டார் சைக்கிளை வாங்கியுள்ள முதல் நபர் என்ற பெருமை பெறுகிறார் டோனி. விளையாட்டு வீரர்களில் இங்கிலாந்து கால்பந்து நட்சத்திரம் பெக்காமிடம் இந்த வகை மோட்டார் சைக்கிள் உண்டு.

புதிய மோட்டார் சைக்கிள் குறித்து டோனியின் உறவினர் கவுதம் குப்தா கூறுகையில், ஐ.பி.எல்., தொடரின் தொடக்கத்தில் "ஹெல்கேட்' மோட்டார் சைக்கிளை இறக்குமதி செய்தார் டோனி. தற்போது டெல்லி சென்றுள்ள இவர், இந்த மோட்டார் சைக்கிளை மிக விரைவில் ரஞ்சிக்கு எடுத்து வர உள்ளார், என்றார். (5)

இலாபம்

180 கோடி

ஐ.பி.எல். ஆட்டத்தில் பல சர்ச்சைகள் நிகழ்ந்தாலும், 20 லட்சம் ரிக்கெட்டுக்கள் வரையில் இந்தத் தொடரில் மாத்திரம் விற்கப்பட்டுள்ளது. அத்துடன் தொலைக்காட்சிகள் மூலம் 16 கோடி பேர் ஆட்டத்தைப் பார்வையிட்டுள்ளனர்.

ஐ.பி.எல். தொடரில் சம்பியன் பட்டம் வென்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணிக்கு ரூ.10 கோடி [இந்திய மதிப்பில்] பரிசாக கிடைத்தது. ஐ.பி.எல். கிண்ணத்தை வென்றதால் அதிக லாபம் அடையும் அணியாக கோல்கத்தா இருக்கும். கோல்கத்தா அணி இந்த ஆண்டு ரூ.100 கோடி வரை செலவழித்து உள்ளது. அணித்தலைவர் காம்பீர், கலிஸ், சுனில் நரைன், யூசுப் பதான் ஆகிய 4 வீரர்களுக்கு மட்டுமே ரூ.50 கோடி வரை செலவழித்து உள்ளது.

இந்த செலவழித்த தொகைக்கு பல மடங்கு லாபம் கிடைக்கும் என்று கருதப்படுகிறது. சம்பியன் என்பதால் அடுத்த ஆண்டு அந்த அணியின் 'ஸ்பொன்சர்' தொகை எல்லாம் அதிகமாக இருக்கும். ரிக்கெட் விற்பனை மற்றும் 18 'ஸ்பொன்சர்கள்' மூலமும் கோல்கத்தா அணிக்கு இந்த முறை வருமானம் கிடைக்கிறது. இந்த ஐ.பி.எல். ஆட்டத்தில் பல்வேறு சர்ச்சைகள் நிகழ்ந்தாலும் இலாபம் மட்டும் எந்த வகையிலும் பாதிக்கப்படவில்லை. ஸ்பொட் பிக்சிங், பாலியல் விவகாரம், ஷாருக்கான் விவகாரம், போதை விருந்தில் ஐ.பி.எல். வீரர்கள் 2 பேர் பங்கேற்று கைதானது ஆகியவற்றால் இந்த ஐ.பி.எல். தொடரில் மிகுந்த சர்ச்சை ஏற்பட்டது. ஆனால் எந்தவித சர்ச்சையாலும் ஐ.பி.எல். ஆட்டத்துக்கு பாதிப்பு ஏற்படவில்லை. இந்தத் தொடரை தொலைக்காட்சி மூலம் 16 கோடி பேர் பார்த்துள்ளனர். மொத்தம் 20 லட்சம் ரிக்கெட்டுகள் விற்றுள்ளன. விற்பனையான ரிக்கெட்டுகளில் மொத்த மதிப்பு ரூ.180 கோடியாகும். [5]

கொண்டாட்டத்தால் திண்டாட்டம்!

முதல்வருடன் ஷாருக் குத்தாட்டம்

ஐ.பி.எல்., கிண்ணம் வென்ற கொல்கத்தா அணிக்கு மேற்கு வங்க அரசு நடத்திய பாராட்டு விழாவில் அரசியல் புகுந்து விளையாடியது. முதல்வர் மம்தா பானர்ஜி, சர்ச்சைக்குரிய பொலிவுட் நடிகர் ஷாருக்கானுடன் சேர்ந்து குத்தாட்டம் போட்டது பார்வையாளர்களை முகம் சுழிக்க வைத்தது. போதிய பாதுகாப்பு வசதிகள் செய்யப்படாத நிலையில், லட்சம் பேர் ஈடன் கார்டன் மைதானத்தில் திரண்டதால் பொலிஸார் அடித்து கட்டுப்படுத்த வேண்டிய படுமோசமான நிலைமை ஏற்பட்டது.

ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி, முதன் முறையாக கிண்ணத்தை வென்றது. இந்த அணி வீரர்கள் கொல்கத்தா திரும்பினர். வெளி நாட்டு வீரர்கள் கொல்கத்தா செல்லவில்லை.

போக்குவரத்து பாதிப்பு:

கடந்த 29 ஆம் திகதி காலை 11.10 மணிக்கு, கொல்கத்தா அணி வீரர்கள், திறந்த பஸ்சில் ஹம்ஜா பகுதியில் இருந்து கிண்ணத்துடன் ஊர் வலமாக புறப்பட்டனர். இதில் பங்கேற்க, மாநிலத்தின் பல பகுதிகளில் இருந்தும் 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட ரசிகர்கள் திரண்டதால், போக்கு வரத்து கடுமையாக பாதிக்கப் பட்டது.

மாநில அரசின் தலைமை யகம் அமைந்துள்ள 'த ரைட் டர்ஸ்' கட்டத்துக்கு வந்த போது, முதல்வர் மம்தா பானர்ஜி, வீரர்களை வரவேற் றார். பின் அங்கிருந்து ஊர் வலம் ஈடன் கார்டன் மைதா னத்தை அடைந்தது.

பரிதாப ரசிகர்கள்:

அனுமதி இலவசம் என்ப தால், 67 ஆயிரம் இருக்கை கள் கொண்ட மைதானம் நிரம்பி வழிந்தது. இது தவிர, உள்ளே செல்ல முடியாமல் 30 ஆயிரத்துக்கும் மேற்பட் டோர், கடும் வெயிலிலும், வெளியில் காத்திருந்தது பரி தாபமாக இருந்தது.

ஷாருக்கான் நடனம்:

மைதானத்தில் அமைக் கப்பட்டு இருந்த மேடையில் பாடல்கள் இசைக்கப்பட்டு நடன நிகழ்ச்சி நடந்தது. கொல்கத்தா அணி உரிமை யாளரும் நடிகருமான ஷாருக் கான் தனது பங்கிற்கு குத்தாட் டம் போட, அரசு விழா தானா என்ற சந்தேகம் ஏற்பட்டது.

சர்ச்சை நடிகருடன்:

திடீரென, மம்தா பானர் ஜியின் தலையில் முத்தமிட்ட ஷாருக்கான், அவரையும், மாநில ஆளுநர் நாராயண னையும் நடனமாட அழைத் தார். அவர்கள் முதலில் மறுத் தனர். ஆனால், பிடிவாதமாக இருவரது கைகளையும் பிடித்த வாறு நடனம் ஆடினார். இந்தத் தொடரில் மைதானத் தில் புகை பிடித்தல், போதை யில் மும்பை கிரிக்கெட் சங்க நிர்வாகிகளுடன் மோதலில் ஈடுபட்ட ஷாருக்கானுடன் சேர்ந்து மம்தா ஆடியது புதிய சர்ச்சைக்கு வழிவகுத்தது.

மாநில அரசு சார்பில் வீரர்களுக்கு, பொன்னாடை போர்த்தி, தங்கச் சங்கிலி அணிவித்தார்.

பொலிஸார், ரசிகர்கள் மோதல்

இதனிடையே வெளியில் காத்திருந்த ரசிகர்கள், அங் கிருந்த தடுப்புகளைத் தாண்டி, உள்ளே செல்ல முற்பட்ட னர். இதற்கு பொலிஸார் மறுத்தனர். இதனால் பெரும் தள்ளு முள்ளு ஏற்பட்டது. இதையடுத்து பொலிஸாருடன் மோதல் ஏற்பட்டது. வெறுப் படைந்த ரசிகர்கள் தடுப்பு களை உடைத்து எறிந்தனர்.

கங்குலியை காணவில்லை

வெற்றி விழாவில் கொல் கத்தா தாதா கங்குலி பங்கேற் கவில்லை. நேற்று முன்தினம் திடீரென, குடும்பத்துடன் லண்டன் சென்று விட்டார். இது ஏற்கனவே திட்டமிடப் பட்ட பயணம் என்று, அவ ரது அலுவலகத்தில் இருந்தவர் கள் தெரிவித்தனர்.

இருவர் மட்டுமே வங்காளி

ஐ.பி.எல்., கிண்ணத்தை கொல்கத்தா அணி, வென் றதை கொண்டாடிய முதல்வர் மம்தா பானர்ஜி ஒரு விட யத்தை மறந்து விட்டார். இறுதி ஆட்டத்தில் விளையாடிய 11 பேரில் மனோஜ் திவாரி, லட் சுமி ரத்தன் சுக்லா மட்டுமே மேற்கு வங்கத்தை சேர்ந்த வர்கள். அணித்தலைவர் காம் பீர் (டில்லி), பிஸ்லா (அரி யானா), கலிஸ் (தென்னாபி ரிக்கா), யூசுப் பதான் (குஜராத்), சகிப் அல் ஹசன் (பங்களா தேஷ்), ரஜத் பாட்யா (டில்லி), அப்துல்லா (உத்தர பிரதே சம்,), நரைன் (மேற்கிந்தியத் தீவுகள்), பிரட் லீ (ஆஸ்தி ரேலியா) ஆகிய மற்ற 9 வீரர் கள் கொல்கத்தாவுக்கு தொடர்பு இல்லாதவர்கள்.

தவறான முன்னுதாரணம்

ஐ.பி.எல்., என்பது பி.சி.சி.ஐ., என்ற தனியார் அமைப்பு நடத்தும் போட்டி. இதில் மாநிலத்துக்கு எவ்வித தொடர்பும் இல்லை. இதற்கு முன் ராஜஸ்தான், சென்னை அணிகள் கிண்ணம் வென்ற போது, இது போன்று ஆடம் பர விழா நடத்தப்படவில்லை. தற்போது மம்தா தவறான முன்னுதாரணத்தை ஏற்படுத்தி விட்டார். (5)

நரைனுக்கு டெஸ்ட் தொடரில் வாய்ப்பு

இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான தொடரிலிருந்து மேற்கிந்தியத் தீவுகளின் கமர் ரோச் நாடு திரும்பியுள்ளார். காலில் ஏற்பட்ட காயம் காரணமாகவே அவர் நாடு திரும்பவேண்டி ஏற்பட்டுள்ளதோடு, இடம்பெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் ஆட்டம், அதனைத் தொடர்ந்து ஒரு நாள் சர்வதேச தொடர் மற்றும் 'ரி-20' சர்வதேச ஆட்டங்களிலும் கமர் ரோச் பங்குபற்ற மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்துக்கெதிரான முதலாவது ஆட்டத்தில் மிகச்சிறப்பாகப் பந்துவீசிய கமர் ரோச், இங்கிலாந்துத் துடுப்பாட்ட வீரர்களைத் தடுமாறச் செய்திருந்தார். இரண்டாவது ஆட்டத்தில் ஆரம்பத்தில் பந்துவீசத் தடுமாறிய கமர் ரோச், ஏராளமான முறையற்ற பந்துகளை வீசியிருந்தார். எனினும் சுதாகரித்துக் கொண்ட ரோச், பின்னர் ஓரளவு சிறப்பாகப் பந்துவீசியிருந்தார். எனினும் இரண்டாவது ஆட்டத்தின் பின்னர் காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் அவதிப்பட்டிருந்தார்.

இதன் காரணமாக அவரை நாட்டுக்குத் திரும்ப அனுப்ப மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்வாகம் முடிவெடுத்துள்ளது.

இதுவரை நடந்த போட்டிகளில் கமர் ரோச் அற்புதமாகப் பந்துவீசியிருந்தார் எனத் தெரிவித்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயிற்றுவிப்பாளர் ஒற்றிஸ் கிப்ஸன், அவர் நாட்டுக்குத் திரும்பவேண்டி ஏற்பட்டுள்ளதை குறித்து வருத்தமடைவதாகத் தெரிவித்தார்.

கடந்தாண்டு சிறிது தடுமாறியிருந்த பின்னர் முதலில் ஆஸ்திரேலியாவுக்கெதிராகவும், பின்னர் இங்கிலாந்துக்கெதிராகவும் கமர் ரோச் உலகத்தரமான பந்துவீச்சை வழங்கியிருந்ததாகவும் அவர் தெரிவித்ததோடு, கமர் ரோச் மிகவும் முன்னேறிய பந்துவீச்சாளராகக் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

காயமடைந்துள்ள கமர் ரோச்சிற்குப் பதிலாக மாயச் சுழற்பந்துவீச்சாளர் சுனில் நரைன் அறிவிக்கப்பட்டுள்ளார். துப்பாட்ட வீரர்களை திணறடிக்கக்கூடிய பந்துவீச்சாளராகக் கருதப்படும் சுனில் நரைன், அண்மையில் இடம்பெற்று முடிந்த இந்தியன் பிரிமியர் லீக் தொடரில் துடுப்பாட்ட வீரர்களைத் தடுமாறச் செய்ததோடு, தொடரின் நாயகன் விருதையும் வென்றிருந்தார்.

ஆஸ்திரேலிய அணிக்கெதிரான தொடர், இங்கிலாந்து அணிக்கெதிரான டெஸ்ட் தொடர் ஆகியவற்றைத் தவிர்த்த சுனில் நரைன், தான் இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் முழுமையாகப் பங்கேற்க விரும்புவதாகத் தெரிவித்து அந்தத் தொடர் முழுவதிலும் பங்குபற்றி கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் சம்பியன் பட்டத்திற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தார். மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக 8 ஒரு நாள் சர்வதேச தொடர்களிலும், 2 'ரி-20' சர்வதேச தொடர்களிலும் பங்குபற்றியுள்ள சுனில் நரைன், இதுவரை டெஸ்ட் தொடர்களில் பங்கு பற்றியிருக்கவில்லை. (5)

ரைடரைக் கழற்றிவிட்ட நியூஸி

நியூசிலாந்து அணியின் அதிரடித் துடுப்பாட்ட வீரர் ஜெஸி ரைடருக்கு நியூசிலாந்துத் தேசிய ஒப்பந்தம் வழங்கப்படவில்லை. ஜெஸி ரைடரும், நியூசிலாந்து அணி நிர்வாகமும் இணைந்து இந்த முடிவை எடுத்துள்ளன.

எனினும் ஒப்பந்தமற்ற வீரராக மாறுவதற்கான திட்டங்களெவையும் ஜெஸி ரைடருக்குக் கிடையாது என்று ஜெஸி ரைடரின் முகாமையாளரும், அவரது நண்பருமான ஆரொன் க்ளீ தெரிவித்துள்ளார். ஒப்பந்தமற்ற வீரராக மாறி 'ரி-20' வீரராக மாறி வருவது அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்ற போதிலும், அந்தப் பயத்தை அவரது முகாமையாளர் இல்லாமற் செய்தார்.

நியூசிலாந்து கிரிக்கெட் வீரர்களின் வழக்கத்தின் படி ஒவ்வொரு ஆண்டும் அந்த வீரர்கள் பற்றிய நேர்முகத்தேர்வு இடம்பெறுவது வழக்கம். இந்தாண்டுக்கான நேர்முகத்தேர்வின் போதே ஒப்பந்தத்திலிருந்து ஜெஸி ரைடர் விலகுவது குறித்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் ரைடர், அவரது முகாமையாளர், நியூசிலாந்து கிரிக்கெட் வீரர்கள் அமைப்பின் தலைவர், நியூசிலாந்து கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் பணிப்பாளர் ஜோன் புச்சனன், கிரிக்கெட் சபையின் முகாமையாளர் ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நேர்முகத் தேர்வு குறித்துக் கருத்துத் தெரிவித்த நியூசிலாந்துக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி, ஜெஸி ரைடர் சரியான பாதையில் சென்றுகொண்டிருப்பதற்கான அத்தனை ஆதாரங்களும் காணப்படுவதாகவும், எனினும் இன்னமும் முன்னேற்றங்களைச் சந்திக்க வேண்டிய தேவையேற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். (5)

மானிப்பாயில் முதன் முறையாக
German, Swiss, France, Canada
செல்லவுள்ளவர்களுக்கான
Deutsch, French Classes
(டொச், பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் ஆரம்பம்)
German, Swiss, France, Canada இல் குடியுரிமை பெறவுள்ளவர்களுக்கும் உகந்தது)
வகுப்பு ஆரம்பம் :- சனி, ஞாயிறு
நேரம் :- காலை 10.30மணி
(கந்தர்மடம் மற்றும் நெல்லியடியிலும் தனிப்பட்ட வகுப்புக்கள் ஆரம்பம் !!!!)
மேலதிக விபரங்களுக்கு :- (c/277)
UNI ICT Education (Pvt) Ltd,
Jaffna Road, Manipay,
T.P. :- 021 22 55 867 / 0777 110 862
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

கணக்கீடு திரு. பாலகஜன்
(B.com, H.N.Dip-in Acc)
A/L 2014 | தேர்ச்சி -04 காசேடு | A/L 2014
NEC- ஆனைப்பந்தி sat, sun: 7-8 am
புதிய பொருளியற் கல்லூரி (பெருமாள் கோயில் ஆரூகில்) sat, sun: 8-9 am
BPI- குருநகர் mon, fri: 4-5 pm
College of Commerce (சுன்னாகம்) sat, sun: 3-4 pm
ஆரம்பம்- 02.06.2012.சனி
தனிப்பட்ட அனுமதி உண்டு

ஆசிரியர்கள் தேவை
வவுனியா மற்றும் கிளிநொச்சியில்
Dutch - English - Sinhala
கற்பிக்கக்கூடிய தகுதியும். அனுபவமும் உடையவர்கள் 04-06-2012இற்கு முன் உங்கள் விபரங்களை அனுப்பவும்
arimugam.info@gmail.com
0750393776 (18866)

A/L 2014
வர்த்தகப் பிரிவு
கணக்கீடு திரு.தவா சனி, ஞாயி 2pm
பொருளியல் திரு.சண் சனி, ஞாயி 3pm
வணிகக்கல்வி திரு.பிரதீபன் சனி, ஞாயி 4pm
A/L 2013 புதிய அணுமதி யூனிவேர்சல்

வணிகக்கல்வி
S.பிரதீபன் (M.com)
A/L 2014 வணிகஅடிப்படை நாளை 4pm
A/L 2013 வியாபாரம் நாளை 8am
A/L2012/DAY தரித மீட்டல் PAPER நாளை 6am - 8am
யூனிவேர்சல் கந்தர்மடம் (18820)(6-7-8)

கணக்கீடு
A/L 2013 பங்குடமை ஆரம் - நாளை 3.15pm
A/L 2012/DAY பங்குடமை முடிவுக் க/கு PAPER ஆரம் - செவ்வாய் 6am
A/L 2014 காசேடு நாளை 2pm
S.தவா யூனிவேர்சல் (18827)(6-7-8)

A/L 2014, 2013
கலைப்பிரிவு

தமிழ் திரு.குகன்	இந்துநாகரீகம் திரு.ஜெயக்குமார்
அரசியல் திரு. பொன்.சந்துரு	அளவையியல் திரு.துரை திரு. நீதன்
புவியியல் திரு.கரன்	வரலாறு திரு.தாஸ்
மனைப்பொருளியல் திரு.மஜீபன்	விவசாயம் திரு.விஷ்ணு
நாடகஅரங்கு திரு.மங்களேஸ்	பொருளியல் திரு.சண்
இல.கணிதம் திரு.கண்ணன்	வகுப்புக்கள் சனி, ஞாயிறு 7 am

யூனிவேர்சல் கந்தர்மடம் (18824)(6-7-8)

விசேட சலுகை...! இன்றே இணையுங்கள்
பிரிவு- 1 ஆரம்பம் 02.06.2012 நாளை
APTECH COMPUTER EDUCATION INDIA
VIDYA
→ Operating System
→ CPU Architecture
→ MS Office
→ Internet & email
→ Create Web Pages
கணனிக்கற்கை நெறியில் இணைபவர்களுக்கு ஆங்கில அல்லது சிங்கள வகுப்பு இலவசம்
(C/260)
APTECH Computer Eduation, INDIA - Jaffna Branch
Mind Vishion College of International Studies (Pvt.) Ltd.
(Reg No: PV 85546)
No.04, Clock Tower Lane, Navalar Road, Jaffna 0212219456

Professional + Diploma in Pharmacy
உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பையும் வெளிநாட்டில் மேற்படிப்பை தொடரும் சந்தர்ப்பத்தையும் வழங்கும் கே.யு வினது விசேட கற்கைநெறி.M.B.B.S வைத்திய விரிவுரையாளர்கள்.
ஒரு வருடகாலப்பயிற்சி நெறி.
பயிற்சிக் கட்டணம் : 75,000/=.
Call : 0773164617
(C/269)
K.U Educaiton,No 75,Temple Road,Jaffna

மரண அறிவித்தல்

முருகேசு பேரம்பலம்



காரைநகர், ஆயிலியைப் பிறப்பிடமாகவும் தற்போது கனடாவில் மொன்றியலில் வசித்து வந்தவருமாகிய முருகேசு பேரம்பலம் (30.05.2012) புதன்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-அன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், தவமணியின் அன்புக் கணவரும், தவராசா, சிவராசா, செல்வன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கந்தசாமியின் அன்புச் சகோதரனும், தருமராசா, இராசம்மா ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற ஏகநாயகியின் அன்புச் சகோதரனும், சந்திராதேவி, சாந்தநாயகி, சுபாஜினி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
முருகேசு, கந்தசாமி,
குடும்பத்தினர்.

வேம்படி,
காரைநகர்.

(18815 (6,7,10)

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

Diploma in English 2 1/2 Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpulliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
கிழமை நாட்கள் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தங்கள் பதிவுகளுக்கு முந்துங்கள்

Batch - 1: 05.06.2012 9.00 - 12.00
Batch - 2: 05.06.2012 3.00 - 5.00
Batch - 3: 11.06.2012 9.00 - 12.00
(c/242)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.06.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.